Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு 14-3-2007 Issued 14-3-2007

14 மே 2007
சென்னை-600 008
எழும்பூர்
771
04/07/07
04/07/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, செப்டம்பர் 2, 2006—தொகுதி 17—எண் 1

Saturday, the 2nd September, 2006—Volume 17—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V2 11, 31' Pob.
Pob. 17.1,
227437

[Price Rs. 3.00

## 2-9-2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | vii-xii |
| Governor and Council of Ministers | xiii-xvii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxiii-xxxiii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-34 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 5) | 34-64 |
| **2. தகவல் கோரல்** | |
| (அ) சென்னை, வண்டலூர்—கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் அமைக்கும் திட்டம் | 65-96 |
| (ஆ) முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துதல் | 97-112 |
| **3. தன்னிலை விளக்கம்** | |
| முதலமைச்சர் அளித்த விருந்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்துகொண்டது குறித்து | 113-114 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—** | |
| இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 115 |

பக்கங்கள்


**5. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 116

(ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 125

(இ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 145

(ஈ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) 160

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 116–123

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி 116, 121–123

திரு. சி. ஞானசேகரன் 116–117

திரு. கி. ஆறுமுகம் 117

*திரு. மு. பரஞ்ஜோதி 118–119

திரு. சி. கோவிந்தசாமி 119–120

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 120

(ஆ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 123–125

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 123, 124–125




பக்கங்கள்


**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006 125–145

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 126, 140–145

திரு. சி.வி. சண்முகம் 126–131

திரு. டி. சுதர்சனம் 130,132

திரு. சி. ஞானசேகரன் 132, 134

திரு. ஜி.கே. மணி 134–137

திரு. கே. மகேந்திரன் 137–139

திரு. விடியல் எஸ். சேகர் 139–140

(ஈ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006 146–158

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி 146,153–158

திரு. தி. வேல்முருகன் 146–148

திரு. வை. சிவபுண்ணியம் 148–150

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் 150–152

திரு. ப. டில்லி பாபு 152–153

(உ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006 158–160

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் 158,159–160

227437
சென்னை-600 008
நூலகம்



| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஊ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006 | 160–172 |
| மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 161, 170–171,172 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 161–165 |
| திரு. ஜி.கே. மணி | 165–168 |
| திரு. என். நன்மாறன் | 168–169 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 169–170 |
| திரு. து. ரவிக்குமார் | 170 |
| (எ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 172–174 |
| *மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 172–174 |
| (ஏ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 | 174–176 |
| *மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 175,176 |
| (ஐ) இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்பு சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 177–179 |
| மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 177,179 |
| **7. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல் | 176–177 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் | 209 |



| | பக்கங்கள் |
|---|---|
| **8. உரிமை மீறல் பிரச்சினை**— | |
| அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து— | |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 179 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 180 |
| திரு. டி. சுதர்சனம் | 180 |
| திரு. ஜி.கே. மணி | 181–182 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 183 |
| செல்வி கே. பாலபாரதி | 184–185 |
| திருமதி டி. யசோதா | 185–186 |
| திருமதி பி. பத்மாவதி | 186–187 |
| திருமதி ராணி வெங்கடேசன் | 188 |
| திருமதி பெ. கமலாம்பாள் | 188–189 |
| டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி | 189–191 |
| **9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்குவாழ்த்துரைகள்**— | |
| திரு. டி. சுதர்சனம் | 181 |
| திரு. ஜி.கே. மணி | 182 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 183 |
| செல்வி கே. பாலபாரதி | 184 |
| திரு. து. ரவிக்குமார் | 189 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 191–195 |
| **10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்** | 195–209 |
| **11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 210–213 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கூண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன். வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. செய்தித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. உணவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:

தொழிலாளர்கள், மக்கள் தொகை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இரும்பு எஃகுக் கட்டுப்பாடு செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. கைத்தறித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. வணிக வரித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:

வணிக வரிகள்

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. வனத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:

வனம் மற்றும் சின்கோனா

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. **கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27. **ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. **மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. **பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. **கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste land Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 19. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 20. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 21. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 22. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 25. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes. |
| 26. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | .. ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | .. தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | .. தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | .. வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | .. பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | .. ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா | .. நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | .. திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | .. ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | .. சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | .. அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | .. தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | .. திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | .. பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | .. கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | .. தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | .. தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | .. தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | .. செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | .. காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | .. தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | .. முகையூர் |
| 52. | கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. | .. அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | .. தியாகராயநகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | .. மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | .. எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | .. கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | .. தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | .. சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | .. மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | .. குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | .. திருநாவலூர் |
| 64. | குருசாமி, திரு. செ. | .. அந்தியூர் (செ.வ.) |

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. .. மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். .. மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



87. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. .. விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
95. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்றாம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்
106. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். .. முசிறி
108. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்
131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)



133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)

| | | |
|---|---|---|
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் திருமதி | .. ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | .. பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | .. பென்னாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | .. பெருந்துறை |
| 168. | போளூர் வரதன், திரு. ம. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | .. உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | .. திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | .. பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | .. மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |



| | | |
|---|---|---|
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்-1 |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமசந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |

| | | | |
|---|---|---|---|
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | .. | ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. | திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | .. | போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | .. | குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | .. | திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | .. | நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | .. | விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | .. | காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | .. | விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. | கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. | போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. | செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. | பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | .. | தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | .. | பேரூர் |
| 221. | வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 222. | வேல்முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |



| | | | |
|---|---|---|---|
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. | கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. | விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | .. | குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. | ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | .. | இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | .. | மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## ஆவணி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
## 2006 செப்டம்பர் 2, சனிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
*கிறையென்று வைக்கப் படும்"*

*நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**141—**

**மின் விளக்கு வசதி**

*** 75—திரு. என். நன்மாறன்:**

*மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றிலும் மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்குரியது என்றாலும்கூட தங்கள் துறையிலேயிருந்து மின் வாரியத்திற்கு இந்த வினா அனுப்பப்பட்ட காரணத்தால் விடையளிக்க விரும்புகிறேன்.

மதுரை மாநகரில், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தைச் சுற்றி தற்பொழுது High Mast விளக்கு ஒன்றும், ஆறு 40 Watts bulb-களும், இருபத்து நான்கு 250 Watts bulb-களும் தெரு விளக்குகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இவை மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றியுள்ள 4 தெருக்களுக்கும் போதுமான வெளிச்சத்தைத் தருகின்றன.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றிலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து எரிவதில்லை. அந்தத் தெப்பத் திருவிழா நடக்கின்றபோது அவற்றைக் கழற்றி வைப்பார்கள்; மீண்டும் பொருத்தி, எரிய வைக்க வேண்டும். அப்படிச் செய்கிற நேரத்திலே தாமதம் ஏற்பட்டு, நீண்ட தாமதம் ஏற்பட்டு, அங்குள்ள மக்கள் எல்லாம் குறை சொல்லி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்தேன். உடனே, நான் அங்கு இருந்தபோதே, அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அப்போது மின் விளக்குகள் எரிந்தன. பின்னர், திடீரென்று அவை நின்றுபோய்விட்டன. அவற்றிலுள்ள technical mistake–ஐக் கண்டுபிடிப்பதிலே இப்போதுள்ள அதிகாரிகளுக்கு ஏதோ சிரமம் இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, ஒரு தொடர் கவனம் தேவை என்பதற்காகத்தான் இதை எழுதி அனுப்பினேன். அந்தப் பகுதி, மிகவும் ஏழையெளிய பெண்கள் வேலைக்குச் செல்கிற பகுதி. அங்குள்ள அந்த வெளிச்சம் அவர்கள் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பும்பொழுது, பாதுகாப்புக்கு உதவியாக இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து எரிந்து அவை மக்களுக்குப் பயன்தர, உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, மதுரை மாநகராட்சியால், மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றி, தெப்பக் குளத்தை அழகுபடுத்தும்வகையில், 96 அலங்கார விளக்குகள் நிறுவப்பட்டு இருந்ததை, தெப்பத் திருவிழா சமயம், தற்காலிகமாக அவை அகற்றப்பட்டுவிட்டன. அலங்கார விளக்குகள் அமைக்கும் பணி, மீண்டும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

எதிர்காலத்திலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தெரு விளக்குகள், கிராமங்களிலேயும், நகரங்களிலேயும், மாநகராட்சிகளிலேயும் பொருத்தப்படுகின்ற நேரத்தில், மின் கட்டணம் அதிகமாக ஆகின்ற காரணத்தினாலே, மின்சாரம் 40 சதவிகிதம் குறைவான அளவுக்குப் பயன்படுத்தக்கூடிய மின் விளக்குகளை இந்தியாவிலே, பொதுவாக இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருக்காக, இதுகுறித்து ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த விளக்குகள் பொருத்தப்பட்டால், 40 சதவிகிதம் மின் கட்டணமும் குறையும்; அந்த bulb-களுடைய விலையும் மிக மலிவாக இருக்கும். எதிர்காலத்திலே, அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு, அந்த bulb-களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களையும் அழைத்துப் பேசி, உள்ளாட்சித் துறை, மின் துறை, முதலமைச்சர் ஆகியோருடன் கலந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், உண்மையிலேயே மகிழ்ச்சி தருகின்றது. கவியரசு வைரமுத்து அவர்களுடைய இலக்கியப் பேரவையில், கோவிந்தராம் என்கிற ஒரு பொறியாளர் இருக்கிறார். அவர் மாநகராட்சியில் பணியாற்றுகிறபொழுதுதான் இந்த வேலை நடைபெற்றது. அவர் பொறுப்பிலே இருக்கிறவரையிலும், அது எந்தச் சிரமமும் இல்லாமல் நடந்தது. ஆக, இப்போது அவர் ஓய்வு பெற்றுவிட்டார். பேராசிரியராக இருக்கிறார். தேவை ஏற்பட்டால் அதுபோன்ற அறிஞர்களையும், வல்லுநர்களையும் பயன்படுத்தி தொடர்ந்து தட்டுப்பாடில்லாமல் இந்தப் பணி நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2006 செப்டம்பர் 2

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விநியோகத்திலே, ஊராட்சிகளுக்கு, கிராமப்புற ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்தினுடைய கட்டணம் ரூ.3.40 என்று வசூலிக்கப்படுகிறது. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், சில ஊராட்சி மன்றங்களிலே இந்தக் கட்டணம் கட்டுவதற்கே அவர்களிடம் நிதியில்லை. இலவச மின்சாரம் நான் கேட்கவில்லை ஊராட்சிகளுக்கு; இருந்தாலும்கூட, இந்தக் கட்டணத்தைக் குறைத்து, அங்கே வருகின்ற நிதியினைச் சரியான பயன்பாடுகளுக்குப் பயன்படுத்த ஏதாவது வழி உண்டா? அப்படியொரு திட்டம் இருந்தால்—நிச்சயமாக ஊராட்சி மன்றங்களிலே இருக்கிற பெரும் பகுதியான நிதிகள், மின்சாரக் கட்டணத்திற்கே சென்றுவிடுகின்றன என்பதுதான் உண்மை—அந்தமாதிரி திட்டத்தைப் பரிசீலிக்க வாய்ப்புண்டா என்று தங்கள்வாயிலாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மின்சார இலாகா, பல துறைகளுக்கு இலவசமாகவே மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, சில ஊராட்சி மன்றங்களிலே மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்குக்கூட வருவாய் இல்லாமல், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, கடந்த காலத்திலே, 1996–லேயிருந்து 2001 ஆம் ஆண்டுவரையில், முதலமைச்சராக இருந்த இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், மத்திய அரசு, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு வழங்குகின்ற நிதியிலிலேயிருந்து, நலிந்த கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்றவகையில், அந்தப் பணத்திலேயிருந்து ஒரு தொகையை மின் வாரியத்திற்குச் செலுத்தி, எந்தக் காரணத்தைக் கொண்டும், மின்சாரக் கட்டணம் கட்டாத காரணத்தால், தெரு விளக்குகளுக்கான இணைப்பைத் துண்டிக்கக் கூடாது என்ற ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவு இந்த ஆண்டிலேயும் தொடரும்; எப்போதும் தொடரும்.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையின்மூலமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால், முழுமையாக வீதி விளக்குகளைப் பராமரிக்கின்ற நிலை இருந்திருக்கிறது. ஆனால், இப்போது உள்ளாட்சித் துறையால் அது பராமரிக்கப்படுவதால், பழுது ஏற்படுகிறபோது contract basis–லே அந்தப் பழுதை நீக்கம் செய்ய வேண்டுமென்று ஒப்பந்தத்தின்மூலமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே இருக்கிற சிக்கல் என்னவென்று சொன்னால், பழுதுபார்க்கச் செல்கின்றபோது, மின்சாரத் துறையின்மூலமாக மின் தடையை ஏற்படுத்துவதற்கு அழைக்கப்படுகிறபோது அந்த நேரத்தில் அவர்கள் வருவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த இரண்டு துறைகளும் கலந்து, உடனடியாகப் பழுது பார்க்கின்ற நிலைகளை உடனுக்குடன் செய்து தரப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த முறையே இப்போது மாற்றப்பட்டு, மின்சார இலாகாவிலே புதியதாக helper–கள் நியமனம் செய்யப்பட்டு, எல்லா கிராமங்களிலேயும் மின்சார இலாகாவே, அந்தப் பழுது பார்க்கின்ற பணியை மேற்கொள்வது என்று முடிவு செய்து, அடுத்த மாதம் அமல்படுத்த இருக்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகின்றபோது ஏற்கெனவே இருந்த அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**142—**

## மின் தட்டுப்பாடு

*** 1431—திரு. பெ. கண்ணன்:**

*மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2006 செப்டம்பர் 2

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் மின் தட்டுப்பாட்டினைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் மின் தட்டுப்பாட்டினைச் சீர்செய்ய, ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, தாரமங்கலம், தொளசம்பட்டி, அழகுசமுத்திரம் போன்ற பகுதிகளில், இந்த மின் தடை ஏற்படுவதால், அதற்கான நிலத்தையும் கொடுத்து, அதற்குப் பிறகு அரசிடமிருந்து பணமும் ஒதுக்கப்பட்டு ஓராண்டுக் காலமாகியும் contract எடுப்பவர்கள், விலையெல்லாம் ஏறிவிட்டதால், தங்களால் அப்பணியை எடுக்க முடியாது என்று தொடர்ந்து, அதைப் பின்தள்ளிப் போட்டுக்கொண்டே போகிறார்கள். அதற்கு என்ன செலவாகிறது; அதை எப்பொழுது கட்டி முடிக்க முடியும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் ஒன்றியத்தில் ஒரு புதிய 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க ரூ.6,62,83,000/- செலவாகும். இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் 2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில், அதாவது 31-3-2007-ல் இந்தப் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டு, அந்தப் பகுதியிலே மின்சாரத் தடையே இல்லாத அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இந்தத் தொகுதியில், என்னுடைய தாரமங்கலம் தொகுதியில், தக்காளி பயிர் செய்யும் விவசாயிகளும்...



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி மின் தட்டுப்பாடு சம்பந்தப்பட்டது.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை, இல்லை. அதற்குச் சிரமப்படுகிறார்கள் என்று சொல்ல வருகிறேன். விவசாயிகள் எல்லாம் சிரமப்படுகிறார்கள். அதனால், கூடிய சீக்கிரம், இந்த அரசை இந்த மக்கள் நம்பிக்கொண்டு இருப்பதால், சொன்னால் உடனே செய்து கொடுத்து விடுவார்கள் என்று நம்பியிருப்பதால், உடனடியாக இந்த அரசு செய்து கொடுக்கவேண்டும் என்று தங்கள்வாயிலாக நான் சொல்ல விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தோடு தொடர்புடைய ஒரு கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், பதிலுக்காகவும் கேட்க விரும்புகிறேன். திருப்பத்தூர் பகுதியில், வளர்ந்து வருகிற தொழில் வளர்ச்சியின் காரணமாக, ஏற்கெனவே விவசாயப் பகுதிகள் என்று அங்கீகரிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்தப் பகுதிகள் தொழிற்சாலைகளாக மாறிவிட்ட சூழலில், இன்றைக்கு அந்தப் பகுதிக்கு 24 மணி நேரமும் 3 Phase line மின்சாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அவர்கள் பல மணி நேரம் oil engine, diesel engine ஆகியவற்றைப் பயன்படுத்தி, அந்தத் தொழிற்சாலையை நடத்த வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக, பெருமாநல்லூர் பகுதியில் Nethaji Apparel Park என்கிற ஒரு தொழிற்பேட்டை ஏற்பட்டிருக்கிறது. அதைச் சுற்றியும், விசைத்தறிக் கூடங்கள் நிறைய உருவாகி இருக்கின்றன. திருப்பூரில் இருந்து பல்லடம் செல்கிற வழியிலும், அதைப்போல விசைத்தறிகளும், பனியன் தொழில்களும் விரிவடைந்து இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதிகளை ஆய்வு செய்து, விவசாயப் பகுதி என்கிற நிலையிலிருந்து மாற்றி, தொழில் பகுதி என்ற முறையில் அங்கு 3 Phase line தொடர்ச்சியாகக் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் எங்கெங்கே இருக்கின்றனவோ

அங்கேதான் 3 Phase இணைப்புக் கொடுக்கப்படும். தொழிற்சாலைகளுக்கு பக்கத்திலே இருக்கக்கூடிய, விவசாயிகள் பயிரிடும் பகுதிகளுக்கு 3 Phase இணைப்புக் கொடுத்தால், 24 மணி நேரமும் விவசாயிகள் மின்சாரத்தைப் பயன்படுத்துவார்கள். இந்தியாவிலேயே, அதிகமான நேரம் பகலிலே 6 மணி நேரமும், இரவிலே 10 மணி நேரமும், மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குகிற மாநிலம், தமிழ்நாடுதான். எனவே, 16 மணி நேரம், மின்சாரம் ஏற்கெனவே விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், 24 மணி நேரமும் அவர்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விமூலம் எழலாம். எனவே, அதைத் தவிர்த்து தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் மின் தடை ஏற்படாமல் இருக்க, ஒரு தனி feeder அமைத்து, அவர்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படும். விவசாயம் செய்கின்ற அந்த விவசாயிகளுக்கு, இரவிலே 10 மணி நேரமும், பகலிலே 6 மணி நேரமும் மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தனியாகச் செய்யப்படும். Feeder–ஐப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே என்னிடத்திலே பேசி இருக்கிறார். அதை, உடனடியாக புதியதாக அமைத்துத் தரவேண்டும் என்று மின் வாரியத்திற்குச் சொல்லி இருக்கின்றேன். அந்தப் பணிகள் இந்த மாதம் எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வைத்தியலிங்கம்.

**திரு. ஆர். வைத்தியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வினா கேட்பதற்கு ஒரு மாதமாக கை தூக்கி, இப்போது வாய்ப்புக் கொடுத்த உங்களுக்கு எனது மாபெரும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரத்தநாட்டுத் தொகுதியில், திருமங்கலம், கோட்டை மேலையூர், ஆவிடநல்லூர், விஜயபுரம் ஆகிய பகுதிகளில் மின் தட்டுப்பாடு காரணமாக கடந்த ஆட்சியிலே எங்களது அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இடமும் மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. 33 K.V. துணை மின் நிலையம் சீக்கிரமாக அங்கே அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கல் நாட்டப்பட்ட இடங்களுக்கெல்லாம் புதிதாக துணை மின் நிலையங்கள் அமைப்பது என்று சொன்னால், ஓராயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். எனவே, எங்கெங்கே துணை மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறதோ, அதை எண்ணிப் பார்த்து, மின்சார வாரியம் நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தப் பகுதிக்குத் தேவைப்பட்டால், ஒரு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**143—**

## P.V.C. குழாய்

*** 435—திரு. இரா. இராம்பிரபு:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நரிப்பையூர், உப்பு நீரை நன்னீராக்கும் திட்டத்தின்மூலம், சுத்தமான குடிநீர் வழங்க, இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக P.V.C. குழாய்களை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பையூர், உப்புநீரை நன்னீராக்கும் திட்டத்தின்கீழ், இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக P.V.C. குழாய்கள் மாற்றுவதற்கான புனரமைப்புப் பணியை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம் பிரபு, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

[2006 செப்டம்பர் 2

வன்னியர் நகர், கவுண்டர் வீட்டுவட்டம், எம்ஜிஆர். காலனி, புளியம்பட்டி காலனி, பம்பகார வட்டம் மற்றும் அய்யன்காடு ஆகிய பகுதிகள் ½ கி.மீ. தூரத்தில்தான் அமைந்துள்ளன. எனவே, புளியம்பட்டி கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையை இரண்டாகப் பிரித்து மேம்படுத்த, அரசு விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 9–50

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஓமலூர் தொகுதியில், எனது சொந்த ஊரான புளியம்பட்டி கிராமத்தில் 3,000 மக்கள் தொகை உள்ளது. 844 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய கிராமங்களான ஊர்குடித் தெரு, வன்னியர் நகர், கெண்டியான் வளவு, புதுக்காலனி, பாவானூர்திட்டு, வேதகாரமேட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 500 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதுபோல ஏ.டி. காலனி, தோப்புக் காலனி, எம்.ஜி.ஆர். காலனி, பெருமாள்கோயில் வட்டம், போதானிக்காரன் வளவு ஆகிய பகுதிகளில் 400 குடும்ப அட்டைகள் உள்ளன. தற்போது நான்கு வழிப்பாதை விரிவுபடுத்தப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, வாகனங்கள் மிக அதிகமாக அங்கு செல்கின்ற காரணத்தினாலே, விபத்துகள் அடிக்கடி அங்கே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு பகுதி ஆதி திராவிட மக்கள் இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்த மக்கள், மறுபுறம் இருக்கின்ற அந்தக் கடைக்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்வதிலே விபத்து ஏற்படுகிறது; உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. எனவே, 1,000 கார்டுகள் இருக்கின்ற காரணத்தாலே, இதை அமைச்சர் அவர்கள், அந்த ஏ.டி. காலனியின் ஆதி திராவிட மக்களுடைய நலன் கருதி, அந்தப் பகுதியிலே ஒரு கடையை, ரேஷன் கடையைப் பிரித்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் இருக்கிற தகவல்படி, முழுநேர நியாயவிலைக் கடைகளை நடத்த வேண்டுமென்று சொன்னால், நான் ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல், தற்போது இருக்கிற விதிப்படி, இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருந்தால்தான் என்ற நிலை இருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னிடத்திலே தெரிவித்து, அதைச் சற்று தளர்த்த வேண்டுமென்று அவர்கள் விரும்பிய காரணத்தாலே, அதை 1½ கிலோ மீட்டராகக் குறைத்திருக்கிறோம்.



2006 செப்டம்பர் 2]

அந்த அடிப்படையில்கூட, இது வரவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், புளியம்பட்டி கிராமத்தில் இணைக்கப்பட்டிருப்பது 315 கார்டுகள்; அதனுடைய தூரமும் ½ கிலோ மீட்டர். தேவகாரமேட்டுப்பட்டியில் இணைக்கப்பட்ட குடும்ப அட்டைகள் 50; தூரம் ½ கிலோ மீட்டர். வன்னியர் நகர் 120 குடும்ப அட்டைகள்; ½ கிலோ மீட்டர் தூரம். கவுண்டர்வீட்டு வட்டம் 70 குடும்ப அட்டைகள்; ½ கிலோ மீட்டர் தூரம். இது எப்படி இருந்தாலும்கூட, மிகக் குறைந்த அளவு தூரத்தில், மிகக் குறைந்த அளவு கார்டுகளை வைத்துக்கொண்டு, தற்போது அவர்கள் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கு மேல் இதில் எதுவும் செய்வதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நியாயவிலைக் கடைகளை, ஒரு குறிப்பிட்ட எல்லைக் கோடுகள், ஒரு குறிப்பிட்ட கார்டுகள் இருந்தால் மட்டும்தான் அமைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலே, கிராமங்களிலே, குக்கிராமங்களிலேகூட அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மளிகைக் கடைகளிலே சில அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு, அங்கே இருக்கிற கிராம மக்கள் வேலைக்குச் சென்று, மாலை நேரங்களிலே சென்று, மளிகைக் கடைகளிலே பொருட்களை வாங்குகிற அதேநேரத்தில், நியாயவிலைக் கடைகளிலே வழங்குகின்ற அரிசி, சர்க்கரை, சீமெண்ணெய் போன்ற பொருட்களையும் ரேஷன் அட்டைகளைக் கொடுத்து, அந்த ரேஷன் பொருட்களை வாங்குகிற நிலை இருக்கிறது. கர்நாடக மாநிலத்திற்குச் சென்று அது எப்படி நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்று பார்த்து, அல்லது குழுக்களை அனுப்பி அதுபோன்ற நிலைமையை கிராமப்புறங்களிலே இருக்கிற 100 வீடுகள், 200 வீடுகள் இருக்கின்ற அந்த பகுதிகளிலே அமலாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நாம் ஒன்றும் கர்நாடக மாநிலத்திற்குப் போக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், கிராமப் பகுதிகளை இப்போது எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால், அது தெளிவாகவே தெரிகிறது. ஆரம்ப காலத்தில் இருந்ததைவிட ஓரளவுக்குக் கூடுதலாகக் கடைகளைத்

திறப்பதற்கான சாத்தியக்கூறுகளைக் கணக்கெடுத்து, அவற்றை இன்னும் அதிகமாகத் திறப்பதற்கான நடவடிக்கையை இப்போது எடுத்திருக்கிறோம். அதன்படி பார்க்கப்போனால், கர்நாடகத்தைவிட நாம் அதிகப்படியாக இங்கே கடைகளைத் திறந்து மிகக் குறைந்த தூரத்தில், நிறைந்த அளவுக்கு கார்டுகள் இல்லாவிட்டாலும், குறைந்த கார்டுகளை வைத்துக்கொண்டுகூட விநியோகிக்கிற நிலையை, இப்போது நம்முடைய ஆட்சி நடத்தியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில், கிராமத்தில் இருக்கின்ற பொதுமக்கள், அந்த ரேஷன் கடைகளில் இருக்கின்ற பொருட்களை வாங்குவதற்காகப் பல்வேறு தூரம் நடந்து செல்வது அல்லது பல்வேறு சமூகப் பிரச்சினைகள் காரணமாக, சில சிக்கல்கள் வருவதன் அடிப்படையிலே, 150 அட்டைகள் இருந்தால், அந்தப் பகுதிக்கு கிராமப்புறப் பகுதிநேரக் கடை திறக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டப் பேரவையிலே அறிவிப்பாக வெளியிட்டிருந்தார்கள். ஆனால், அதிகாரிகளை அணுகி, அப்படி 150 குடும்ப அட்டை இருப்பவர்களுக்கு ஒரு பகுதிநேரக் கடை திறக்க வேண்டுமென்று மனு செய்தால், அதற்கான உத்தரவு எங்களிடத்திலே வரவில்லை என்று கூறுகின்றார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், 150 குடும்ப அட்டைகள் இருக்கின்ற அந்தக் கிராமங்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு அரசு கொடுக்கின்ற அத்தனை பொருட்களையும் எளிதாக அவர்கள் பெறுவதற்கு ஏதுவாக—இதிலே அரசுக்கு எந்தவித செலவும் இல்லை; வெறும் எடைக் கருவிகளும், எடைக் கற்களும் இருந்தால் போதும்; அதற்கான இடத்தையும் பொதுமக்களே தந்துவிடுகிறார்கள்; ஆதலால், பொதுமக்கள் நம்முடைய அரசுத் திட்டங்களையும், அரசு வழங்குகின்ற பொருள்களையும் சுலபமான முறையில் வாங்கிக்கொள்வதற்கு ஏதுவாக—உடனடியாகத் தமிழகம் முழுவதும், அந்த 150 குடும்ப அட்டைகள் இருக்கின்ற பகுதிகளுக்கு ஒரு பகுதிநேரக் கடை அமைத்துத் தருவதற்கு, அனைத்து அதிகாரிகளுக்கும் உத்தரவு இடுவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபகரணங்கள், கடை நடத்துவதற்கான இட வசதி, கடைகள் இவை எல்லாம் பொதுமக்கள் தருவார்களேயானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கான உத்தரவு தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது அதிகாரிகளுக்குச் சென்றடைந்தவுடன், கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட வேண்டுமென்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை தருகிறோம். ஆனால் பிரிப்பதற்கான விண்ணப்பங்களைக் கொடுத்து, 3 மாதங்கள் 4 மாதங்கள் ஆனாலும்கூட, துறையிடமிருந்து, கடை உண்டா, இல்லையா என்பதற்கான பதில் வருவதில்லை. நாங்கள் ஊருக்குப் போகிறபோது கடை வேண்டுமென்று கேட்டோமே, கடை உண்டா, இல்லையா என்ற பொதுமக்கள் கேட்கிற நிலை இருக்கிறது. எனவே, விண்ணப்பம் கொடுத்தால், 15 நாட்களுக்குள் அங்கே கடை திறக்கப்பட முடியுமா முடியாதா என்ற பதிலைச் சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பொதுமக்களுக்குப் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். அதுமாத்திரம் அல்லாமல், இரண்டு கிலோ மீட்டர், மூன்று கிலோ மீட்டர் தூரம் இருந்தால், கார்டுகள் குறைவாக இருந்தால், கடை திறப்பதற்கான வாய்ப்பே இல்லை என்று சொல்லுகிற நேரத்தில், அங்கே இருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள்மூலமாக, முடிந்தால் செலவில்லாமலேயே கடை நடத்துவதற்கு, அந்த மகளிர் சுய உதவிக் குழு முன்வந்தால், அதற்காக அரசு அனுமதியளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவ[ர்] அவர்களே, 3 மாதங்களுக்கு முன்னர் உள்ள விவகாரங்களை, இந்[த] அரசிடம் கேட்டுப் பயனில்லை. 3 மாதங்களுக்குட்பட்[ட] எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கைகள், இந்த அரசை[…]

கட்டுப்படுத்தும். நான் இல்லை என்று சொல்லத் தயாராக இல்லை. ஆனால், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் என்பதையெல்லாம் குறைத்துத்தான், ஒரு ஒழுங்குமுறைப்படுத்தி, 1½ கிலோ மீட்டர் அளவுக்கு என்று நாம் இப்போது திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம். அதற்குட்பட்டு கடை வைத்துக்கொள்ள வேண்டும்; அதற்குமேல் இருந்தால், அதைக்கூட பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். நான் இன்னும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், அரசாங்கத்திற்குப் பளு அதிகம் ஏற்பட்டு, அந்தச் சங்கத்தின்மூலம் சம்பளங்கள் அதிகம் கொடுக்கப்பட்டு, அந்த நிலைமை வருமானால், கூட்டுறவுச் சங்கத்தின் பலம்தான் குறையும். அதுதான் பொருளாதார ரீதியாக நலிந்துபோகும். அந்த நிலையை எல்லாம் கவனித்துத்தான், இந்த நடவடிக்கையை நாம் மேற்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக, 3 மாதங்களுக்குப் பின்னுள்ளவை, நம்முடைய தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கைகளின்மூலம் கண்டிப்பாகச் சீரடையும் என்ற உறுதியை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 வாரங்களுக்கு முன்பு, கூட்டுறவுச் சங்கங்களுக்கு—Special Officers – சிறப்பு அலுவலர்களுக்கு ஓர் அறிவிப்புச் சென்றது. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பட்டியலை TAB அல்லது TAM font–லேதான் கேட்க வேண்டும். ஏன் என்றால், 1999 ஆம் ஆண்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ் மொழியை உலகமயம் ஆக்க வேண்டும் என்று Universal Standardisation என்ற மிகப் பெரிய ஒரு சாதனையைக் கொண்டு வந்தார். ஆனால், 10 நாட்களுக்கு முன்பு, அந்தத் துறையிலே, வேறொரு எழுத்துருவிலே, வடிவத்திலே கேட்டிருக்கிறார்கள். மூலக் கேள்வியை ஒட்டிய துணைக் கேள்வியாக நானும் கேட்கவில்லை. ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழ்மேல் கொண்ட பற்றினால், நாம் அனைவரும் இன்று தலைநிமிர்ந்து நிற்கின்றோம். எனவே, மற்ற எழுத்துருவிலே கேட்காமல், நாம் TAB அல்லது TAM font–லே கேட்க வேண்டுமென்று உங்களுடைய மேலான கவனத்திற்குத் தாழ்மையுடன் கொண்டுவந்து, விடைபெறுகிறேன். வணக்கம்.





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவிதமான நடவடிக்கைகளும் தமிழில்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேதான் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். ஆங்காங்கே, Boards, Digital Board–கள் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இஃதன்னியில், சங்கங்களின் உள்ளே boards–களும் மாட்டப்பட்டிருக்கின்றன. அவற்றிலும் விவரங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் தெரிந்துகொள்ளலாம். அப்படி ஏதாவது முன்னுக்குப் பின் முரணாக எங்கேயாவது சங்கத்தில், ஏதாவது கடைகளில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பார்களேயானால், இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கையை நிச்சயமாக இந்தத் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

*முற்பகல் 10·00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன்,. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**145—**

## போக்குவரத்து அலுவலகம்

*** 2272—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9-8-2006 அன்று மானியக் கோரிக்கையின்போது, நடப்பு நிதியாண்டில் பட்டுக்கோட்டை நகரில், வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில், நடப்பு நிதியாண்டில், பட்டுக்கோட்டை நகரில் வட்டாரப் போக்குவரத்துத் துணை அலுவலகம் அமைத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவத்துத் துறை அமைச்சருடைய பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் தொகுதியை எடுத்துக்கொண்டால், மிகப் பெரிய தொழில் நகரம். அந்தக் காரணத்தாலேயே, அந்தப் பகுதியிலே மிகப் பெரிய கனரக வாகனங்களும், நீளமான வாகனங்களும், அதுமட்டுமல்லாமல், தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தால், அங்கே வசிக்கின்ற எல்லா மக்களிடத்திலும் வீட்டிற்கு இரண்டு வாகனங்கள் என்கின்ற அடிப்படையிலே இரண்டு சக்கர வாகனங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. இந்த வாகனங்கள் எல்லாம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்லவேண்டுமானால், நகரின் மையப் பகுதியிலே இருக்கின்ற, திருச்சியிலே இருக்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஏற்கெனவே, போக்குவரத்து நெருக்கடியால் திணறிக் கொண்டிருக்கின்ற அந்த திருச்சி மாநகரத்திற்கு, இதுபோன்ற நீளமான வாகனங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்கிறபோது, தேவையில்லாத அந்த நெருக்கடி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. கூ.ந. சேகரன்:** போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கவனத்திலேகொண்டு, அந்தப் பகுதியிலே, திருவெறும்பூரிலேயே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தினுடைய பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போக்குவரத்துத் துறை, கிட்டத்தட்ட 40 R.T.O.-க்களையும், Grade I, Grade II cadre என்ற அளவிலே முந்நூற்றுச் சொச்சம் அலுவலர்களையும் வைத்துக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, 24 இலட்சம் வாகனங்கள் இருந்தபோது அமைக்கப்பட்ட cadre strength அது. இப்போது, அதிகமான அளவிற்கு Officers வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். அதற்கான முன்மொழிவை அனுப்ப வேண்டுமென்று துறையின் வாயிலாகக் கேட்கப்பட்டிருக்கிறது. விரைவிலே புதிய அலுவலகங்கள், இந்த ஆண்டு 5 இடங்களில் அமைக்கப்பட்டதுபோல, மற்ற தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் இந்தப் போக்குவரத்து அலுவலகங்கள் அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. காரணம், இது செலவு மட்டுமல்ல; அரசாங்கத்திற்கு பெரிய வருவாயைக் கொடுக்கக்கூடிய துறை என்ற காரணத்தால், அதற்காக அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வுசெய்து, ஓரளவுக்கு இசைவு தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, புதிய அலுவலகங்கள் அமைக்கப்படும்போது, நிச்சயமாக திருவெறும்பூர் பகுதியிலும் துணை அலுவலகம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 146, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**146—**

## தனி வட்டம்

*** 718—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையைத் தனி வட்டமாக அறிவிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்திலே 262 குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே சுமார் 50 ஆயிரம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கொல்லிமலை ஒன்றியத்தில் 14 பஞ்சாயத்துகள் உள்ளன. அதில் 7 பஞ்சாயத்துகள் நாமக்கல் தாலுகாவிலும், மீதமுள்ள 7 பஞ்சாயத்துகள் ராசிபுரம் தாலுகாவிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மக்கள் தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, இரண்டு தாலுகாக்களுக்கும் செல்கிற நிலைமை இருக்கிறது. 70 கொண்டை ஊசி வளைவுகளைக் கடந்து செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, சாதிச் சான்றிதழ் தேவைப்படுகிறது என்று சொன்னாலும், நாமக்கல்லுக்குச் செல்லவேண்டிய நிலைமையும், ராசிபுரம் செல்ல வேண்டிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே, அதை மாற்றி, கொல்லிமலை தனித் தாலுகாவாக அறிவிக்கப்படுமா என மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டு தாலுகாக்கள் அங்கே இருப்பதாகத் தெரிவிக்கின்றார்கள். அவர் கோரியிருப்பதைப் பொறுத்தவரையிலே, நம்முடைய தேர்தல் ஆணையத்தினுடைய வரையறைப் பணிகள் காரணமாக, தற்சமயம் தடை செய்யப்பட்டுள்ளது. அந்தத் தடை நீங்கியவுடனே, அதுபற்றிய உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

முற்பகல் 10-05

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர் பகுதியான அம்பத்தூர் தாலுகா, பூவிருந்தவல்லி தாலுகா, தாம்பரம் தாலுகா ஆகியவை மிகப் பெரிய தாலுகாக்களாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் பிரித்து, சீரமைத்து, 3 தாலுகாக்களை 5 தாலுகாக்களாக மாற்றுகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை எதிர்காலத்திலே நம்முடைய அரசினுடைய நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**147—**

## கோயிலைப் புதுப்பித்தல்

*** 1670—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாட்சி ஊராட்சி, நத்தமேடு அம்மன் கோயிலைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூனாட்சி அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோயில் கருவறை, முன்மண்டபம், மதிற்சுவர் ஆகியவை சீரமைக்க வேண்டிய நிலையில் உள்ளன. இதற்கு உத்தேசமாக ரூ. 5 இலட்சம் தேவைப்படுகிறது. ஆனால், இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் 1,265 ரூபாய் மட்டுமே இருக்கின்ற நிலையில், இந்தத் திருக்கோயிலின் பெயரில் ரூபாய் 6,000 மட்டுமே முதலீடாகவும் இருக்கிறது. ஆகவே, போதிய நிதி வசதி இல்லாததால், தற்போது திருப்பணி செய்திடுவதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதியில், பூனாட்சி ஊராட்சிக்குட்பட்ட நத்தம்மேடு அம்மன் கோயில், பழமையான கோயில். இக்கோயிலைப் புதுப்பித்துத்தர, கடந்த ஆட்சியில் பொதுமக்கள் கோரிக்கை வைத்தும் நிறைவேற்றப்படவில்லை. இந்தக் கோயிலுக்கு 11 ஏக்கர் நிலம் உள்ளது.

இந்த நிலத்தை அனுபவித்து வருகின்ற குத்தகைதாரர்கள், சரியாகக் குத்தகைத் தொகையை வழங்குவதில்லை. ஆகவே, இதை முறையாக, வருடா வருடம் ஏலம் விட்டு, அந்த விளைச்சல் நிலத்தில் வருகின்ற அந்த வருமானத்தைக் கோயிலுக்குச் சேர்க்கவும், அதேபோன்று, இந்தக் கோயிலுக்குத் தகுந்த நிதி ஒதுக்கி, பழமையான இந்தக் கோயிலைப் புதுப்பித்துத் தரவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு உண்டியல் வருமானங்கள் அந்தத் திருக்கோயிலில் இல்லை. மேலும், அந்தக் கோயிலுக்குச் சொந்தமாக மானாவாரி நிலமாகத்தான் 4.06 ஹெக்டேர் நிலம் இருக்கின்றது. அதனுடைய வருமானம்தான், ரூபாய் 1,265 என்று குறிப்பிட்டேன். இருந்தாலும், அந்தத் திருக்கோயில் சிதிலமடைந்திருக்கின்ற நிலைமையில், போதிய நிதி வசதி இல்லையென்றாலும்கூட, அதற்குத் திருப்பணியைச் செய்ய வேண்டும் என்ற அந்த மக்களை ஊக்குவிக்கின்றவகையிலே, துறையின் சார்பிலே, 25 சதவிகிதம் நிதி உதவி செய்திடுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே, எஞ்சிய தொகைகளை, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்களும் அந்த முயற்சியிலே ஈடுபட்டுத் திரட்டினார்கள் என்றால் ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கவர்னருடைய பட்ஜெட் உரையின் மீதான விவாதத்திலேயே நான் மயிலாப்பூர் கோயிலில் பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க திருமணம் நடத்திக்கொள்வதற்கு அங்கு மறுபடியும் அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று கேட்டிருந்தேன். அப்போது ஆடி மாதம் இப்போது எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும், முதிர்கன்னிகையாக ஆகக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது ஆகவே, தயவுசெய்து, மயிலாப்பூர் கோயிலில் இந்து பக்தர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, திருமணம் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆவன செய்வீர்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி, கோயிலைப் புதுப்பித்தல்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயம் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், சுகாதாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்தான், கடந்த காலங்களில் திருமணம் செய்கின்ற அந்த நிகழ்ச்சிகளை நிறுத்தி இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல; மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். அதுபற்றி ஆலோசித்து, தக்க முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

முற்பகல் 10–10

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கும் பகுதியில், சுமார் 10 ஆயிரம் திருக்கோயில்களைப் புதுப்பிக்க ஆலயங்களின் தூய்மையில் அக்கறை கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் 25 கோடி ரூபாய் செலவில் திட்டம் உருவாக்கப்பட்டு, ஒப்புதலும் வழங்கப்பட்டது. அரசு ஆணை வழங்கப்பட்டிருந்த நேரத்தில் தேர்தல் அறிவிப்பு வந்ததால் அது நிலுவையில் உள்ளது. ஆகவே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியிலும் ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற பகுதியிலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் கொடுத்து உதவுகின்ற திட்டம் இருந்தது. அது, அவர்களுடைய ஆட்சியிலும் அறிவிக்கப்பட்டு, அந்தத் தொகைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இப்பொழுது, மானியக் கோரிக்கையில்கூட, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின்சார்பிலே அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கின்றோம். இந்த ஆண்டிற்கும், அதுபோன்று 25 ஆயிரம் ரூபாய் உதவி செய்கின்ற திட்டத்தின்கீழ், 2 ஆயிரம் கோயில்களுக்கு வழங்கப்படுகின்றது. தொடர்ந்து அது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கோயிலிலிருந்து நிதியை எடுத்து சிறிய கோயில்களுடைய வளர்ச்சிக்காக அரசு வழங்கி வருகிறது. அப்படி, அதிக வருமானம் வருகின்ற திருவண்ணாமலை கோயிலிலிருந்து, எங்கள் மாவட்டத்திலே சோமாஸ்பாடி, பூதமங்கலம் போன்ற கோயில்களில் நடைபெறுகின்ற பணிகளுக்கு நிதி வழங்க அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அதிகமாக வருகின்ற நிதியை அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை தருகின்ற அளவிற்குப் பார்த்துக்கொள்வதாக உறுதி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**148—**

## நூலகம்

***1884—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் புதிதாக நூலகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதியில் புதிதாக நூலகம் தொடங்க விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. பெறப்பட்டதும், நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பரிசீலிக்கப்படும்.



2006 செப்டம்பர் 2]

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்கு உட்பட்ட கரும்புக்கடை, சுகுணாபுரம், சுந்தராபுரம், எட்டிமடை, ஈச்சனாரி, நாச்சிபாளையம், மயிலேறிபாளையம், பேரூர், வேடப்பட்டி, P.K. புதூர் போன்ற இடங்களுக்குப் புதிய நூலகம் அமைத்தால், படித்த இளைஞர்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அதேபோன்று கோவைப்புதூர், இடையர்பாளையம், மதுக்கரை, குறிச்சி, காந்தி ரோடு, காமராஜ் நகர், கோவை மாநகர், பி.என். புதூர், சீரநாயக்கன்பாளையம் ஆகிய இடங்களில் நூலகக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தர, இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதியிலே, இப்போது 7 ஊர்ப்புற நூலகங்களும், 7 கிளை நூலகங்களும் பல்வேறு ஊர்களிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கக்கூடிய ஊர்களிலே, அரசு விதித்திருக்கக்கூடிய நிபந்தனைகள்—உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஓர் ஊரிலே 5 ஆயிரம் மக்கள் தொகை இருக்கும் என்று சொன்னால், அங்கே ஓர் ஊர்ப்புற நூலகமும், ஆயிரம் மக்கள் தொகை இருந்தால், ஒரு பகுதிநேர நூலகமும் அங்கே திறக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதற்காக, அங்கே இருக்கக்கூடிய கிராம மக்கள், நூலகம் அமைப்பதற்கு இலவசமாகக் கட்டடமோ அல்லது ஊர்ப்புற நூலகமாக இருந்தால், காலி மனை 5 சென்ட் நூல்க ஆணைக் குழுவுக்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரவேண்டும். அதேபோல, ரூபாய் ஆயிரம் வீதம் நன்கொடையாகச் செலுத்தி தலா இரண்டு பேர் அதிலே புரவலர்களாகச் சேரவேண்டும். நூலகக் காப்புத் தொகையாக ரூபாய் 15–ம், ஆண்டுச் சந்தா ரூபாய் 5–ம் ஆக, மொத்தம் ரூபாய் 20 செலுத்தி, 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேரவேண்டும். 2 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் வழங்கிட வேண்டுமென்று சில நிபந்தனைகள் இருக்கின்றன. ஆகவே, இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அந்தக் கிராம மக்கள் விண்ணப்பங்களை அளிப்பார்களேயானால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலித்து, நூலகம் திறப்பதற்கு ஆவன

[2006 செப்டம்பர் 2

செய்யும். நூலகக் கட்டடங்களைப் பொறுத்தமட்டிலே, அவர் சொன்ன அந்த நூலகங்களுக்குரிய கட்டடங்களை வழங்குவதற்கு அரசு வருங்காலங்களிலே பரிசீலித்து ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊர்ப்புற நூலகர்கள் 554 பேர் பணிபுரிகிறார்கள். அதேபோல, பட்டு வளர்ச்சித் துறையில் 38 பேர் பணிபுரிகிறார்கள். இவர்களுடைய கோரிக்கைகளில், 31–5–2006 அன்று, பட்டு வளர்ச்சித் துறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் பணி நிரந்தரம் செய்யப்பட்டது. அதைப்போல ஊர்ப்புற நூலகர்களுக்கும் பணி நிரந்தரம் செய்யப்படுமா என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பல நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், reserve site–கள் பல பூங்காக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதையெல்லாம், நானும் நகராட்சித் தலைவராக இருந்த காரணத்தால் கூறுகிறேன். ஒவ்வோர் ஊரிலும் கிட்டத்தட்ட 25 இடங்கள் பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அவற்றில் பூங்காக்களுக்காக மூன்று இடங்களை மட்டும் விட்டுவிட்டு, மற்ற பல இடங்களில் முட்புதர்கள்தான் மண்டிக்கிடக்கின்றன. அந்த இடங்களை நூலகமாகவும் மற்றும் அரசுக் கட்டடங்கள் கட்டவும் இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல, அரசு ஆணை நிலை எண் 66–ன்கீழ் ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய அந்த ஊர்ப்புற நூலகங்களிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அந்த ஊர்ப்புற நூலகர்கள் 554 பேர்களினுடைய பணியை, இப்போது அரசு வரன்முறை செய்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. நான், மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே தெரிவித்ததைப்போல, ஏற்கெனவே பகுதிநேர நூலகர்களாகவும், அதைப்போல, ஊர்ப்புற நூலகர்களாகவும் இருந்து, 5 வருடப் பணியை முடித்திருக்கக்கூடிய, கூடுதலாக இருக்கக்கூடிய 150 பேர்களையும், அவர்களுடைய பணியையும் வரன்முறை செய்வதற்கு அரசு இப்போது தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அடுத்து, உறுப்பினர் சொன்னதைப்போல,



2006 செப்டம்பர் 2]

நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பூங்காக்களைப் பொறுத்தமட்டிலே, பூங்காக்களினுடைய இடங்களிலே நூலகம் அமைப்பது என்பது முடியாது. பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இடம், பூங்காக்களுக்காகத்தான் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே முன் அனுமதி பெற்றுதான் எழுப்புகின்றேன். வரலாற்றில் ஆண்டுக் கணக்கைக் குறிப்பிடுகின்றபோது, இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்டு, கி.மு., கி.பி. என்று குறிப்பிடுகிற வழக்கம் இருந்து வருகிறது. ஆங்கிலத்திலே, B.C., A.D. என வழங்கி வந்ததன் தமிழாக்கம்தான் இது. ஆனால் வரலாற்றை மதச் சார்பற்ற முறையிலே குறிப்பிட வேண்டுமென்ற நோக்கோடு, இந்த வழக்கத்தை மாற்றி, ஆண்டுக் கணக்கை, 'Common Era (C.E.)'. 'Before Common Era (B.C.E.)' என்று குறிப்பிடுகிற நடைமுறை, சர்வதேச அளவிலே, வரலாற்று அறிஞர்களால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பின்பற்றப்பட்டு வருகிறது. இது உலகமெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாக மாறியுள்ளது. எனவே, நாமும் பாட நூல்களில், வரலாற்றுப் பாடங்களை எழுதுகின்றபோது, கி.மு., கி.பி. என்பதற்குப் பதிலாக, இன்றுள்ள முறையைப் பின்பற்றி, 'பொது ஊழி', 'பொது ஊழிக்கு முன்' எனக் குறிப்பிடுவதே சரியாக இருக்கும். இதுபற்றி பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் விளக்கத்தைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக் கணக்கைப் பொறுத்தமட்டிலே, பல நூற்றாண்டுகளாக ஒவ்வொரு முறை பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. புராணீகர்களைப் பார்த்தோம் என்றால் கலியுக வருடத்திலிருந்து கணக்கிடுகிறார்கள். நம்முடைய கல்வெட்டுகளிலே சாலிவாகன சகாப்தம் இருக்கிறது. நம்முடைய முறைகளிலேகூட பார்த்தோம் என்றால், வருவாய்த் துறைக் கணக்கிலே

பசலி ஆண்டு இருக்கிறது. நம்முடைய அரசின் நடைமுறைகளிலே, திருவள்ளுவர் ஆண்டினை நாம் பின்பற்றுகின்றோம். ஆனால், பாடங்களிலே வருகிறபோது, நாம் இப்போது இருக்கக்கூடிய அந்த B.C. மற்றும் A.D. என்ற முறையைத்தான் பின்பற்றுகிறோம். Before Christ and Anno Domini — In the year of our Lord என்று சொல்லக்கூடிய அந்த முறைதான் இப்போது வழக்கத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்த 'Common Era'—பொது ஊழிக்கு முன்பு, பின்பு,— என்று குறிப்பிட்டிருக்கக்கூடிய முறை, சில மேலை நாடுகளிலே இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருந்தாலும்கூட, நம்முடைய இந்தியத் திருநாட்டைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய நாட்டிலே இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கக்கூடிய அந்த முறை, கிறிஸ்துவுக்கு முன் அல்லது கிறிஸ்துவுக்கு பின் என்ற முறைதான் பின்பற்றப்பட்டு வந்துகொண்டிருக்கிறது. இந்தியத் திருநாடு முழுவதும் நடைமுறையிலே, நம்முடைய நாட்டிலே பொதுவாக நடைமுறையிலே இருக்கக்கூடிய அந்தப் பழக்கம்தான், தொடர்ந்து பாடப் புத்தகங்களில் இடம்பெறும். எனவே, நம்முடைய நாட்டினுடைய நடைமுறைகளிலே மாறுதல் வரக்கூடிய காலங்களிலே, அது பின்னால் வந்தால், அன்றைக்குப் பார்த்துக்கொள்ளலாமேயொழிய, இப்போது இந்த முறைதான் தொடரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியமான முறையில் இந்தச் சபையை நடத்திவரும் தாங்கள், இந்த அரசுக்குப் பெருமை சேர்க்கின்றவண்ணம், நைஜீரியா நாட்டில் நடைபெறும் சபாநாயகர்கள் மாநாட்டுக்கு நாளைக்குச் செல்வதற்கு, உங்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, அதெல்லாம் வினா நேரத்தில் வேண்டாம். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** சரி, கேள்வியைக் கேட்டுவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகங்கள் திறக்க வேண்டுமென்றால், 200 உறுப்பினர்கள், 1,000 ரூபாய் வீதம் 2 புரவலர்கள், அதேபோன்று 2,000 ரூபாய், 3,000 ரூபாய்க்குத் தளவாடச் சாமான்கள்,





மேலும் கட்டடமும் கட்டிய பிறகும்கூட, என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவரைகுளம், செட்டிகுளம் போன்ற பகுதிகளில் பகுதிநேர நூலகங்கள் திறப்பதற்கு, பகுதிநேர நூலக ஊழியர்கள் அமர்த்தப்படாமல் இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பகுதிநேர நூலகம் திறப்பதற்கான, அரசு கூறுகின்ற எல்லா சட்ட திட்டங்களையும் முறைப்படி நடைமுறைப்படுத்திய பகுதிகளில், உடனடியாக ஊழியர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகங்களிலே, ஊழியர்கள் ரூ.605 தொகுப்பு ஊதிய அடிப்படையிலே இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நூலகங்கள் மூன்று மணி நேரம்தான் அங்கே செயல்பட இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டு இருக்கக்கூடியவகையிலே அந்தத் தகுதிகள் எல்லாம் அந்த ஊர்களில் இருக்கக்கூடிய நூலகங்கள் பெற்றிருந்தால், நிச்சயமாக அங்கே நூலகர்களை நியமித்து, அந்தப் பகுதிகளிலே நூலகங்களைத் தொடர்ந்து நடத்துவதிலே அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. நிச்சயமாக அவை கருத்திலே கொள்ளப்பட்டு அந்த நூலகங்களை முறைப்படி இயக்க, அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 149, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**149—**

## தரம் உயர்த்துதல்

*** 8802—திரு. என். மாலைராஜா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, அபிஷேகப்பட்டியிலுள்ள கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மையத்தைக் கால்நடை மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, இராமையன்பட்டியில் இயங்கிவரும் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தைத் தரம் உயர்த்தி, ஒரு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி தொடங்க, தேவையான நிதியுதவி கோரி, பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்ப இவ்வரசு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் இயங்கிவரும், அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையானது, 1980 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவருகிறது. சுமார் 140 ஏக்கர் பரப்பளவில் உள்ள அந்தக் கால்நடைப் பண்ணையை, கால்நடை அறிவியல் மருத்துவக் கல்லூரியாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கால்நடைகளுக்குப் புதிது புதிதாகத் தினமும் பல்வேறுவகை நோய்கள் தோன்றிவரும் இவ் வேளையில், மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டால் உடனுக்குடன் அந்த நோய்களுக்கான நிரந்தரத் தீர்வு ஏற்படும். மக்கள் ஏற்றம்பெற, விவசாயப் பெருமக்கள், தங்கள் கால்நடையைப் பேணிக் காத்திடவும், பொருளாதாரம் சிறப்படையவும், வெண்மைப் புரட்சியைச் சீரிய முறையில் செயல்படுத்திவரும்வேளையில், கால்நடை மருத்துவக் கல்லூரி அத்தியாவசியம் ஆகிறது. தமிழகத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி இரண்டு இடங்களில்தான் உள்ளன. தென் மாவட்டங்களிலிருந்து கால்நடை மருத்துவப் படிப்புப் பயில, சென்னை அல்லது நாமக்கல்லுக்குச் செல்லவேண்டி உள்ளதால், தென் மாவட்ட மாணவர்கள் மிகுந்த சிரமம் மேற்கொள்கிறார்கள். எனவே, தென் மாவட்ட மாணவர்களின் நலன் காக்கும்பொருட்டு, தமிழக முதல்வர் அவர்கள், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அருகில் அமைந்துள்ள அபிஷேகப்பட்டி கால்நடைப் பண்ணையைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவக் கல்லூரியாக ஆக்கிட வேண்டுமென்று கேட்டு அதற்கு மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் கூட்டத் தொடரின் கடைசி நாள் வாய்ப்பு என்பதாலும், கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்பதாலும், இதை நான் கேட்கிறேன். நாய்கள் தொல்லை இப்போது மிகவும் அதிகரித்துவிட்டது. தெருக்களில் ஏராளமான தெரு நாய்கள், நோய்பிடித்து வெறி நாய்களாக மாறிவிடுகின்றன. இதனால், பொதுமக்கள் road-களில் நடந்து செல்லவே அச்சப்படுகிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், மிருக வதைச் சட்டத்தால், நாய்களைக் கொல்லக்கூடாது என்கிறார்கள். வெறி நாய்களிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, நம்முடைய உள்ளாட்சி மன்ற அமைப்புகளோடு சேர்ந்து, இத்துறை ஏற்கெனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆதலால், அவருடைய கோரிக்கையையும் அரசு நிறைவேற்றும்.

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் இருக்கிற கலசப்பாக்கம் கால்நடை மருத்துவமனை, 1967 ஆம் ஆண்டு, அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்படிப்பட்ட மருத்துவமனையைக் கால்நடை அறிவியல் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்துவதற்கு, இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை என்பது, கால்நடைத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகிறது. ஆராய்ச்சி மையம் என்பது கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்மூலம் செயல்பட்டு வருகிறது. ஆனாலும், உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிக்க இவ்வரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 150, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**150—**

## படகுப் போக்குவரத்து

*** 1480—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுப் போக்குவரத்து வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுகள் போக்குவரத்து வசதி ஏற்படுத்தித் தரப்படும்.



2006 செப்டம்பர் 2]

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல், உப்பனாற்றின் முகத்துவாரத்தில் மீன்பிடிப் படகுகள் போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக திருமுல்லைவாசல் மீனவ சமுதாய மக்களின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பகுதியில் சுமார் 30–க்கும் மேற்பட்ட விசைப் படகுகளும், 50–க்கும் மேற்பட்ட சாதாரண படகுகளும் பயன்படுத்துகிறவகையில், நடப்பாண்டிலேயே மழைக் காலத்திற்கு முன்பாக இத்திட்டத்தைச் செய்துகொடுக்க முன்வருவார்களா? இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராமப் பகுதியில், ஆண்டுதோறும் இயற்கை மண்மேடு ஏற்படுகிறது; இதனால், மீனவர்கள் தங்களது படகுகளை மீன்பிடித் தொழிலுக்குக் கொண்டுசெல்லவும், அதன்பின், கரைக்குக் கொண்டுவரவும் மிகுந்த சிரமப்படுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தினைக் கொண்டு திருமுல்லைவாசல் கிராமத்தின், ஆற்று முகத்துவாரத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் போன்ற அமைப்பினை ஏற்படுத்தி உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் அதனை ஏற்படுத்தி, மண்மேடிடும் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தீர்மானிக்கப்பட்டு, முதலில் ஆற்று முகத்துவாரத்தில் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்வதற்காக, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசால், முதற்கட்டமாக ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் ஆலோசனையுடனும், மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள, உரிய நிறுவனம் தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பெற்றபின், இவ்வறிக்கையின்

அடிப்படைக்குரிய வடிவமைப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இப்பணிகள் முடிக்கப்பட்டவுடன், திருமுல்லைவாசல் உப்பனாற்றின் முகத்துவாரத்தில் இயற்கையான ஆழம் ஆண்டுதோறும் பராமரித்திட இயலும் என்பதனால் மீனவர்கள், தங்களது படகுகளைக் கடலுக்குக் கொண்டுசெல்ல மிகவும் வசதியாக இருக்கும்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 5)

1—

### கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 2442—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி ஊராட்சியில் குள்ளேகவுண்டனூர் கிராமத்திற்கும் மற்றும் கோயில் அருகிலும் கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கம்பலாபட்டி ஊராட்சி, குள்ளேகவுண்டனூரில் போதிய அளவு கழிவுநீர்க் கால்வாய்கள் ஏற்கெனவே உள்ளன. எனவே, அங்கு மேலும் கழிவுநீர்க் கால்வாய் தேவைப்படவில்லை.

2—

### கழிவுநீர்ப் பாதைகள்

**வினா எண் 3029—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ)* வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர், காளியாபுரம், ஜல்லிப்பட்டி, பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்பு முன்பு, கழிவுநீர்ப் பாதைகள் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன், மேற்காண் ஆதி திராவிடர் குடியிருப்புகள் முன்பு, கழிவுநீர்ப் பாதைகள் அமைத்துத் தரப்படும்.

3—

### கழிவுநீர்ப் பாதைகள்

**வினா எண் 3034—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ)* வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சியில், பஞ்சாயத்து அலுவலகப் பின்புறக் குடியிருப்புப் பகுதி, ஜெ. ஜெ. நகர் குடியிருப்புப் பகுதி, வேடசந்தூர் குடியிருப்புப் பகுதி, புது காலனி முதல் சாலை ஆகிய பகுதிகளில் கழிவுநீர்ப் பாதைகள் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன், இப்பகுதிகளில் கழிவுநீர்ப் பாதைகள் ஏற்படுத்தித் தரப்படும்.

[2006 செப்டம்பர் 2

4—

## கழிவுநீர்ப் பாதைகளைச் சீரமைத்தல்

**வினா எண் 3038—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி, கோடங்கிபட்டி கிராமம், அரசூரி பகுதி, பூவலப்பருத்தி கிராமம் ஆகிய பகுதிகளுக்குக் கழிவுநீர்ப் பாதைகளைச் சீர்படுத்தித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சம்பந்தப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவரிடம் மேற்காண் பகுதிகளில் உள்ள கழிவுநீர்ப் பாதைகளை உடனே சீர்படுத்த, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5—

## கழிவுநீர்ப் பாதைகள்

**வினா எண் 3042—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம், தென்சங்கம்பாளையம், சோமந்துறை, ரமணமுதலிபுதூர் ஆகிய ஊராட்சிகளில், ஆதி திராவிடர் குடியிருப்புக் காலனி முன்பும் மற்றும் நெசவாளர் குடியிருப்புப் பகுதிக்கும் கழிவுநீர்ப் பாதைகள் அமைத்துத்தர, அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் இதர நிதியிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப்பெறின், மேற்காண் ஊராட்சிகளில் கழிவுநீர்ப் பாதைகள் தேவைப்படும் பகுதிகளில் அமைத்துத் தரப்படும்.



2006 செப்டம்பர் 2]

6—

## அடிப்படை வசதி

**வினா எண் 3221—திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சிங்காநல்லூர் தொகுதியில் அங்கீகரிக்கப்படாத குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்தும் திட்டத்தினை அரசு ஆணை எண் 50, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25–07–2006 நிபந்தனைகளின்படி, சிங்காநல்லூர் பகுதி உட்பட கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதி முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்படாத குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தர, மாநகராட்சியால் ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. விரைவில் மாநகராட்சியால் பணிகள் செய்து முடிக்கப்படும்.

7—

## சாலை வசதி

**வினா எண் 3223—திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2006 செப்டம்பர் 2

சர்க்கார் சாமக்குளம் ஒன்றியம், இடிகரை அருகில் கிருஷ்ணாபுரத்தில் தெரு விளக்கு மற்றும் சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இடிகரை பேரூராட்சிக்கு உட்பட்ட 4-வது வார்டு, கிருஷ்ணாபுரம் மற்றும் சென்னை நாயக்கன்பாளையம் பகுதியில் பிரதான சாலை, நபார்டு திட்டத்தின்கீழ் (13.50 மீட்டர் தூரம்) ரூ.13.50 இலட்சம் செலவில் தார்ச்சாலை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. கிருஷ்ணாபுரத்தில், பேரூராட்சியால் 2004-2005 ஆம் ஆண்டு, 100% வசூல் சாதனையில் கிடைக்கப்பெற்ற மானியத் தொகையில், ஏற்கெனவே உள்ள 32 தெரு விளக்குகளோடு தற்போது கூடுதலாக 8 தெரு விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டு, 40 தெரு விளக்குகளும் தற்போது நன்முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

**8—**

## அடிப்படை வசதி

**வினா எண் 3225—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், வரதையங்கார்பாளையம், ஸ்ரீலட்சுமி கார்டன் குடியிருப்போர் நலன் கருதி, அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஸ்ரீலட்சுமி கார்டனுக்கு 14 வீதி விளக்குகள் போட, மின்வாரியத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய சாலை (குரம்பாளையம் முதல் வரதையங்கார்பாளையம் சாலை வரை)



2006 செப்டம்பர் 2]

நெடுஞ்சாலைத் துறைமூலம் (ஊரக சாலைகள்) tender விடப்பட்டுள்ளது. ஸ்ரீலட்சுமி கார்டனுக்குத் தற்போது ஆழ்குழாய்க் கிணறுமூலம் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. மேலும், அத்திக்கடவு குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

**9—**

## புதிய வடிகால்

**வினா எண் 3526—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் புதியதாக வடிகால் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் பிற வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றவுடன், சோமந்துறை ஊராட்சியில் புதியதாக வடிகால்கள் அமைக்கப்படும்.

**10—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 648—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள கண்டிகை கிராமத்திற்கு பகுதிநேர நியாயவிலைக் கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை ஏற்படுத்துவதற்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படி குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நியதியை மாற்றி, 150 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும் என்றும், இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கும் இடையே குறைந்தது 2 கி.மீ. தூரம் இருக்க வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி ஒன்றரை கி.மீ. இருந்தால் போதும் என்றும் வழிமுறைகளை மாற்றி அமைப்பதற்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. எனவே, இவற்றின் அடிப்படையில் செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள கண்டிகை கிராமம், சியாளன் கொல்லை திருமணி கிராமத்திலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளதால், இக்கிராமத்தில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சிறப்புக் காரணங்கள் ஏதும் இருப்பின், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளரிடமிருந்து கருத்துருவினைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 2105—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், பள்ள ஈகை கிராமத்தில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டம், ஈகை கிராமத்தில் உள்ள தாய்க் கடைக்கும், பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பள்ள ஈகை கிராமத்திற்கும் இடையே உள்ள தூரம் 3.5 கி.மீ. ஆகும். மேலும், பள்ள ஈகை கிராமத்தில் 120 குடும்ப அட்டைகளே உள்ளன. புதிய பகுதிநேர நியாயவிலைக்



கடைகள் திறக்க இரு நியாயவிலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் 2 கி.மீ. என்பதை ஒன்றரை கி.மீ. ஆகக் குறைத்தும், 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்பதைத் தளர்த்தி, 150 குடும்ப அட்டைகள் என்றும், விதிமுறைகளை மாற்றி அமைப்பதற்கான கருத்துருக்கள் பரிசீலனையில் உள்ளன. எனவே, அவற்றின் அடிப்படையில், பள்ள ஈகை கிராமத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சிறப்புக் காரணங்கள் ஏதேனும் இருப்பின், உரிய கருத்துருவினை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளரிடம் பெற்று பரிசீலனை செய்து தக்க ஆணைகள் வெளியிடப்படும்.

**12—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 3538—திரு. ந. கணபதி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, ஆகாசம்பட்டு ஊராட்சி, அச்சிரம்பட்டு கிராமத்திலுள்ள பகுதிநேர நியாயவிலைக் கடையை முழுநேர நியாயவிலைக் கடையாக இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பகுதிநேர நியாயவிலைக் கடைகளை, முழுநேர நியாயவிலைக் கடைகளாக மாற்றுவதற்கு அரசின் நெறிமுறைகளின்படி வழிவகைகள் இல்லை. மேலும், பகுதிநேர கடைகள் அமைப்பதற்குச் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளில், பகுதிநேரக் கடைகளை முழுநேரக் கடைகளாக மாற்றுமாறு கோரிக்கை ஏதும் பின்னாளில் கொடுக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியும் சம்பந்தப்பட்டவர்களால் அளிக்கப்படுகிறது. எனவே, விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதி, ஆகாசம்பட்டு ஊராட்சி, அச்சிரம்பட்டு கிராமத்திலுள்ள பகுதிநேர நியாயவிலைக் கடையை முழு நேர நியாயவிலைக் கடையாக இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2006 செப்டம்பர் 2

13—

### விதை விற்பனை

**வினா எண் 638—திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போலி மற்றும் தரமற்ற விதைகள், விற்பனைக்கு வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

போலி மற்றும் தரமற்ற விதைகள் விற்பனைக்கு வருவதைத் தடுக்க, விதை சான்றளிப்புத் துறையின் விதை ஆய்வுப் பிரிவின்மூலம், விதை விற்பனை நிலையங்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

14—

### விவசாயிகளிடம் விழிப்புணர்வு

**வினா எண் 640—திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நச்சுத் தன்மை கொண்ட இடுபொருட்களைத் தவிர்த்து, விளைநிலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, நிலம் நச்சுத் தன்மை அடைவதைத் தடுக்க, விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இயற்கை வேளாண்மையின் சாராம்சமே, நச்சுத் தன்மை கொண்ட இடுபொருட்களைத் தவிர்த்து, விளைநிலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, நிலம் நச்சுத் தன்மை அடைவதைத் தடுப்பதே ஆகும். மாவட்டந்தோறும், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள இயற்கை வேளாண்மைப் பிரிவுகள், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவத்தினை விவசாயிகளிடையே



2006 செப்டம்பர் 2]

எடுத்துக்கூறி வருகின்றன. மேலும், இயற்கை உரங்களான பசுந்தாளுரங்கள், மண்புழு உரம், உயிர் உரங்கள், நீல பச்சைப் பாசி போன்றவற்றை விவசாயிகள் அதிக அளவில் உபயோகப்படுத்தும் வண்ணம் பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

15—

### தேங்காய் விற்பனை

**வினா எண் 976—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று தேங்காய் விற்பனையை அரசே நடத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேங்காய் விற்பனையை அரசே ஏற்று நடத்தும் திட்டம் ஏதுமில்லை.

16—

### விவசாயத்திற்குத் தனி வாரியம்

**வினா எண் 984—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெற்றிலை விவசாயத்திற்குத் தனி வாரியம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வெற்றிலை விவசாயத்திற்குத் தனி வாரியம் அமைக்கும் திட்டம், தற்போது அரசிடம் இல்லை. தமிழ்நாட்டில் வெற்றிலைப் பயிர்,

[2006 செப்டம்பர்

நீலகிரியைத் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 2,860 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 62,920 மெ. டன் உற்பத்தி செய்யப்படுகிறது ஒரு எக்டேருக்குச் சராசரியாக 22 மெ. டன் மகசூல், வெற்றிலைப் பயிரிலிருந்து பெறப்படுகிறது.

**17—**

### காட்டாமணக்குக் கன்றுகள்

**வினா எண் 987—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாவர எரிபொருளான காட்டாமணக்குக் கன்றுகளை இலவசமாகத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காட்டாமணக்குக் கன்றுகள், ஊரகத் துறைமூலமாக கம்பம் தொகுதி உட்பட, தமிழகத்தில் 26 மாவட்டங்களில் இலவசமாக வழங்கப்பட உள்ளன. தமிழகத்தில் 3.50 கோடி காட்டாமணக்குக் கன்றுகள் உற்பத்தி செய்து, தரிசு நிலங்கள் மற்றும் இதர நிலங்களில் சாகுபடி மேற்கொள்ள இலவசமாக வழங்கப்படும். இந்தக் கன்றுகளைக் கொண்டு, பஞ்சாயத்து நிலங்களிலும் நடவு மேற்கொள்ளலாம். இத்திட்டத்திற்கு மத்திய அரசால் ரூ.10.50 கோடி நிதி, ஊரகத் துறைக்கு வழங்கப்பட்டு, அத்துறையின் நிதியுதவியுடன் வனத் துறைமூலம் காட்டாமணக்குக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**18—**

### தக்காளிக்கு விலை நிர்ணயம்

**வினா எண் 1092—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் விளையும் தக்காளிக்கு விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 செப்டம்பர் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் விளையும் தக்காளிக்கு விலை நிர்ணயம் செய்வது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**19—**

### காய்கறி உற்பத்தி அதிகரித்தல்

**வினா எண் 1281—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி விவசாயிகள், புதிய நுணுக்கங்களைக் கையாண்டு, காய்கறிகளை உற்பத்தி செய்ய, பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2006–2007 ஆம் நிதியாண்டில், 105 எக்டேர் பரப்பில் துல்லிய பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதற்காக 105 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், வீரிய ரக காய்கறி விதைகளை உயர் தொழில்நுட்பங்களுடன் பயிரிட, உரிய பயிற்சியுடன் அனைத்துப் புதிய நுணுக்கங்களும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு, காய்கறிகள் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்கென ரூ.141.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**20—**

### விவசாயம் செய்ய உதவி

**வினா எண் 1784—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள மலைஜாதி மக்கள், சிறு விவசாயம் செய்ய அரசு உதவி புரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் வசிக்கும் மலைஜாதி மக்களுக்குச் சொந்த நிலம் இருப்பின், தோட்டக்கலைத் துறைமூலம் செயல்படுத்தும் திட்டங்களான ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை வாரியம் போன்றவற்றின்கீழ், நடவுச் செடிகள் மற்றும் உயர் விளைச்சல் காய்கறி விதைகள் மானிய விலையில் (25 முதல் 75 விழுக்காடு) வழங்கப்படுகிறது.

**21—**

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி

**வினா எண் 2106—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) இதற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டு தொகுதி உட்பட அனைத்துத் தொகுதிகளிலும் 2006–2007 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துப் பயிர்கள் 32,000 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கவும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தரமான விதை, துறையின்மூலம் அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதை மாற்று சதவிகிதத்தின்படி விதைப் பண்ணை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு 2005–2006–ல்





ரூ.10.76 இலட்சம் நிதி செலவில், 144 மெ. டன் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு மாநில அரசுத் திட்டமான, எண்ணெய் வித்துப் பெருக்குத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்யப்பட்டது. மற்றும் மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஐசோபாம் எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ், விதைகள், இடுபொருட்கள் மற்றும் பயிற்சிகள் ஆகிய இனத்தில், ரூ.24.376 இலட்சம், 2005–2006 ஆம் ஆண்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2006–2007 ஆம் ஆண்டில், ரூ.10.08 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 136.50 மெ. டன் எண்ணெய் வித்துச் சான்று பெற்ற விதைகள், எண்ணெய் வித்துப் பெருக்குத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எண்ணெய் வித்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் ரூ.34.749 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விதைகள், இடுபொருட்கள் மற்றும் பயிற்சிகள் ஆகிய இனத்தில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**22—**

## விதைகள் வழங்குதல்

**வினா எண் 2474—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் மணிலா பயிரைப் பயிரிட, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) விவசாயிகளுக்கு இடுபொருள் மற்றும் விதைகள் இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2006–2007 ஆம் ஆண்டில், மணிலா Khariff பருவத்தில் 4,000 எக்டேரிலும், Rabi பருவத்தில் 28,000 எக்டேரிலும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2005–2006) மணிலா பயிர், சுமார் 31,747 எக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டது. நடப்பு ஆண்டு ஜுலை 2006 வரை, சுமார் 2,000 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது. நிலக்கடலை Rabi பருவத்தில்தான் பெரும்பாலாகப் பயிரிடப்படுகிறது. எனவே, நடப்பு ஆண்டில் 32,000 எக்டேரிலும் பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2006 செப்டம்பர் 2

(ஆ) மத்திய, மாநில அரசு உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த எண்ணெய் வித்து, பயறு வகை, எண்ணெய்ப் பனை மற்றும் மக்காச் சோளம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எண்ணெய் வித்துப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரிப்பதற்கும் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் விதைகள் மற்றும் இடுபொருட்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. 2005–2006 ஆம் ஆண்டு, ரூ.21.376 இலட்சத்திற்கு விதைகள், இடுபொருட்கள், பயிற்சிகள் ஆகிய இனத்திற்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு விதை, இடுபொருட்கள் மற்றும் பயிற்சி இனம் ஆகியவற்றைச் சேர்த்து, ரூ.34.749 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23—**

## காய்கறி விற்பனை

**வினா எண் 2723—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு உழவர் சந்தையில் நாளொன்றுக்கு விற்கப்படும் காய்கறிகள் எவ்வளவு?

(ஆ) இந்த விற்பனையைக் கூடுதலாக்க சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு உழவர் சந்தையில், 2006, ஜூலை மாதம் முதல் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 4,718 கிலோ காய்கறிகள் மற்றும் பழங்கள் சுமார் 41 விவசாயிகளால் கொண்டுவந்து விற்பனை செய்யப்படுகிறது. இது 2006, ஜூன் மாதத்தைக் காட்டிலும் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 1,400 கிலோ கூடுதலாகும். மேலும், காய்கறிகளின் வரத்தை அதிகரிக்க ஏதுவாக தோட்டக்கலைத் துறையின்மூலம் காய்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடும் விவசாயிகளைக் கண்டறிந்து, அவர்களுக்கும் புதியதாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதுடன், தோட்டக்கலைத் துறையின் மூலமாகக் காய்கறிகள் மற்றும் பழ சாகுபடி குறித்த தேவையான விவரங்களை உழவர் சந்தைக்கு வரும் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டும் வருகிறது.



2006 செப்டம்பர் 2]

**24—**

## பயிற்சி மையம்

**வினா எண் 3252—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம், இத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின்கீழ், சேலத்தில் செயல்பட்டு வரும் பயிற்சி மையத்தில், ரூ.200.00 இலட்சம் செலவில் உணவு பதனிடும் தொழில்கள் குறித்த பயிற்சி தொடர்பான பயிற்சி நிலையம், மைய அரசின் உணவு பதனிடும் தொழில் அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று அமைத்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, வால்பாறை ஆழியாறு நகரில், உணவு பதப்படுத்தும் பயிற்சி மையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதும் இல்லை.

**25—**

## ஒட்டுரக விதைகள்

**வினா எண் 3919—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம், வீரிய ஒட்டுரகங்களை அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள வீரிய ஒட்டுரக நெல், மக்காச் சோளம், கம்பு, சூரியகாந்தி, துவரை, பருத்தி மற்றும் ஆமணக்கு ஆகியவற்றின் விதைகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. மேலும், இவற்றின் தாயாதி விதைகளை வேளாண்மைத் துறை மற்றும் தனியார் விதை உற்பத்தி நிறுவனங்களுக்கு வழங்கி அதிக அளவில் வீரிய ஒட்டுரக விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

**26—**

**வெங்காயம் உற்பத்தி**

**வினா எண் 3924—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் வெங்காயம் கோ–ஆன் 5 ஆகிய பயிர் அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோ–ஆன் 5 வெங்காயம் ஆதார விதை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்மூலம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகம் மட்டுமன்றி, திண்டுக்கல், தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மூலம் கோ–ஆன் 5 வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகள் பயன்பெறும்வகையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆதார விதை வழங்கப்பட்டு, விதை உற்பத்தி செய்யும் திட்டம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயலில் உள்ளது.



**27—**

**வழக்கறிஞர்களுக்கு அறைகள்**

**வினா எண் 2868—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்குத் தனித் தனியே அறைகள் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஆம். செங்கற்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.55.65 இலட்சம் மதிப்பீட்டில் வழக்கறிஞர்களுக்குத் தனித் தனியே 25 அறைகள் கட்டும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**28—**

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 2985—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூரைத் தலைமையிடமாகக் கொண்டு, வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

இல்லை.

**29—**

**அணையில் படகு விடுதல்**

**வினா எண் 3255—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, சோலையாறு அணையில் படகுவிட அரசு முன்வருமா?

[2006 செப்டம்பர் 2

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை, சோலையாறு, அணையில் படகுவிட திட்டம் ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**30—**

## ROPE CAR வசதி

**வினா எண் 4542—திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் rope car வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் rope car வசதி ஏற்படுத்துவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும், தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**31—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 100—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?



2006 செப்டம்பர் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள அனைத்துத் தகுதியுள்ள குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்குவதற்குத் தேவையான 76,000 கிலோ லிட்டர் ஒதுக்கீட்டை மைய அரசிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) மைய அரசு போதிய ஒதுக்கீடு செய்யும்போது, அனைத்துத் தகுதியுள்ள குடும்ப அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**32—**

## சுய உதவிக் குழு

**வினா எண் 990—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மூன்றில் ஒரு பங்கு நியாயவிலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ள முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை எண் 254, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 6–11–2000-ல் நியாயவிலைக் கடைகளை மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைப்பது தொடர்பாக, அரசு விரிவான வழிமுறைகளை வழங்கியுள்ளது. 30–6–2006 நிலவரப்படி, தமிழ்நாட்டில் 28,375 நியாயவிலைக் கடைகள் உள்ளன. இவற்றில் மகளிர் குழுக்கள் 326 மற்றும் சுய உதவிக் குழுக்கள் 165 ஆகியவற்றால், மொத்தம் 591 நியாயவிலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் அதிக எண்ணிக்கையிலான நியாயவிலைக் கடைகளை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மிகக் குறைவான குடும்ப அட்டைகள் உள்ள அங்காடிகளை நடத்துவதில் நஷ்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டதன்பேரில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நியாயவிலைக் கடைகள் ஒதுக்கீடு செய்யும்போது, அவை இலாபகரமாக இயங்க ஏதுவாக, 400 குடும்ப அட்டைகளுக்கு மேலாக

உள்ள அங்காடிகளை இணைக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கென இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

**33—**

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 1728—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் குடும்ப அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து தகுந்த ஆணைகள் அ.ஆ. (நிலை) எண் 130, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்-2) துறை, நாள் 8–8–2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் தகுதியுள்ள குடும்பங்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**34—**

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 1798—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, மலை ஜாதி மக்களில் உணவுப் பொருள் வழங்கல் அட்டை இல்லாத சில குடும்பங்களுக்கு அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து தகுந்த ஆணைகள் அ.ஆ. (நிலை) எண் 130, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எப்-2) துறை, நாள் 8–8–2006-ல் வெளியிடப்பட்டுள்ளன.





அதன் அடிப்படையில் வால்பாறைத் தொகுதி மலை ஜாதி மக்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

**35—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 2452—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் யானைகள், புலிகள், சிறுத்தைப் புலிகள், காட்டெருமை, கரடி போன்ற வன விலங்குகள் மத்தியில், பொதுமக்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள குடும்பத்திற்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை மலைப் பகுதிக்கு, நீலகிரி மாவட்ட மலைப் பகுதிக்கு வழங்கப்படும் அளவில் குடும்ப அட்டைதாரர்களுக்குக் கூடுதல் மண்ணெண்ணெய் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

**36—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 3453—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை மலைப் பகுதியில் நியாயவிலைக் கடைகளில் மண்ணெண்ணெய் அளவைக் குறைக்காமல் விநியோகம் செய்யவும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மண்ணெண்ணெய் வழங்கிடவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

[2006 செப்டம்பர் 2

(ஆ) வால்பாறை பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள அளவான 5 லிட்டர் (நகரியமாக இருப்பதால்) மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள், குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும்பொழுது, அளவினைக் குறைக்காமல் விநியோகம் செய்ய தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு, வருவாய்த் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அதிகாரிகளால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நியாயவிலைக் கடைகளுக்கு, பிரதி வாரம் வெள்ளிக்கிழமை மட்டுமே விடுமுறையாகும். மற்ற தினங்களில் குடும்ப அட்டைதாரர்களுக்கு (ஞாயிறு உட்பட) மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் எந்த அளவு மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறதோ, அதே அளவில் வால்பாறை மலைப் பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**37—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 4451—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் புதிய ரேஷன் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசுமூலம் மாநிலத்திற்கு மாதந்தோறும் வழங்கப்படும் மண்ணெண்ணெய், ஏற்கெனவே நடைமுறையில் மண்ணெண்ணெய் பெற்றுவரும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க மட்டுமே போதுமானதாக உள்ளது. இந்நிலையில், 2004 ஆம் வருடம் முதல் வழங்கப்பட்ட விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும் என்ற அடிப்படையில், மாநில அரசு தற்போதைய வழங்கல் அளவினை 59,852 கிலோ லிட்டரிலிருந்து 76,000 கிலோ லிட்டராக உயர்த்தி வழங்க, மைய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மைய அரசு மாநிலத்திற்கான மண்ணெண்ணெய் ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்கும்பட்சத்தில், தகுதியுள்ள புதிய ரேஷன் கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும்.



2006 செப்டம்பர் 2]

**38—**

## புதிய கட்டடம்

**வினா எண் 995—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, கீழ்ப்பெண்ணாத்தூர் ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்கவும், புதிய கட்டடங்களைக் கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனை சார்ந்த கட்டடங்களின் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு முன்னுரிமை அளித்து, 2006–2007 நடப்பு நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**39—**

## புதிய கட்டடம்

**வினா எண் 1051—திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் சிறப்பு ஊராட்சி, கருவார்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதாரப் பகுதி மாவட்டம், வடமதுரை வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் இயங்கும் அய்யலூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருவது, அய்யலூர் துணை சுகாதார நிலையம் ஆகும்.

[2006 செப்டம்பர் 2

திண்டுக்கல் மாவட்டம், அய்யலூர் சிறப்பு ஊராட்சியில் உள்ள கருவார்பட்டியில், ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. கருவார்பட்டி கிராமம் என்பது, அய்யலூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ள கிராமங்களில் ஒன்றாகும். இதன் மக்கள்தொகை 750 ஆகும். இக்கிராமம், அய்யலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. மேலும், அய்யலூர் (வடக்கு) துணை சுகாதார நிலையம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதால் கருவார்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை சுகாதார நிலைய கட்டடம் ஏற்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**40—**

## தொழிலாளர்களுக்குச் சம்பளம்

**வினா எண் 1054—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை NEPC தேயிலைத் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு விடுமுறைச் சம்பளம் மற்றும் நிலுவைத் தொகை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வால்பாறை NEPC தேயிலை நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 23-9-2005 ஆம் நாளிட்ட 18(1) ஒப்பந்தப்படியான நிலுவைத் தொகை, முழுமையாக வழங்கப்பட்டுவிட்டது. விடுப்புடன் கூடிய ஊதியம் வழங்கப்படாமைக்காக வால்பாறை தோட்ட நிறுவன ஆய்வர் குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

**41—**

## தொழிலாளர்களுக்குச் சலுகைகள்

**வினா எண் 3000—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிவுற்ற ஆலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு அரசின் சலுகைகள் வழங்கப்படுகின்றன?



2006 செப்டம்பர் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் நீண்டகாலமாக பல தொழிற்சாலைகள் நிதி நெருக்கடி, பங்குதாரர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் இயங்காமலும்/மூடப்பட்டும் உள்ளன. இதனால் பல தொழிலாளர்கள் வேலை இழந்து தவிப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்கு உதவிட வேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு தொழிற்சங்கங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தன. மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு இடர்காப்பு உதவி வழங்குவது தொடர்பாக அரசாணை எண் 88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 28-06-1999-ல், அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. அந்த திட்டத்தின்கீழ் கவரப்படும் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் குறித்தும், அரசாணையில் வலியுறுத்தப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்தின்படி, மூடப்பட்ட தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தகுதிபெற்ற தொழிலாளர்களுக்கு 01-05-1999 முதல் மாதம் ரூ.250/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அரசு உத்தரவிற்கிணங்க இதுவரை 38 தொழிற்சாலைகளில் பணிபுரிந்த 8,975 தொழிலாளர்களுக்கு ரூ.2,70,83,000/- உதவித் தொகையாக பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**42—**

## கால்நடை மருத்துவ நிலையம்

**வினா எண் 1171—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், பழவூர் கால்நடை மருத்துவ நிலையத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், பழவூர் கிராமத்தில் எவ்விதக் கால்நடை நிலையமும் இல்லை. இக்கிராமத்தின் அருகில் 6 கி.மீ. தொலைவில் சங்கனாபுரம் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. பழவூர் கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு இம்மருந்தகத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. அதனால், பழவூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையம் ஏற்படுத்த அரசுத் தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**43—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 3125—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குத் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறையில் கால்நடை மருந்தகம்தான் உள்ளது. இம்மருந்தகத்திற்குத் தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**44—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 3126—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறையிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு அடிப்படை வசதிகள் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி கோட்டத்திலுள்ள வால்பாறையில் கால்நடை மருத்துவமனை ஏதுமில்லை. தற்போது அங்கு ஒரு கால்நடை மருந்தகம் மட்டுமே, சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மருந்தகத்தில் சிகிச்சைக் கூடம், கால்நடை உதவி மருத்துவர் குடியிருப்பு, தண்ணீர் வசதிகள் ஏற்கெனவே உள்ளன. மேலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 2006–2007–ல் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**45—**

**மருத்துவர் நியமனம்**

**வினா எண் 3685—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் கங்கைகொண்ட சோழபுரம், மீன்சுருட்டி, படூர், கோடாலி, பெரியவளையம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் மருத்துவர்களை நியமனம் செய்து, மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து பெறப்படும் தெரிவுப் பட்டியல் மற்றும் கால்நடை உதவி மருத்துவர் பதவி உயர்வுக்கு வெளியிடப்பட உள்ள தேர்ந்த பெயர்ப் பட்டியல்மூலமாக, காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

46—

## மீன் உற்பத்தி

**வினா எண் 3116—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் அயிரை மீன்கள், கெளுத்தி மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அயிரை மீன்கள் மற்றும் கெளுத்தி மீன்களை வியாபார ரீதியில் உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் தற்போது முழுமையாக வளர்ச்சியடையவில்லை. இதனால் வியாபார ரீதியில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்க போதிய அளவில் கிடைப்பதில்லை. எனவே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அயிரை மற்றும் கெளுத்தி மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

## மீன் உற்பத்தி

**வினா எண் 3118—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள உக்கடம் குளத்தில் அயிரை மீன், கெளுத்தி மீன்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அயிரை மற்றும் கெளுத்தி மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் முழுமையாக வளர்ச்சியடையாததால், இம்மீன்களை அதிக அளவில் இருப்பு செய்து வளர்க்க



சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இக்குளம், மீன்பாசி குத்தகை அடிப்படையில் கோயம்புத்தூர் வட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு, அரசு மீன் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர் ரக கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் கெண்டை இன மீன்களை இருப்புசெய்து, வளர்த்து, பயன்பெற்று வருகின்றனர். எனவே, கோயம்புத்தூர் மாநகரிலுள்ள உக்கடம் குளத்தில் மேற்கூறிய மீன்களை உற்பத்தி செய்ய இயலாது.

48—

## விரால் மீன் உற்பத்தி

**வினா எண் 3119—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், சிங்காநல்லூர் குளத்தில் விரால் மீன்கள் மிக அதிகமாக உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் குளம் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன்பாசி குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. இக்குளத்தில் விரைவில் வளரக்கூடிய கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் கெண்டை இன மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, மீன்கள் நன்கு வளர்ந்த பிறகு, பிடிக்கப்பட்டு வருகின்றன. வியாபார ரீதியில் விரால் குஞ்சுகள் உற்பத்தி செய்யும் தொழில் நுட்பம் முழுமையாக வளர்ச்சியடையாததாலும், இயற்கை சேகர முறையில் இம்மீன் குஞ்சுகளை அதிக அளவில் சேகரம் செய்யும் வாய்ப்புக் குறைவு என்பதாலும், சிங்காநல்லூர் குளத்தில் விரால் மீன்கள் அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 3131—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 செப்டம்பர் 2

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்குப் பால்வளத் துறைமூலம் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்குப் பால்வளத் துறையில் நேரடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**50—**

### கட்டட வசதி

**வினா எண் 3387—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூரில் உள்ள கூட்டுறவு பால் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூரில் உள்ள கூட்டுறவு பால் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2006 செப்டம்பர் 2]

## 2. தகவல் கோரல்

### (அ) சென்னை, வண்டலூர்-கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் அமைக்கும் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி. (குறுக்கீடு) திரு. ஆர். சின்னசாமி. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்களா? சரி.

முற்பகல் 10-30

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பக்கபலமாக நிறைய பேர் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நேற்றையதினம் இங்கு பேசுகின்றபோது, வண்டலூர்–கேளம்பாக்கம் சாலையில் தென்பக்கம் 1,40,000 ஏக்கரில், கிட்டத்தட்ட 30,000, 35,000 ஏக்கரில், சென்னை நகரத்தில் மக்கள் தொகை அதிகரிப்பதன் காரணமாக, அங்கு ஒரு துணை நகரம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர் கோ.க. மணிகூட, சில அச்சங்களைத் தெரிவித்தார்கள். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அங்கு குடியிருக்கின்ற மக்களை வெளியேற்றுவதில்லை என்றும், விவசாய நிலங்களைக் கையகப்படுத்தப்போவதில்லை என்றும் ஒரு கருத்தினை இங்கே சொன்னார்கள். ஆனால், தற்போது நிலவுகின்ற சூழ்நிலை, ஓர் அபாயகரமான சூழ்நிலையாக அங்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்தத் தென் பகுதியில், ஊரப்பாக்கம், இரத்தினமங்கலம், கண்டிகை, ஊனமாஞ்சேரி, அருங்கால், இல்லலூர், கொட்டமேடு, காயிரம்பேடு, வெம்பேடு, கன்னிவாக்கம், பாண்டூர், அஸ்தினாபுரம் போன்ற பஞ்சாயத்துக்களும், அந்தப் பஞ்சாயத்துகளில் கிட்டத்தட்ட துணைக் கிராமங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட துணைக் கிராமங்களும், அந்த 30 ஆயிரம், 33 ஆயிரம் ஏக்கரில் அமைந்திருக்கின்றன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன, ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் உள்ளடக்கிய அந்தப் பகுதிகளில், இதற்கும் மேலாக, நூற்றுக்கணக்கான கிராமங்கள், ஆயிரக்கணக்கான குடும்பங்கள், இலட்சக்கணக்கான மக்கள், அந்தப் பகுதியிலே ஏழையெளிய மக்கள் வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களில் பெரும்பாலும். ஆதி திராவிட

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2006 செப்டம்பர் 2

மக்களும், பின்தங்கிய மக்களும்தான், அந்தப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அந்தப் பகுதியில் அவர்களுடைய வாழ்வாதாரங்கள், ஒன்று விவசாயம்; மற்றொன்று அந்தப் பகுதியிலே இருக்கின்ற, நாம் இன்றைக்கு நில எடுப்பின்மூலம் சொல்லியிருக்கின்றோமே தரிசு நிலங்கள்; அந்தத் தரிசு நிலங்கள், காடுகள் போன்றவற்றில் ஏழையெளிய மக்கள், ஆடுமாடுகளை வைத்துப் பிழைப்பு நடத்துவது, அவர்களுடைய வாழ்வாதாரங்களே, முழுமையாக விவசாயமும், விவசாயத்தைச் சார்ந்திருக்கின்ற காடுகளில் ஆடுமாடுகளை வைத்து, அவர்களுடைய வாழ்வாதாரங்களை அங்கே நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு நாம் அந்தத் துணை நகரத்தை அமைக்கின்றபோது, என்னதான் விவசாய நிலங்களை நாம் எடுக்கவில்லை என்று இங்கே உறுதிமொழி சொன்னாலும், அந்த நகரத்தை அங்கு உருவாக்குகின்றபொழுது, தரிசு நிலங்களை எடுக்கப் போகின்றோம். தரிசு நிலங்களை நம்பி, அங்கு ஆடுமாடுகளை வைத்திருக்கின்ற, வாழ்வாதாரங்களைக் கொண்டிருக்கின்ற ஏழை மக்களுடைய வாழ்வு என்னவாகும் என்பதனை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அந்தவகையில், இன்றைக்கு ஓர் அரசு நிலம், அது மேய்ச்சல் புறம்போக்காக இருந்தால், அதற்கு மாற்றாக இரண்டு மடங்கு மேய்ச்சல் நிலத்தை நாம் விலைக்கு வாங்கி, அந்த மேய்ச்சல் நிலத்தில் ஆடு மாடுகளை மேய்ப்பதற்குண்டான வழிவகைகளைக் கொண்டபின்தான், நாம் அந்த மேய்ச்சல் நிலங்களையே கையகப்படுத்துகின்றோம், அரசுக்கு அந்த நிலம் தேவைப்பட்டால். அப்படி, ஆடு மாடுகளுக்கே ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுத்தான், அந்த மேய்ச்சல் நிலங்களையே அரசு கையகப்படுத்துகின்ற ஒரு சட்டம், இன்றைக்கும் அரசிடம் இருக்கின்றது. ஆனால், இன்றைக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், மக்கள் வசிக்கின்ற ஒவ்வொரு பகுதியிலும், 33 ஆயிரம் ஏக்கர் நிலத்தை எடுக்கின்றபோது, அந்த ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் வசிக்கின்ற ஏழையெளிய மக்களுடைய வாழ்வாதாரம், எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதனை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

காலங்காலமாக, நூறாண்டுகளுக்கு மேலாக, உறவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்கள், எதிர்காலத்தில் சிதறுண்டு, அங்குள்ள பக்கத்து நகரமும், அதற்குப் பக்கத்தில் குடிசைகளும், குடிசைகளுக்குப் பக்கத்தில் இருக்கின்ற விளை நிலங்களும், என்னதான் இதற்காக எடுக்கப்படவில்லை என்றாலும், நகரங்கள் உருவாகும்பொழுது, அந்த விளைநிலங்களும், அவர்களுக்கு வாழ்வாதாரங்களாக இருக்கின்ற



2006 செப்டம்பர் 2] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

காடுகளும், எதிர்காலங்களில் அவற்றின நிலைப்பாடு, ஓர் உறுதித் தன்மை இல்லாத அளவிற்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, அங்கு வாழ்கின்ற இலட்சக்கணக்கான மக்கள், தங்களுடைய வாழ்க்கையை இழக்க வேண்டிய ஒரு சூழ்நிலையை, எதிர்காலத்தில் வருகின்ற ஒரு சூழ்நிலையை எண்ணித்தான், இன்றைக்கு அவர்கள், தங்களுடைய போராட்டத்தை அறிவித்திருக்கின்றார்கள். அங்கே ஓர் அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. அந்த மக்கள் திரண்டுவந்து, "எங்களுடைய பிணத்தின்மேல்தான் அந்தத் துணை நகரம் அமைக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்குமானால், அதற்கும் நாங்கள் தயார்" என்று சொல்லப்படுகின்ற ஒரு சூழ்நிலைகூட அங்கு உருவாகியிருக்கின்றது. ஆகவே, அரசு, எதிர்காலத்தில் வருகின்ற ஓர் அபாயகரமான சூழ்நிலையைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்றும், அங்கு வாழ்கின்ற இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பும், கடமையும் ஒரு நல்ல அரசுக்கு இருப்பதையும் கருத்தில்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கு துணை நகரம் அமைப்பதைக் கடுமையாக எதிர்க்கின்றோம், மக்களின் நலன்கருதி என்பதனை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகில் துணை நகரம் ஒன்று அமைப்பதைப்பற்றி, 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றை இந்த அவையிலே நான் வைத்து, அதுகுறித்து அன்றையதினம், 110-வது விதியின்கீழான அறிக்கை என்ற காரணத்தால், விவாதம் எதுவும் நடைபெறவில்லை; யாரும் குறுக்கிடவில்லை, அவையின் முறைப்படி.

அதற்குப் பிறகு, நேற்று இங்கு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் கோ.க. மணி அவர்கள், தன்னுடைய கருத்தை நாகரிகமாக இங்கே வெளியிட்டிருக்கின்றார். அதற்கு முன்பே, பாட்டாளி மக்கள் கட்சியிலேயுள்ள, சற்றுத் துடிப்பான நண்பர்கள், யாராவது அதிகாரிகள் இவற்றை ஆராய, இந்தப் பகுதிக்கு வந்தால், அவர்களைப் பிடித்துக் கட்டிப்போடுங்கள் என்றுகூட பொதுமக்களுக்குச் சொன்னார்கள்.

அதில், தங்களுக்கு உடன்பாடு இல்லை என்பதை திரு. கோ.க. மணி அவர்கள் என்னிடத்திலே நேற்றைக்கே குறிப்பிட்டார்.

இது யாரையும் கலந்துகொள்ளாமல், ஒருவேளை அ.தி.மு.க.–வினரைக் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போனதால், மற்றத் தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள் அத்தனைபேரையும் கலந்துகொண்டு, அவர்களுக்கு எடுத்துச்சொல்லி, நேற்றுகூட அதுபற்றி திரு. கோ.க. மணி அவர்களுக்கும், அமைச்சர் வீராசாமி அவர்களுக்கும்கூட, அதுபற்றிய ஒரு கருத்து விளக்கம் இங்கே நடைபெற்றது. நான் அவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சிகளான காங்கிரஸ் பேரியக்கம், கம்யூனிஸ்ட் கட்சிகள், பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய இந்தக் கட்சிகளையெல்லாம் கலந்துகொண்டு, இதை அறிவிக்க வேண்டுமென்ற நிலைப்பாடு எடுத்து, அறிவிக்கப்பட்டது. ஆனாலும், after thought என்றோ அல்லது எதிர்விளைவு என்றோ ஒன்று வருகிற நேரத்தில், அதைப்பற்றி யோசிக்கவேண்டும். மறுபரிசீலனை செய்யுங்கள் என்று தோழமைக் கட்சிகள் என்கின்ற முறையிலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, நேற்று இந்த அவையிலே இந்த ஆட்சிக்கு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அந்த வேண்டுகோளையே எங்கள்மீது வீசப்படுகின்ற வாள் என்று கருதி, அதைப் பயன்படுத்தலாம் என்று யாராவது எண்ணினால், அதைவிடப் பைத்தியக்காரத்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அது வேண்டுகோள்தான்; எந்தத் தூண்டுகோலாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது என்பது நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுது நம்முடைய அன்பிற்குரிய—நான் அன்றைக்குகூட சாது என்று வருணித்தேன்; இப்பொழுதும், அதே நிலையிலே சொல்கின்றேன்—அருமை நண்பர் பன்னீர்செல்வம் அவர்கள், எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள், இங்கே சொன்னார்; அவருடைய கட்சியினுடைய தலைவர், இதை வேகமாக எதிர்த்திருக்கிறார் என்று குறிப்பிட்டார். ஆக, எல்லாவற்றையும் எதிர்க்கிறார். நேற்றைக்குகூட, நடைபெற்ற விருந்தைப் பற்றிகூட எதிர்த்து அறிக்கை தந்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் இங்கே நடைபெறுகின்ற எந்தச் சம்பவமானாலும் அல்லது ஆட்சியின் எந்தச் சம்பவங்களானாலும் அதற்கெல்லாம் பதில் அறிக்கை வந்துகொண்டே இருக்கிறது.





நான் இரண்டு நாட்களாக எழுதுகின்றேன். அந்த file–ஐப் பற்றிய கடிதங்களுக்கு மாத்திரம் இன்னும் பதில் வரவில்லை; வரும் என்று எண்ணுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இதுவரையிலே அம்மையார் கையெழுத்துப் போடாத file–களே 1,112. ஏன் போடவில்லை என்பதற்கு இன்னும் சமாதானம் வரவில்லை, வரும் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கிடையே, நீங்களெல்லாம் எந்தக் கோணத்திலே இந்தத் துணை நகரத்தை எதிர்க்கிறீர்கள், வேண்டாம் என்று சொல்கிறீர்கள் அல்லது எனக்கு அறிவுரை கூறுகிறீர்களோ, அந்தக் கோணத்திலே அம்மையார் அவர்கள் அறிவுரை கூறாமல், அவர்கள் அறிவுரை கூறுகின்ற பாங்கைப் படித்துக்காட்ட விரும்புகின்றேன். ஏனென்றால், இது இந்த அவையினுடைய உறுப்பினராகவும், ஒரு பெரிய கட்சியினுடைய பொதுச் செயலாளராகவும், முன்னாள் முதலமைச்சராகவும், கலைத் துறையிலே எங்களுக்கெல்லாம் பழக்கப்பட்டவராகவும் உள்ள அம்மையார் செல்வி ஜெயலலிதா அவர்கள், கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட அறிக்கை. முழுவதும் படிக்க விரும்பவில்லை; ஒரு பகுதியை மாத்திரம் படித்துக் காட்டுகின்றேன். உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது; நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது; நம்முடைய சமுதாயம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது; அரசியல் நாகரிகம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது, என்பதை நீங்களே சிந்திக்க வேண்டும்; படித்துக் காட்டுகின்றேன்.

*முற்பகல் 10-40*

"சென்னை மாநகரத்திலேயுள்ள மக்களின் இடநெருக்கத்தைக் குறைப்பதற்காக, துணை நகரம் ஏற்படுத்த இருப்பதாகக் கருணாநிதி சொல்கிறார்."—கருணாநிதி சொல்கிறார்—"முதலில் அவர் வீட்டிலுள்ள பெண்டு–பிள்ளைகள், பேரன்–பேத்திகள், மறைந்த முதல் மனைவியின் உறவினர்கள், அவர்கள் வழிவந்த உறவினர்கள் ஆகியோர் முதலில் கோபாலபுரத்தைவிட்டும், சி.ஐ.டி. காலனியைவிட்டும் வெளியேறி. ஜனநெருக்கத்தை மேற்படி பகுதிகளில் குறைக்கட்டும்."—எனக்கு ஆலோசனை சொல்கிறார்—"சென்னை மாநகரத்திலேயுள்ள மக்களின் இடநெருக்கத்தைக் குறைப்பதற்காக, துணை நகரம் ஏற்படுத்த இருப்பதாகக் கருணாநிதி சொல்கிறார்; முதலில் அவர் வீட்டிலுள்ள பெண்டு–பிள்ளைகள், பேரன்–பேத்திகள், மறைந்த முதல் மனைவியின் உறவினர்கள், அவர்கள் வழிவந்த உறவினர்கள், இருக்கும் மனைவியின் உறவினர்கள், ஏற்படுத்திக்கொண்ட துணைவியின் வழிவந்த உறவுகள்

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 செப்டம்பர் 2

ஆகியோர் முதலில் கோபாலபுரத்தைவிட்டும், சி.ஐ.டி. காலனியைவிட்டும் வெளியேறி, ஜனநெருக்கத்தை மேற்படி பகுதிகளில் குறைக்கட்டும். மக்கள் நெருக்கடியைப்பற்றி மிகவும் கவலைப்படும் கருணாநிதி, தனது குடும்ப உறுப்பினர்களால் உருவாகியுள்ள ஜனநெருக்கடியை உணர்ந்து, அவர்களை முதலில் சென்னை மாநகரத்தைவிட்டு வெளியிலே அனுப்பி வைக்கட்டும். கருணாநிதிக்குத் துணை என்றால், மிகவும் பிடிக்கும்போலும்! அதனால்தான் சென்னை மாநகரத்திற்கு ஒரு துணையைத் தேடுகிறார்."

ஒரு அம்மையார், ஒரு பெண்மணி, எழுதிய அறிக்கை எவ்வளவு அழகாக, அதுவும் துணையைப் பற்றி சிலாகித்து, துணையே தேடாதவர்களைப்போல எழுதியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) 'துணையோடு அல்லது நெடுவழி போகேல்' என்று அந்தக் காலத்திலேயே, பழைய பாடல்கள் உண்டு. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) தைரியம் இருந்தால் எதிர்கொள்ளுங்கள், இதைச் சந்தியுங்கள். தைரியம் இருந்தால் சந்தியுங்கள் தாராளமாக. அவ்வளவுதான் சொல்லமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) ஏன் படிக்கக்கூடாதா? இதைப் படிக்கக்கூடாதா? இந்த அறிக்கையைப் படிக்கக்கூடாதா?

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று குறுக்கிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். எழுதியிருக்கிற அறிக்கையை முதலமைச்சர் வாசிக்கிறார்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலில் முதலமைச்சர் அதை முடிக்கட்டும். முதல்வர், அதைச் சொல்லிமுடிக்கட்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள் எல்லோரும். உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரு. செங்கோட்டையன் எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதல்வர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள், எந்தப் பிரச்சினையை எழுப்பினாரோ, அந்தப் பிரச்சினையைப் பற்றி... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள், எல்லோரும். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். எல்லோரையும் அமைதியாக உட்காரச் சொல்லுங்கள். உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலமைச்சருடைய உரையை அவர் முடித்துவிடட்டும். பிறகு நீங்கள் பதில் சொல்லலாம். (குறுக்கீடு) முதல்வரின் உரை, பாதியில் இருக்கக்கூடாது அல்லவா? அவர் முழுவதும் சொல்லி முடித்துவிடட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களும் உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடன், நீங்கள் பதில் சொல்லுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதல்வர் அவர்களின் உரையின் பாதியில் நீங்கள் தலையிடாதீர்கள். அவர் பேசி முடித்துவிடட்டும். பிறகு நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. பன்னீர்செல்வம் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நீங்கள் அச்சடித்து.. (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம் அவர்களே, (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இதற்கு நான் பதில் சொல்லக்கூடாதா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Mr. பன்னீர்செல்வம், நான் சொல்வதைக் கேளுங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். முதல்வர் பேசியபிறகு, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதில் சொல்லலாம். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலில் முதல்வர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*(முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.*

*(உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள், பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து கூச்சலிட்டார்.)*

*திரு. கலைராஜன் (குறுக்கீடுகள்) திரு. கலைராஜன் (குறுக்கீடுகள்) கலைராஜன், (கூச்சல்–குழப்பம்) அவரவர்கள் இருக்கையில் போய் உட்காருங்கள். திரு. கலைராஜன். (குறுக்கீடுகள்) எதிர்க் கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் துணைத் தலைவர் சொல்வதற்குக் கட்டுப்படுங்கள். அவரவர்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) முதலில், முதல்வர் உரை பின்னாலே எதிர்க் கட்சித் துணைத் தலைவர் பதில் சொல்லலாம். அதற்கு வாய்ப்புத் தருவேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதெல்லாம் அப்புறம், கடைசியிலே. முதலிலே, முதல்வர் அவர்கள் உரையை முடித்ததற்குப் பிறகுதான் பதிலுக்கு வாய்ப்பு. முதலில் உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) ஆமாம். அவருடைய உரையை முடித்துவிடட்டும். கடைசியிலேதான் வாய்ப்பு வழங்கப்படும். (குறுக்கீடுகள்) துணைத் தலைவர்,* procedure *என்று ஒன்று இருக்கிறது. முதல்வர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள். இது முறையல்ல. (குறுக்கீடுகள்) துணைத் தலைவர், நீங்கள். உங்கள் உறுப்பினர்களை முதலில் உட்காரச் சொல்லுங்கள். முதல்வர் உரையை முடித்ததற்கு அப்புறம் நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. செங்கோட்டையன், உங்கள் உறுப்பினர்களைக் கொஞ்சம் உட்காரச் சொல்லுங்கள். முதல்வர் நீங்கள் படிக்கலாம்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் கேட்கிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவரை நான் மிகுந்த பணிவன்போடு கேட்கிறேன். இது என்ன படிக்கக்கூடாத அறிக்கையா? படிக்கத்தகாத அறிக்கையா? அதையாவது சொல்லுங்கள். இந்த அவைக்கு– *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதல்வர் உரையாற்றிக்*





*கொண்டிருக்கிறார்கள். (கூச்சல்–குழப்பம்) அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்) அவை முன்னவர். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. ஆறுமுகம், திரு. ஆறுமுகம் *(குறுக்கீடு)* திரு. ஆறுமுகம், உட்காருங்கள். திரு. ஆறுமுகம், உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முதலில் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதல்வர் பேசி முடித்ததற்கு அப்புறம்தான் உங்களுக்கு வாய்ப்பு. உட்காருங்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் எதுவும் இனிப் பேசத் தேவையில்லை. நான்... *(குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பன்னீர்செல்வம், உங்கள் உறுப்பின்ர்கள் எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காரச் சொல்லுங்கள். ஒரு கட்டுப்பாட்டில் வையுங்கள் அவர்களை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். முதல்வர் முடித்துவிடட்டும் அதை. முடித்ததற்கு அப்புறம் நான் வாய்ப்புத் தருகிறேன் என்கிறேன் அல்லவா? நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். முதல்வர் படிக்கட்டும். அதற்கு அப்புறம் பதில் சொல்லுங்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் செங்கோட்டையன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மன்னிக்கவும். *(கூச்சல்–குழப்பம்)* நீங்கள் சொல்லிவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இது முறையில்லை. அவர் முடிக்கட்டும். நான்தான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் முரண்டு பிடித்தால் என்ன அர்த்தம்? இது முறையல்ல. முதல்வர் முதலிலே முடிக்கட்டும். அதற்குப்பிறகு நீங்கள் பதில் சொல்லுங்கள் என்று சொல்கிறேன் அல்லவா?*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். அமைதியாக நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

வெளிநடப்புச் செய்துகொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) திரும்ப உள்ளே இருந்துகொண்டு குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) மற்றவர்கள், அவரவர்கள் இருக்கையில் உட்காருங்கள். இருக்கையில் மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*முற்பகல் 10-50*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்பி, அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, அந்த பதிலில் எதிர்க்கட்சித் தலைவருடைய அறிக்கையையும் எடுத்துக்காட்டித்தான், இங்கே பேசுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கையிலே தெரிவித்திருக்கிற...

*(வெளியேறிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் லாபியில் நின்று குரலெழுப்பினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வராண்டாவில் நின்று யாரும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியிருக்கிற செய்திகள், எப்படிப்பட்ட செய்திகள் என்பதை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டுகிறபோது, தங்களுடைய தலைவருடைய அறிக்கையிலே இருக்கிற செய்திகள், தங்களை மிகப் பெரிய அளவிற்குப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்று எண்ணுகிற காரணத்தால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், தொடர்ந்து கூச்சலிட்டு, குழப்பம் விளைவித்து அவையினுடைய கட்டுப்பாடு, விதிகளை மீறி





முறைகேடுகளைச் செய்துவிட்டு, பின்னர் வெளியேறி இருக்கிறார்கள். எனவே, அவர்கள், தங்களுடைய தலைவரை அவர்கள் தலைவர் அல்ல என்று அறிவிக்கத் தயாரா? அல்லது தலைவருடைய அறிக்கை அவருடைய அறிக்கை அல்ல என்று நிரூபிக்கத் தயாரா? இன்னும் சொல்லப்போனால், இங்கே உள்ளவர் துணைத் தலைவர்; அறிக்கை வெளியிட்டவர் தலைவர். எனவே, தலைவருடைய அறிக்கையை இங்கே படிப்பதையே எதிர்த்து, அதிலே வருகிற செய்திகள் தங்களுடைய கட்சியினுடைய தரம் குறைவானது என்பதை எடுத்துக்காட்டுகின்ற காரணத்தால், ஆத்திரப்படுகிறவர்களை தயவுசெய்து சட்டமன்ற நடவடிக்கையில் இன்றையதினம் கலந்துகொள்ளாமல் விலக்கிவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், அவைக்குள் திரும்ப வந்துகொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். திரு. அப்பாவு, எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். அப்படியே இருக்கையில் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) Please be seated. Please sit down. எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அவையிலே அவரவர்கள் இருக்கையிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அமைதியாக உட்காருங்கள், எல்லோரும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Sir, Speaker Sir...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் வெளியேறினீர்கள் அல்லவா? திரும்பவும் ஏன்... (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** ஒரு நிமிடம் என்னை allow பண்ணுங்கள். நான், என் கருத்தை record பண்ணிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவ்வளவுபேரும் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் இருக்கையில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் அவையில் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள் எல்லோரும். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) முதலில், உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) நான் பண்ண வேண்டிய வேலையை நான் பார்க்கிறேன். நீங்கள் உட்காருங்கள். உங்கள் வேலையைப் பாருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜேந்திரன், உட்காருங்கள். திரு. செந்தில் பாலாஜி, உங்கள் இடத்திற்குப் போங்கள். திரு. ஜெயக்குமார், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். முதலில் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். நான் உங்களை எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போங்கள். திரு. ஜெயக்குமார், நீங்கள் இடைஞ்சல் பண்ணுகிறீர்கள். உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** Mr. Speaker, Sir,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை (கூச்சல்–குழப்பம்) இந்தக் கூட்டத்தொடர் அமைதியாக நடைபெற்றது. இதே அவையிலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட, வந்து இருந்து, இரண்டு மணி நேரம் அமைதியாகப் பேசிவிட்டுச் சென்றார்கள். அந்த அளவுக்கு எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்பை அளிக்கிறீர்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இப்போது எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு, அவர்களுடைய கட்சித் தலைவர் விட்ட அறிக்கையிலிருந்தே எடுத்துக்காட்டுகளைச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதையொட்டி எழுந்த



2006 செப்டம்பர் 2] [திரு. பரிதி இளம்வழுதி]

பிரச்சினையில் அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்டார்கள். நீங்கள் வெளியேற்றவில்லை, அவர்களாகவே வெளிநடப்புச் செய்துவிட்ட பிறகு, லாபியில் நின்றுகொண்டு, கூச்சலும், குழப்பமும், சண்டித்தனமும் வேறு செய்து கொண்டிருந்தார்கள். அதைப் படம் எடுத்த, எங்கள் செய்தித் துறை Camera man-ஐ, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செந்தில் பாலாஜியும், திரு. ஜெயக்குமாரும் அடிக்க வந்தது எந்தவகையில் நியாயம்? அங்கிருந்த காவலர்களைத் தாக்கியிருக்கிறார்கள். படம் எடுக்கின்ற Camera man-களைத் தாக்குகிறார்கள். இது எந்தவகையில் நியாயம்? இதற்குத் தாங்கள் ஒரு சரியான தீர்வைச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே என்னுடைய அனுமதியோடுதான்... (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன், நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். அவையிலே என்னுடைய அனுமதியோடுதான் இங்கே T.V.–கருவியில் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; Camera–வில் படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கேயிருந்து வெளியே போனவர்கள், அங்கே போய், அங்கே Camera–வில் படம் எடுக்கின்றவர்களை, T.V.–கருவியில் படம் எடுத்துக் கொண்டிருக்கிறவர்களை அடித்திருக்கிறார்கள். இவையெல்லாம் கண்டிக்கத்தக்கவை. வெளியேறிய உறுப்பினர்கள், இந்த மாதிரியாக அவர்களை அடிப்பது மிகவும் கண்டிக்கத்தக்க செயல். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். (குறுக்கீடு) Mr. செங்கோட்டையன், என்ன? சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. ஜி.கே. மணி சொல்லட்டும். சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சி நடத்தத்தக்கூடியவர்கள், நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக, அரசியல் கட்சியை நடத்திக்கொண்டு, மக்கள் உரிமைக்காகப் பேசுவதிலே தவறில்லை. ஆனால், ஒரு கட்சியை நடத்தக்கூடியவர், கட்சியினுடைய தலைவர் பொறுப்பிலே இருப்பவர், அதிலும் குறிப்பாக, இந்த நாட்டிலே இரண்டு முறை முதலமைச்சராக இருந்தவர், இன்று எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துகொண்டு, அறிக்கை விடுவது, அல்லது பேசுவது என்பது நாகரிகம் கருதி இருக்கவேண்டும். (கூச்சல்–குழப்பம்) நான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அறிக்கையையும் படிக்கவிடமாட்டேன் என்கிறீர்கள். எதிர்க்கட்சிக் கொறடா திரு. செங்கோட்டையன், கொஞ்சம் கேளுங்கள். அறிக்கையையும்

படிக்கக்கூடாது என்கிறீர்கள், அறிக்கையையும் விடுவீர்கள். அப்படியானால் உங்களுக்குள்ளே எந்தக் கட்டுப்பாடும் கிடையாதா?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலிலே நாகரிகம் இருக்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவி விட்ட அறிக்கையைப் படிக்கக்கூடாது என்கிறீர்கள். அதைப் பற்றிப் பேசக்கூடாது என்கிறீர்கள். அது என்ன முறை? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். திரு. மணி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, தன்னுடைய பேச்சு அல்லது அறிக்கை நாகரிகம் கருதி இருக்கவேண்டும். ஆனால், இவ்வளவு உயர்ந்த பொறுப்பிலே இருந்துகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்தமாதிரி, அநாகரிகமாக, கடைக்கோடியில் இருக்கிற நாட்டு மக்கள், சாதாரண ஒருவன்கூட ஏற்றுக்கொள்ளாத வகையில், இந்த நாட்டு ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக, அறிக்கை விடுவது அல்லது பேசுவது என்பது, ஜனநாயகத்தால் கண்டிக்கப்படக்கூடிய ஒன்று. ஆகவே, முன்னாள் முதலமைச்சர் இன்றைய எதிர்க்கட்சித் தலைவி கொடுத்திருக்கிற அறிக்கை என்பது யாரும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இது அநாகரிகமான ஒன்று (குறுக்கீடுகள்) மகா மட்டரகமான, அநாகரிகமான செயல் என்பதை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன். அதுமட்டுமல்ல...(குறுக்கீடுகள்)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்கள் தலைவி... (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள். உங்கள் தலைவி கையெழுத்துப் போட்டுக் கொடுத்த அறிக்கையைத்தான் இங்கே வாசிக்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள் இது பத்திரிகைகளுக்குக் கொடுக்கக்கூடிய அறிக்கை. எவ்வளவோ இலட்சப் பேர் படிக்கப் போகிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவி கையெழுத்துப் போட்டுக் கொடுத்த அறிக்கைதான் இங்கே வாசிக்கப்படுகிறது (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.



**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே...

(திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. டி. ஜெயக்குமார் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கையை நோக்கி வந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? நீங்கள், வெளியிலே அறிக்கை வரக்கூடிய பத்திரிகையிலேதான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இடத்திலே போய் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டினுடைய முதலமைச்சராக ஐந்து முறை இருந்தவர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. பொள்ளாச்சி ஜெயராமன் போங்கள், உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். No, no, Thiru Jeyakumar, go to your seat please, போங்கள், please. உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள் திரு. ஜெயக்குமார். போங்கள். I request you, please go to your seat. (குறுக்கீடுகள்) போங்கள்; உங்கள் இடத்திற்குப் போங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் நாகரிகம் கருதி நடக்கக்கூடிய (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உரையை முடித்துவிடட்டும். நீங்கள்தான் அவரைப் பேசுவதற்கு allow பண்ணினீர்கள். (குறுக்கீடுகள்) என்ன? சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் பற்றி இப்போது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல்வேறு அறிக்கைகள், பல்வேறு தலைவர்கள், பல்வேறு நேரங்களிலே விடுகிறபோது, அவை சட்டமன்றத்திலே... (கூச்சல்-குழப்பம்)

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இதுவரையிலே விவாதிக்கப்பட்டிருக்கிறதா? ஒன்று; இரண்டாவதாக, அறிக்கையைமட்டும் பேசியிருந்தால் பரவாயில்லை. முதல்வர் அவர்கள், கொச்சைப்படுத்தி வேறு ஒரு வாக்கியத்தைச் சொன்ன காரணத்தினாலேதான், நாங்கள் அதற்குள்ளே வரவேண்டியிருந்ததே தவிர, ஆகவே அறிக்கை மட்டும் படித்திருந்தால் எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால், ஒருவர் அறிக்கை விடுவதையே நாம் பேசிக் கொண்டிருப்போமேயானால், சுனாமி வருகிறபோது எவ்வளவு கேவலமான அறிக்கைகள் வந்தன? அந்த அறிக்கைகளைப்பற்றி யாராவது சபையிலே அன்றைக்குப் பேசினார்களா என்பதை இந்தச் சபை தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) சொல்கிறேன். கேளுங்கள். திரு. செங்கோட்டையன், உங்கள் தலைவி மட்டும் மற்றவர்களை attack பண்ணி அறிக்கை கொடுக்கலாம்; உங்கள் தலைவியைப்பற்றி மற்றவர்கள் சொல்லக்கூடாதா? என்ன முறை இது? முறையே இல்லை இது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, என்ன? சொல்லுங்கள், சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், அறிக்கை விடுவதிலே அல்லது பொதுக் கூட்டங்களிலே பேசுவதிலே தவறில்லை. ஆனால், எழுதக்கூடிய, சொல்லக்கூடிய அறிக்கைகளில், பேச்சுக்களில், நாகரிகம் இருக்க வேண்டுமா? வேண்டாமா? என்னுடைய கேள்வி



2006 செப்டம்பர் 2] [திரு. ஜி.கே. மணி]

அதுதான். அதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா? அதே நேரத்திலே... (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்திற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிற்கு ஐந்து முறை முதலமைச்சராக இருந்தவர். இந்திய நாட்டுத் தலைவர்களாலே, பல்வேறு பெரும் தலைவர்களாலே பாராட்டப்பட்ட ஒரு தலைவர், அரசியல் நாகரிகத்தைக் கடைப்பிடிக்கக்கூடிய தலைவர். அதற்கு நான் எடுத்துக்காட்டைக்கூட சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு நான் எடுத்துக்காட்டைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தமிழரசு, அமைதியாக உட்காருங்கள். திரு. தமிழரசு அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. மூர்த்தி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள) அமைதியாக உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சருடைய அரசியல் பண்புக்கு எடுத்துக்காட்டைக்கூட சொல்கிறேன். எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், இங்கே சட்டப் பேரவைத் தலைவர் அவர்களாலே வெளியேற்றப்பட்டார்; நீக்கி வைக்கப்பட்டார்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

*முற்பகல் 11–05*

**திரு. ஜி.கே. மணி:** ஆனால், நாகரிகம் கருதி, அவர் நீக்கி வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, "சட்டமன்றத்திற்குள்ளே வந்து ஜனநாயகக் கடமை ஆற்றுவதற்கு அவருக்கு வாய்ப்பை அளியுங்கள்" என்று தங்களிடத்திலே கேட்டு, அனுமதிக்கப்பட்ட வரலாறு, சமீப நாட்களுக்கு முன்பு. இப்படி எதிர்க்கட்சிகள் என்றும் பாராமல், அவர்களுக்கு ஜனநாயக உரிமையை வழங்க வேண்டுமென்ற ரீதியிலேதான் சட்டமன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் இங்கே

செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதுபோல, அவருடைய அரசியல் பண்புகளுக்கு என்னாலே நிறைய எடுத்துக்காட்டுகளைச் சொல்லிக்கொண்டிருக்க முடியும். இப்படிப்பட்ட நம்முடைய பேரவையை, ஜனநாயக ரீதியாக, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று சொல்லக்கூடிய வகையிலே, பேரறிஞர் அண்ணாவின் வாக்கிற்கேற்ப, எதிர்க்கட்சியினை மதிக்கிற ஒரு முதலமைச்சர், மற்றவர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய முதலமைச்சர், பேரவையை நல்ல முறையில் நடத்திக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், திட்டமிட்டு, கலவரத்தை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தில்... (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) முடித்துவிடட்டும். (குறுக்கீடு) இங்கே ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்துநிற்க முடியாது. . திரு. செங்கோட்டையன். ஒவ்வொரு வார்த்தைக்கும் எழுந்து நிற்க முடியாது. அவர் முடிக்கட்டும். திரு. மணி, பேசி முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** நான் பேசி முடித்துவிடுகிறேன். அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பிரச்சினையைப் பேசுவதைவிட்டுவிட்டு... (குறுக்கீடுகள்) மக்கள் பிரச்சினையைப் பேசுவதை விட்டுவிட்டு, (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்களைப் பற்றி, அவருடைய குடும்பத்தாரைப் பற்றி, பேரப் பிள்ளைகளைப் பற்றி, இன்னும் குடும்பத்தைப் பற்றிப் பேசுவது எவ்வளவு அநாகரிகமான செயல் என்பதை நான் மட்டுமல்ல, நாட்டு மக்கள் எல்லாம் எண்ணிப் பார்ப்பார்கள். இதற்குச் சரியான பாடத்தையும் கொடுக்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே பாடம் புகட்டியிருக்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்த தமிழ்நாட்டு மக்கள், இப்படி அநாகரிகமான அரசியல்வாதிகளை வருங்காலத்திலே, பொது வாழ்க்கையிலேயிருந்து, அரசியலிலேயிருந்து அப்புறப்படுத்தக்கூடிய காலம், வெகு தொலைவில் இல்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி (குறுக்கீடுகள்)



அதேநேரத்தில், சட்டமன்றப் பேரவையிலே உறுப்பினராகப் பணியாற்றக்கூடியவர்கள் வெளிநடப்புச் செய்கிறார்கள். வெளிநடப்புச் சென்றவுடனே, செய்தித் துறையிலேயிருந்து படம் எடுப்பவர்களை அடிக்கச் செல்வது, (குறுக்கீடுகள்) அவர்களைத் தாக்குவது எவ்வளவு கண்டனத்திற்குரியது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முறையை சட்டமன்றத்திலே அனுமதிக்கக் கூடாது என்பதைச் சொல்லி, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த அறிக்கையை, அநாகரிகமான, ஜனநாயகத்திற்கு விரோதமான அந்த அறிக்கையைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன்; எச்சரிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபைக்குப் பல்வேறு மரபுகள் இருக்கின்றன. பல்வேறு பண்புகளை, இந்தச் சபை கட்டிக் காத்து வந்திருக்கிறது. இந்த மன்றத்திலே பல ஆன்றோர்களும், சான்றோர்களும் உரையாற்றியிருக்கின்றார்கள். இந்த நிலையில், தமிழகத்தினுடைய அரசியல் நிலை எவ்வளவு கேவலமாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்கு நம்முடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன், திரு. விசுவநாதன், இரண்டு பேரும் அமைதியாக உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** எவ்வளவு கேவலமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்பதையும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சுதர்சனம் Sir, நீங்கள் பேசுங்கள். மற்றவர்கள் எல்லாம் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லாம் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சுதர்சனம், நீங்கள் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். திரு. சுதர்சனம் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ எதிர்க்கட்சி என்று சொன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற, பின்னாலே இருக்கின்ற ஒரு சிலர்தான் என்று எண்ணிக்கொண்டு, இங்கே கூச்சலையும்

குழப்பத்தையும் விளைவிக்கிறார்கள். அதை வன்மையாகக் காங்கிரஸ் கட்சி கண்டிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், நாங்கள் பேசுவதற்கு எங்களுக்கு உரிமை உண்டு. நாங்கள் எழுந்தவுடனே அவர்கள் கூச்சல் போடுவது என்பது எவ்வளவு அநாகரிகமான செயல் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அறிக்கை கொடுப்பதுதான் நியாயம்; அவர் பேசுவதுதான் நியாயம் என்று, அவர்கள் இந்த மன்றத்திலே எண்ணிக்கொள்வார்களானால், அப்படி அவர்கள்தான் எண்ணிக்கொள்ள வேண்டும். இங்கே இருக்கின்ற மக்கள், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே இருக்கின்ற பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் எல்லாம், எது நியாயம் என்று அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். அவர்கள் சொல்வது, அவர்களுக்கு வேண்டுமானால் நியாயமாக இருக்கலாம். அது மக்களுக்கும், இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நியாயமாக எடுபடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைப் படிக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஒரு துணை நகரத்தைப்பற்றி ஒரு பிரச்சினையைக் கிளப்பி, அதற்கு விளக்கம் வேண்டும் எனக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தந்துகொண்டிருக்கின்றார். எங்கேயோ இருக்கின்ற ஒருவர், அறிக்கை கொடுக்கவில்லை. தமிழகத்தைப் பத்தாண்டுக் காலம் ஆட்சி புரிந்தவர்கள், இந்த மன்றத்தில் இன்றைக்குப் பொறுப்புள்ள எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர்கள் ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை முதலமைச்சர் படிக்கிறார்கள். அந்த அறிக்கையைப் படிக்கக்கூடாது என்று சொல்வதிலே எந்தவிதமான அர்த்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த அறிக்கையிலே இருக்கின்ற வாசகங்களைப் படிக்கின்றபோது, இவர்களுக்கு ஏன் கோபம் வருகிறது? ஏன் இவர்கள் நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரை, அவர்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லையா? அல்லது இவர்கள் அந்த அம்மையாருடைய அறிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லையா? இதிலே எது உண்மை என்று தெரிய வேண்டும். அதுமட்டுமல்ல... (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? நீங்கள் அமைதியாக இருங்கள். கொஞ்சம் அமைதியாக இருங்கள். அவருடைய கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார் இல்லையா? சொல்லட்டும்.





**திரு. டி. சுதர்சனம்:** ஒரு முதலமைச்சர் பேசுகின்றார். இந்த அவையிலே முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோதோ, அல்லது அவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோதோ, மற்றவர்கள் பேசக்கூடாது என்பது ஒரு மரபு. அந்த மரபை மீறி, முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கின்றபோதே எழுந்து கூச்சல் போடுவது, ஒரு அநாகரிகமான முறையிலே நடந்துகொள்வது, பக்கத்திலே இருக்கின்ற பத்திரிகையாளர்கள் படம் எடுக்கப் போகின்றபோது, அவர்களைத் தாக்க முற்படுவது என்று இப்படி நடந்தால், இங்கே (குறுக்கீடுகள்) இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய நிலை, எப்படித் தரம் தாழ்ந்து போய்க்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேரும், பத்திரிகையாளர்கள் உட்பட பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் அறிந்து தெரிந்து வைத்து இருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள், மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பிரதிநிதிகள்; மக்களுடைய பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதற்கு இந்த மன்றத்திலே அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். நாகரிகமான முறையிலே அவர்கள் நடந்துகொள்ளவேண்டும். யாரைப் பற்றி வேண்டுமானாலும் விமர்சனம் செய்யலாம்; நாகரிகத்தின் ஒரு எல்லைக்குட்பட்டுதான் அதை விமர்சனம் செய்யவேண்டும். 'துணை நகரம்' என்று சொல்கின்றபோது, அதுகுறித்து பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி எல்லாம் பேசி, முதலமைச்சரை இங்கே இருந்து வெளியே போக வேண்டும் என்று சொல்வதோடு, அந்த அறிக்கையிலே, கொச்சைப்படுத்துகின்ற வார்த்தைகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். இங்கே இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன்; தயவுசெய்து கண்ணியத்தைக் காப்பாற்றுங்கள். உங்கள் கடமையையாற்ற வந்திருக்கின்றீர்கள். கடமை ஆற்றுவதற்குப் பதிலாக இங்கே கூச்சல் போடுவதோ, குழப்பம் விளைவிப்பதோ, இந்த நாட்டு மக்களுக்கு ஏற்புடையது அல்ல. இதைக் காங்கிரஸ் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசிவிட்டார் அல்லவா? (குறுக்கீடுகள்) அவர் பேசிவிட்டார் அல்லவா? (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். *(குறுக்கீடு)* எதிர்க் கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* திரு. கோவிந்தசாமி, நீங்களும் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் பேசுகிறாரா? அவர் பேசிய பிறகு நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கொஞ்சம் யோசித்து, யோசித்துப் பேசுவார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. சிவபுண்ணியம் பேசுகிறாரா? *(குறுக்கீடு)* இல்லை, திரு. சிவபுண்ணியம் பேசுகிறாரா? *(குறுக்கீடு)* பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசுகிறாரா? அவர் பேசிய பிறகு நான் பேசுகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, நீங்கள் பேசுகிறீர்களா? சரி, right. திரு. சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொண்டு வருகிற எந்த ஒரு புதிய திட்டமாக இருந்தாலும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் தன்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு அல்லது தேவைப்படுகிற நேரங்களில் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு, நல்ல திட்டம் என்று வருகின்றபோது அதை ஆதரிப்பதற்கு, ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் பரிபூரணமான உரிமை உண்டு. ஆனால், அப்படி அதை எதிர்த்து அறிக்கைகள் வெளியிடுகிறபோது, அதில் நாகரிகம் பின்பற்றப்பட வேண்டும்; பண்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை மார்க்சிஸ்ட் கட்சி வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறது. முன்னாள் முதலமைச்சர் இந்த அவையினுடைய தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர், கொடுத்து இருக்கக்கூடிய அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றியும், அவருடைய பிள்ளைகளைப் பற்றியும், பேரன், பேத்திகள், உறவினர்களையெல்லாம் இழுத்து, அவர்களெல்லாம் சென்னையைவிட்டு வெளியேற வேண்டும்; அவர்கள் வெளியேறிவிட்டால், சென்னை நகரினுடைய ஜனப் பெருக்கம் குறைந்துவிடும் என்பதைப்போல, நாகரிகமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி, தேவையில்லாமல் முதல்வருடைய குடும்பத்தை இழிவுபடுத்தும் நோக்கத்தோடு, இன்றைக்கு இந்த அறிக்கை வெளியிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, "எப்போதும் துணையை விரும்புகிற முதல்வர், சென்னைக்கு அருகிலே ஒரு துணை நகரம்" என்று, அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறபோது, அவர்கள்





என்றுமே துணையை விரும்பாதவர்களா என்று கேட்பதிலே என்ன தவறு என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். ஆகவே, பொறுப்பில்லாத... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள், எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. செங்கோட்டையன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், நான் பேசிய பிறகு நீங்கள் விளக்கம் சொல்லுங்கள். அவர் அனுமதிக்க தயார் என்கிறார்; நான் பேசியதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உங்கள் தலைவரே, "அவர் பேசட்டும்; பிறகு நான் அதற்குப் பதில் சொல்லுகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

*முற்பகல் 11-15*

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, பொறுப்பில்லாத இப்படி நாகரிகமற்ற ஓர் அறிக்கையை வெளியிட்டுவிட்டு, அவர்களுடைய அந்த அறிக்கையை இந்த அவையிலே quote பண்ணிக் காட்டுவதிலே எந்தத் தவறும் இல்லை. ஆகவே, தேவையில்லாத, நாகரிகமற்ற, அநாகரிகமான அறிக்கையை வெளியிட்டுவிட்டு, கடைசி நாள், இன்று இந்தச் சபை நடவடிக்கையை நடத்தவிடாமல் செய்கிறார்கள். ஏராளமான பிரச்சினைகளை இங்கே எழுப்புவதற்காக உங்களிடத்திலே நாங்கள் அனுமதி கேட்டிருக்கிறோம். அவற்றைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு இந்தச் சபையைக் கடைசி நாள் அன்று பயன்படுத்தவிடாமல், தேவையற்ற கூச்சல் குழப்பங்களை விளைவித்து, சபை நடவடிக்கையை வீணாக்குகிற, விரயமாக்குகிற அ.தி.மு.க. உறுப்பினர்களுடைய நடவடிக்கைகளை மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையிலே, மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு

பிரச்சினையை எழுப்பினார்கள். நேற்றையதினம், பட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மரியாதைக்குரிய திரு. கோ.க. மணி அவர்கள் இதன்மீது அவர்களுடைய கருத்துகளைச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்கு விரிவான பதிலுரையைத் தந்திருக்கிறார்கள். இன்றையதினம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தத் துணை நகரம் அமைப்பதற்கான கருத்துகளைப்பற்றியும், அதிலே இருக்கிற அபாயங்கள் குறித்தும், அதிலே இருக்கிற பாதிப்புகள் குறித்தும், அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு உரிய முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய தலைவராக இருக்கிற, சட்டமன்றக் கட்சித் தலைவராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுத்துபூர்வமாக வெளியிட்டு இருக்கிற அறிக்கையை ஆதாரப்படுத்தி, அதனைப் படித்துக் காண்பித்தார். என்ன கேள்வியை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டாரோ, அதற்கு உரிய பதிலை அவர்களுடைய தலைவர் சொன்ன விஷயத்தைத்தான், இந்த அவையிலே பதிவு செய்தார்களேதவிர, வேறு ஒரு காரணத்தையோ அல்லது வேறு ஒரு சம்பவத்தையோ இந்த அவையிலே வெளியிடுவதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கவில்லை என்பதை முதலிலே தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்... இந்த (குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எப்போதும் புராணம் பாடியே பழகியவர்களுக்குத் தனியாகப் பாடத் தெரியாது; தொடர்ந்து இப்படியே பாடியவர்கள் அவர்கள். வேறு என்ன செய்ய முடியும் அவர்களாலே? விவரங்களைத் தெரிந்து, இந்த அவையிலே சொல்வதற்குரிய முயற்சியை எடுக்காமல்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன். (குறுக்கீடு) திரு. கலைராஜன். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** அவர்களுடைய தலைவர் அவர்கள், வெளியிட்டிருக்கிற அறிக்கையை இந்த நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? நான் மனசாட்சியோடு கேட்கிறேன். அண்ணா தி.மு.க. நண்பர்களே, இங்கே வேண்டுமானால் நீங்கள் பேசலாம். பேசவில்லையென்றால் வெளியில் சென்று உங்களுடைய தலைவரிடம்



பதில் சொல்ல முடியாது. அப்படி ஒரு நிர்ப்பந்தம் உங்களுக்கு இருக்கிறது. ஆனால், மனசாட்சியின்படி நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா? இங்கே இருக்கிற பத்திரிகையாளர்கள் ஏற்றுக்கொள்வார்களா? நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? ஒரு துணை நகரம் அமைப்பதைப்பற்றிய கேள்வி வருகிறபொழுது, இன்றைய முதலமைச்சர் அவர்களுடைய குடும்பத்தைப்பற்றி, பேரன் பேத்திகளைப்பற்றி, அதைப்பற்றி பேசிதான் அறிக்கை விடவேண்டுமா? வேறுவித காரணங்களைச் சொல்லி, "அது மக்களைப் பாதிக்கிறது; ஆகவே, அதை நிறுத்த வேண்டும்; மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்று இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுக்க வேண்டாமா? ஒரு பொறுப்பான எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலே, அதைத்தானே செய்ய வேண்டும்? துணை நகரம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, "துணை என்றாலே விருப்பம்" என்று சொன்னால், இதை எப்படிச் சொல்வது? குழந்தை குட்டிகளோடு, குடும்பத்தோடு இருப்பது, முன்னாள் முதலமைச்சருக்குப் பிடிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு என்ன செய்ய முடியும்? இது பலமுறை, இந்த அவையிலே, சென்ற காலத்தில் பேசப்பட்டிருக்கிறது. குடும்ப card பற்றி பேசுகிறபொழுது, "குடும்ப card-ஐப்பற்றித் தெரியாது" என்று உங்களுடைய முதலமைச்சராக இருந்தவர் சொன்னார். நான் சொன்னேன்: "நான் குடும்பத்தோடு இருக்கிறேன்; ஆகவே, எனக்குக் குடும்ப card பற்றித் தெரியும்" என்று பதிவுசெய்து இருக்கிறேன்— குடும்பம், குடித்தனம் இவற்றைப்பற்றி, இங்கே பேசுவதா, இந்த அவையினுடைய வேலை? ஆகவே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள், இந்த அறிக்கையின்மூலமாக அவர் வெளிப்படுத்துவது என்பது, அவருடைய வக்கிரமான எண்ணங்களை வெளிப்படுத்தும் முயற்சியாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரு மோசமான சம்பவத்தைச் சுட்டிக்காட்டுவதற்குரிய முயற்சியாக இருக்கிறது. சபையினுடைய மரபுகளை மீறுகின்ற முறையிலே பேசுகிறார். இங்கே உறுப்பினர்களும் பேசுகிறார்கள். அவர்களுடைய தலைவர் வெளியிலே அவ்வாறு அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார் என்று சொன்னால், உண்மையிலேயே இது அ.தி.மு.க.-வினுடைய அரசியல் நாகரிகம் இல்லாத போக்கினையே எடுத்துக்காட்டுகிறது என்பதை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே

சொல்லி, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு இருக்கிற இந்த அறிக்கை என்பது, மரபு மீறிய அறிக்கையாக இருக்கிறது; நாகரிகம் இல்லாத அறிக்கையாக இருக்கிறது; அரசியல் நாகரிகத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது; தமிழக மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; இவர்களுக்கு உரிய தண்டனை வழங்குகிற காலம், வெகுவிரைவில் இருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த அறிக்கையை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் கண்டிக்கிறேன். இப்படிப் பேசுகிற இந்த முயற்சியைக் கைவிட வேண்டும்; இல்லையென்றால், அதற்குரிய பாடத்தை அவர்கள் அனுபவிப்பார்கள் என்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே எச்சரிக்கையாகச் சொல்லி நிறைவு செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேர்களிலே யார் பேசப் போகிறீர்கள்? துணைத் தலைவர் பேசுகிறீர்களா? திரு. செங்கோட்டையன் பேசுகிறீர்களா? (குறுக்கீடு) சரி, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். எல்லோரும் அமைதியாக இருங்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். திரு. மூர்த்தி, அமைதியாக இருங்கள். திரு. ரங்கநாதன், திரு. கண்ணன், எல்லோரும் அமைதியாக இருங்கள். நீங்கள் பேசுங்கள்.

*முற்பகல் 11–20*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இங்கு அரசு ஏற்படுத்தவிருக்கின்ற துணை நகரத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதனால், அந்தப் பகுதியிலே வாழ்கின்ற ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கரில் வாழ்கின்ற இலட்சோப இலட்சம் மக்களுடைய வாழ்வாதாரங்கள் எந்த அளவில் எதிர்காலங்களில் அழிக்கப்படும், சீரழிக்கப்படும் என்பதைப்பற்றி நான் இங்கே கருத்துக்கள் சொன்னேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வெளியில் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்று காலை



வெளியிட்ட அறிக்கையை எடுத்துக்கொண்டு இங்கே படித்தார்கள். பொதுவாக, அத்துணை அரசியல் கட்சித் தலைவர்களும் அறிக்கை வெளியிடுகின்றார்கள், மேடைகளில் எவ்வளவோ பிரச்சினைகளைப் பேசுகின்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் வாய்ப்பு வாங்கிப் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் வாய்ப்பு வாங்கிப் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி பத்மாவதி, உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி பத்மாவதி, உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உங்கள் கட்சியின் தலைவர்கள் பேசினார்கள். வாய்ப்பு வாங்கிப் பேசுங்கள். இப்போது பேசினார் அல்லவா? நீங்கள் வாய்ப்பு வாங்கிப் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அவர் பேசட்டும். (குறுக்கீடு) திரு. குணசேகரன், உட்காருங்கள். திரு. சுதர்சனம் Sir. (குறுக்கீடு) திரு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ராமசாமி, உட்காருங்கள். துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள். இடையில் யாரும் குறுக்கிட்டுப் பேசக்கூடாது. எல்லோரும் அமைதியாக இருங்கள். சொல்லுங்கள் Sir.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வெளியில் பத்திரிகையில் எழுதப்படுகின்ற கட்டுரைகளுக்கும், விடப்படுகின்ற அறிக்கைகளுக்கும், வெளியில் பொதுக் கூட்டங்களிலே, பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், அந்தக் கட்சியின்கீழ் இருக்கின்ற பேச்சாளர்கள், அவர்கள் பேசுகின்ற பேச்சுக்களுக்கும், நாம் இங்கே சட்டமன்றத்திலே அதைக் கொண்டுவந்து படித்து, அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, அதில் இருக்கின்ற கருத்துகளை எல்லாம் நாம் பேசுவதற்கு முயற்சிகள் எடுத்தோம் என்றால், இங்கு சட்டசபையில் வேறு எந்தப் பிரச்சினையையுமே எடுக்க முடியாது. அத்துணை அரசியல் கட்சித் தலைவர்களும் (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன், பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே பத்திரிகையைக் கொண்டுவந்து காட்டி, இதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதனால் அது ஒன்றும் தவறாகத் தெரியவில்லை. அவரே நேற்று அதற்கு வழிகாட்டியிருக்கிறார். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உரையை முடித்துவிடட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொண்டுவந்து காண்பித்தது, அரசில் சில தவறுகள் நடைபெற்றிருப்பதை ஒரு பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது. அதைத்தான் நான் கொண்டுவந்து காட்டினேன். அதுவும் அதில் இருக்கின்ற உண்மைத் தன்மைகளை அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுதான் நான் அன்றைக்குக்கூட விவாதத்தில் கலந்துகொண்டு பேசியிருக்கிறேன். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்று காலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த அறிக்கையை இங்கே படித்தார்கள். நாங்கள் யாரும் ஒன்றும் சொல்லவில்லை. இருந்தாலும், வெளியிலே விடப்படுகின்ற அறிக்கைகள், கட்டுரைகள், பேச்சுக்கள் அவற்றை எல்லாம் இங்கே கொண்டுவந்து பேசுவது என்பது, ஒரு தவறான முன்னுதாரணம். ஏனென்றால், வெளியில் பேசப்படுகின்ற சில பேச்சுக்களை, இங்கே சட்டமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வோமானால், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் என்ன வெளியில் பேசுகின்றார்களோ, கட்டுரை எழுதுகின்றார்களோ, அறிக்கை விடுகின்றார்களோ அவற்றையெல்லாம் *(குறுக்கீடு)* நான் முடித்துவிடுகிறேன். அவற்றையெல்லாம் இங்கே கொண்டுவந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்க வேண்டும், வேறு பிரச்சினையாக இருந்தால் பரவாயில்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை நேற்றும், நேற்றைக்கு முன்தினமும், இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பிரச்சினையைப்பற்றி தாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, துணைத் தலைவர் பேசிக் கொண்டிருக்கும்போது குறிப்பிடுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும்பொழுதே உங்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான அம்மையார் அவர்கள் இதைக் கண்டிக்கிறார்கள் என்றும் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். அதனால் எப்படிக் கண்டிக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. அது எப்படித் தவறாகும்?





**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கம், மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. நீங்களும் பேசுகின்றீர்கள்; பேசுகின்றபோது அவரவர் தலைவர்களைச் சொல்லி, அந்தத் தலைவருடைய கொள்கைகள், கோட்பாடுகளை எல்லாம் சொல்லிக்கொண்டு பேசுகின்றீர்கள்; அது இயற்கை, இங்கே பேசுவது என்பது. ஆக, நாங்கள் என்ன கருத்தை இங்கே பதிவு செய்கின்றோமோ, அந்தத் தலைமையினுடைய, தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிறவர்களின் பெயர்களைச் சொல்லி பதிவது என்பது, இயற்கையிலே எல்லா கட்சிக்காரர்களும் நடத்திக் கொண்டிருப்பதுதான். நேற்றுகூட, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் பேசினார்கள். இங்கே சம்பள உயர்வு கொடுத்ததை, இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டிக்கிறது; நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றுகூட பேசினார்கள். அவையெல்லாம் இங்கே சொல்லப்பட்ட வார்த்தைகள்தான். ஆனால், நான் சொல்வது, வெளியில்... *(குறுக்கீடுகள்)* நான் சொல்லிவிடுகிறேன். என்னுடைய வார்த்தைகளில் எதுவும் தவறு இல்லை. *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதி, எல்லோரும் அமைதியாக இருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏதாவது ஆட்சேபகரமான பதிவு அல்லது உங்களை நான் ஏதாவது குற்றம் சொல்லியிருக்கிறேனா? எதுவும் கிடையாது. நான் பொதுவான கருத்தைச் சொல்கிறேன். கேட்டுக்கொள்ளுங்கள். முதலமைச்சர் பதில் சொன்னார்கள்; அதேமாதிரி அப்புறம் ஏதாவது பதில் சொல்ல வேண்டும் என்றால், வாய்ப்பை வாங்கி நீங்கள் ஏதாவது பதில் சொல்லுங்கள். வெளியில் நடக்கின்ற அறிக்கைகள், கட்டுரைகள், மேடைப் பேச்சுக்கள், அவையெல்லாம் இங்கே வந்து பேசப்பட்டால், அது நல்ல நடைமுறையில்லை. இருந்தாலும், இன்றைக்கு அந்த சம்பந்தப்பட்ட பிரச்சினை என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கட்டுரையை வாசித்தார்கள். நாங்கள் யாரும் குறுக்கிடவில்லை. ஆனால், அந்தக் கட்டுரையில் வந்திருக்கின்ற ஒரு சொல்லை—நான் ஏற்கெனவே சொன்னேன்—இங்கே வந்து பேசினால் பல பிரச்சினைகள் உருவாகும் என்று. அந்தக் கட்டுரையைப் பேசி முடித்தபிறகு, அந்த

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2006 செப்டம்பர் 2

வார்த்தைகளைப் பேசி முடித்தபிறகு, அதற்கு அவர்கள் புது அர்த்தம் கொடுத்தார்கள். அதைத்தான் நாங்கள் இங்கே எதிர்த்துக் கொண்டிருக்கின்றோமே ஒழிய, வேறு எந்தவகையிலும் எதிர்க்கவில்லை. அவர்கள் தனியாக ஒரு comment-ஐ அதிலே அடித்தார்கள். அது இன்றைக்கு நம்முடைய... (குறுக்கீடு) அதைப்பற்றி இங்கே தலைவர்களெல்லாம் பேசினார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதையும் நீங்கள் சொல்ல வேண்டும். அதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்ல வேண்டும். எதற்கு நான் comment அடித்தேன்; என்ன சொன்னேன் என்று. அதிலே இருக்கிற வார்த்தை, "கருணாநிதிக்கு துணை என்றால் எப்போதும் மிகவும் பிடிக்கும்போலும்!" என்று அம்மையார் அவர்கள் எழுதுகிறார்கள். அதை நான் படித்துக்காட்டிச் சொன்னேன். எல்லோருக்கும்தான் பிடிக்கும் என்று சொன்னேன். அதிலே என்ன தப்பு? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் முடித்துவிடட்டும், முடித்துவிடட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன் இன்றைக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, இப்போது... (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வெளியில் பேசப்பட்ட, எழுதப்பட்ட வார்த்தைகளை எல்லாம் இங்கே சொன்னால், (குறுக்கீடுகள்) அதற்கு என்ன நாம் பொருள்பட....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காக நான் பேசவில்லை. அல்லது துணைத் தலைவர் பேசிய வார்த்தைகளை எதிர்க்க வேண்டுமென்ற அந்த வேகத்திலேயும் நான் பேசவில்லை.



2006 செப்டம்பர் 2] [பேராசிரியர் க. அன்பழகன்]

இந்த அவையில் இடம் பெற்றிருக்கிற யாராக இருந்தாலும், அதிலேயும் குறிப்பாக, ஒரு கட்சியினுடைய தலைவராக இருந்தாலும், அதைவிட இன்னும் சிறப்பாக, எதிர்க் கட்சித் தலைவர் என்ற உரிமையோடு இந்த அவையில் இருந்தாலும், அவர் வெளியிலே சொல்கிற கருத்தாக இருந்தாலும்கூட, அது இந்த அவை சம்பந்தப்பட்ட தலைவர் ஒருவர் பேசுகிற கருத்தாகத்தான் இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படும். இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும். இந்த அவையிலே இல்லாவிட்டால், அவர்கள் வெளியிலே மட்டும் இருப்பார்களேயானால், அவர்கள் சொல்கிற கருத்துக்கூட இந்த அவையைப் பாதிக்குமானால், இந்த அவையிலேயுள்ள யாரையும் பாதிக்குமானால், அப்பொழுதும் எடுத்துக்கொள்வதுதான் வழக்கம். ஆனால், இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டது, எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரின் அறிக்கையை.

மற்றும் ஒன்று, துணைத் தலைவர் இங்கே பேசுகிறார். துணைத் தலைவர் பேசுகிற அதே விஷயத்தைப்பற்றி தலைவர் வெளியிலே அறிக்கை விடுகிறார். அந்தத் தலைவரும் விரும்பினால் துணைத் தலைவருக்குப் பதிலாக இந்த அவையிலே வந்திருந்து பேசலாம். அந்த உரிமை உள்ள ஒருவர் வெளியிலே அறிக்கை விடுகிறபோது, அந்த அறிக்கை யாரையும் கேவலப்படுத்தாமல் இருந்திருக்குமானால், அந்த அறிக்கையை இங்கே படித்துக்காட்ட வேண்டிய அவசியம் முதலமைச்சருக்கு ஏற்பட்டிருக்காது. முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிற அந்த வார்த்தைகள், முதலமைச்சர் என்றுகூடக் குறிப்பிடாமல் கருணாநிதி என்கிறார். நான் சொன்னால் நீங்கள் தவறாக எண்ணக் கூடாது. நானும் கலைஞரும் 18 வயதிலேயிருந்து பழகியவர்கள். என்னால் கருணாநிதி என்று அவரைச் சொல்ல முடியவில்லை. எனக்கு அந்தப் பெயரைச் சொல்ல தகுதியுண்டு. ஆனால், இவ்வளவு தகுதிவாய்ந்த ஒருவரை கருணாநிதி என்று எப்படிச் சொல்லிவிடுவது என்ற எண்ணத்தில், அவருடைய பையனிடத்திலேயோ, மகனிடத்திலேயோ, வேலைக்காரர்களிடத்திலேயோ பேசுகிறபோதுகூட, கலைஞர் என்றுதான் நான் சொல்கிறேன். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர், தானும் ஒரு முதலமைச்சராக இருந்தவர், இன்னாள் முதலமைச்சரைச் சொல்கிறபோது, கருணாநிதி என்கிறார். அவ்வளவு மலிவாக இந்த நாட்டிலே ஒரு தமிழன் சொல்லப்படுவதை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைவிட, கருணாநிதியைச் சொல்லட்டும். கருணாநிதி அரசியல்வாதி. அவருடைய குடும்பத்திலேயுள்ளவர்களையெல்லாம்

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 செப்டம்பர் 2

அழைத்துப் பேசுவது என்றால், மன்னித்துக்கொள்ள வேண்டும். பன்னீர்செல்வம் அவர்களிடத்திலே எனக்குக் கோபம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். பன்னீர்செல்வத்தைப் பற்றி, அவருக்கு அறிவில்லை, தெளிவில்லை என்று நான் சொன்னால், நீங்கள் எனக்குப் பதில் சொல்லி, நீங்கள் இப்படி முட்டாள்தனமாகப் பேசலாமா என்று கேட்கலாம். பன்னீர்செல்வம் குடும்பத்தைப்பற்றி நான் பேசினால்? எனக்கு வயது 84. பன்னீர்செல்வம் வயதிலே எனக்கு மகன் இருக்கிறான். நான் பன்னீர்செல்வத்தை, அவருடைய குடும்பத்தை இழுத்து ஒரு வார்த்தை பேசினால்கூட, பன்னீர்செல்வம் மனம் எவ்வளவு புண்படும்? அந்தக் கட்சியிலே உள்ள மற்ற தோழர்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள்? ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, இந்த அவையிலே இருக்கிற காரணத்தால் அவர்களைக்கூட பேசலாம். மற்றவர்களைப் பேச யாருக்கும் உரிமையில்லை, தகுதியில்லை. திருப்பிப் பேசினால் என்ன ஆவார்கள்?' வெறும் 'துணை' என்ற ஒரே ஒரு சொல், எவ்வளவு பாதித்துவிட்டது? அவர், ஆயிரம்முறை 'துணை', 'துணை' என்று அறிக்கையிலே சொல்லலாம்.

துணைத் தலைவரே அவருக்கு ஆதரவாகப் பேசலாம். அதே 'துணை' என்ற வார்த்தையை முதலமைச்சர் சொன்னால், ஆத்திரம் வருகிறதே, ஏன்? ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், தவறான வார்த்தைகளை யார் பயன்படுத்தி, இந்த அவையிலே உள்ள யாரைப் புண்படுத்தினாலும், இந்த அவை அதைத் தண்டிக்கும். இன்னும் சொல்லப்போனால், உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரக்கூடிய அளவிற்கு, அந்தக் கருத்து இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பேச்சிலே உள்ள நல்லெண்ணத்தை இந்த அவை புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, drop that. Further -ஆக அந்த Subject-ஐ விட்டுவிடுங்கள். (குறுக்கீடு) திரு. பீட்டர், அந்த subject வேண்டாம். (குறுக்கீடு) அந்த subject வேண்டாம். திரு. மணி, உட்காருங்கள்.



2006 செப்டம்பர் 2]

## (ஆ) முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்துதல்

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒரு முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள் sir? (குறுக்கீடு) திரு. சாமி, கொஞ்சம் பொறுங்கள்; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் திரு. சாமி. திரு. குணசேகரன், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை குறித்து... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** We are going to the other subject. Not allowed. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள்மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கூப்பிட்டேன்; நீங்கள்தான் அவரைப் பேசச் சொன்னீர்கள். உட்காருங்கள், Not allowed; உட்காருங்கள். திரு. சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நேற்று முன்தினம், முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்து, கேரளத்தினுடைய முதலமைச்சர் அவர்களும், நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களும் அங்கேயிருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு குழுவாகச் சென்று, பாரதப் பிரதமரிடத்திலே கோரிக்கையாக வைத்து, அதைப்பற்றிப் பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, குறிப்பாக, நம்முடைய அரசைப் பற்றியும், நம்முடைய செயல்பாடுகளைப்பற்றியும் அவர்கள் குற்றம் சுமத்தி, அங்கே அறிக்கையாகக் கொடுத்திருப்பதாகப் பத்திரிகைகள்மூலமாகச் செய்திகள் வந்திருக்கின்றன. அந்த அணையின்மூலமாக, கேரள மாநிலத்திற்குப் பாதிப்பு இருப்பதாக அவர்கள் சொல்லுகிறார்கள். அதைவிட, அந்த அரசின் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த வாரம் அந்த முல்லைப் பெரியாறு அணையைப் பார்வையிட்டு, அந்தப் பகுதியிலே நில நடுக்கம் ஏற்பட்டதாகவும் அதன்மூலமாக, 4 மாவட்டங்கள் பாதிக்கப்படுவதாகவும், ஆகவே, அதைப்பற்றிப் பரிசீலனை

வேறுவிதமாகச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையிலும், நமது மாநிலத்திலே, 5 மாவட்டங்களுக்குரிய ஒரு ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கக்கூடிய தண்ணீர்ப் பிரச்சினை பற்றியது. தேனி, மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களுக்கும், பாசனத்திற்கான வகையிலேயும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சியாகவும் நிலவி வருகிற அணை அது. குறிப்பாக, முல்லைப் பெரியாறு அணை, அன்றையதினம், ஒன்றுபட்ட மதுரை மாவட்டமாக, இராமநாதபுரம் மாவட்டமாக இருந்தபொழுது, அந்த மாவட்டத்தினுடைய வறட்சி நிலையைப் போக்குவதற்குரிய முயற்சியாக, ஆங்கிலேய அரசால், கட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

அப்போது Pennycuick என்ற ஒரு பொறியாளர் அந்த அணையைக் கட்டுவதற்குரிய முயற்சியை எடுத்தார். இரண்டு முறை அணை உடைந்து போய்விட்டது. மூன்றாவது முறையாக, அவர் தனது மனைவியின் பெயரில் இருந்த சொத்தையே விற்றுக் கொண்டுவந்து, அந்த அணையைக் கட்டியதாக வரலாறு. காரணம், தமிழகத்திற்கு அது பயன்பட வேண்டும் என்பதற்காக, அன்றையதினம், அந்தப் பொறியாளர் செய்திருக்கிறார். அந்த அணையின்மூலமாக, இப்பொழுது 75 இலட்சம் மக்களுடைய குடிநீர்த் தேவை நிறைவு செய்யப்படுகிறது. 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலப் பரப்பிற்குரிய பாசனம் பெறுகிற அணையாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த அணையினுடைய நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என்பதுதான், நம்முடைய தமிழகத்தினுடைய கோரிக்கை. இப்பொழுது 136 அடியாக அது இருக்கிறது. இதன்மீது நாம் கருத்துகளைச் சொல்லுகிறபொழுது, கேரள அரசு நீதிமன்றத்திற்குச் சென்றதனுடைய விளைவாக, அணையின் நீர்மட்ட உயரத்தை 142 அடியாக அதிகரித்துக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், இந்த உத்தரவைக் கேரள அரசு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. அதனுடைய விளைவாக, அவர்களுடைய செயல்பாடுகள் என்பது வேறுவிதமாக சென்று கொண்டேயிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கும்வேளையில், அதைத் தடுப்பதற்கான முயற்சியாக, வேறுவிதமான செய்திகளைச் சொல்லி, நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பெறுவதற்குரிய வாய்ப்பு மறுக்கப்படுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதிலே நம்முடைய தமிழ்நாடு அரசு, வேகமாக முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





முற்பகல் 11-35

குறிப்பாக, அந்த முல்லைப் பெரியாறு பிரச்சினையின்மீது, அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இப்போது இருக்க வேண்டிய கொள்ளளவு நீர்மட்டம், 136 அடி என்ற அளவில் இருக்கிறது. இதில் 110 அடி தண்ணீர் என்பது, அந்த அணையிலேயே முழுமையாகத் தேங்கினால்கூட, 110 அடி தண்ணீர், அந்த அணை மட்டத்திலேதான் இருக்கும். 110 அடி தண்ணீருக்கு, மேல்வருகின்ற தண்ணீரைத்தான் நம்முடைய தமிழகத்திற்கு வழங்க முடியும். அப்படித்தான் அந்த அணையினுடைய அமைப்பு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த அணையினுடைய அளவை, அதன் காரணத்தினாலேதான் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை நாம் வைத்திருக்கின்றோம். ஆனால், இதை ஏற்றுக்கொள்ள மறுத்து, அதை வேறுவிதமாக திசைதிருப்பி, அந்தக் கேரளப் பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்குரிய முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது. தமிழகத்திற்கு வேறு ஒரு புதிய அணையைக் கட்ட வேண்டும் என்ற ஆலோசனையைப் பிரதமர் இடத்திலே நேற்று முன்தினம் சொல்லியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் ஏற்று, மத்திய நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களையும், சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் இதன்மீது பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்க, பிரதமர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கிறபொழுது, நம்முடைய உரிமைகளை மறுப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. சட்ட ரீதியாகக் கிடைத்திருக்கிற அந்த உரிமைகள் மறுப்பதற்கான முயற்சி நடைபெறுகிறது. ஆகவே, நம்முடைய தமிழ்நாடு அரசு, அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்பதோடு, இந்தச் சட்டமன்றத்திலே ஒருமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கே சென்றுதான் பிரதமரைச் சந்தித்திருக்கிறார்கள். இங்கேயும் நம்முடைய மாநிலத்தினுடைய உரிமை என்ற முறையிலே, நம்முடைய அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவே, இதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தை அணுகி, பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திப்பதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதன்மீது உரிய தீர்வு காண வேண்டும். முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரத்தை அதிகரிப்பதற்கான அந்த உத்தரவை நிறைவேற்றுவதற்கான

முயற்சிகள் எடுக்க வேண்டும். அங்கே ஆக்கிரமிப்புகள் செய்யப்படுகிற பகுதிகளை மீட்டு, நம்முடைய தமிழகத்திற்குப் பயனளிக்கத்தக்கவகையிலே அந்தப் பகுதி மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினையைப் பாதுகாப்பதற்கான முயற்சி எடுப்பதற்கானவகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்தாக இங்கே பதியவைக்க விரும்புகிறேன்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை, இதே point-லே இன்னொன்று கொடுத்திருக்கிறேன். இல்லை, ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, சொல்லட்டும்; பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரு மாநில நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமானது. இரண்டு மாநிலங்களுக்கிடையிலே, உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, பிரச்சினைகளைப் பெரிதாக்குவதற்குரிய வாய்ப்புள்ள ஒரு பிரச்சினை. ஏற்கெனவே, இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ள கருத்தின் அடிப்படையில், அண்டை மாநிலங்களோடு நெருக்கமான நட்புறவு ஏற்பட்டு வருகிற இந்த நல்ல சூழ்நிலையில், கேரள மாநில முதலமைச்சர் அவர்களும், சமீபத்திலே தமிழகத்திற்கு வருகை தந்தபோது, முல்லைப் பெரியாறு உள்பட, எல்லா நதிநீர்ப் பிரச்சினைகளையும் தமிழக அரசோடு பேசி, சுமுகமாக தீர்வு காண, கேரள அரசு தயாராக இருக்கிறது என்றும், ஆகவே, அதிகாரிகள் மட்டத்திலும், அமைச்சர்கள் மட்டத்திலும், நிறைவாக முதலமைச்சர் மட்டத்திலும் சந்தித்துப் பேசுவோம் என்றும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, இரு மாநில அரசுகளும் சுமுகமான முறையிலே பேசி தீர்வு காண்பது, இரு மாநிலங்களுக்கும் நன்மை பயக்கும் என்றவகையில், இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பரம்பிக்குளம், ஆழியாறு, சிறுவாணி குடிநீர்ப் பிரச்சினை உட்பட, பல்வேறு நதிப்



D V24,31/P06 P06.17.1



பிரச்சினைகளிலும் சரி, குடிநீர்ப் பிரச்சினைகளிலும் கேரள மாநிலம், கடந்தகாலங்களில் செய்திருக்கிற உதவிகளையும் கவனத்தில்கொண்டு, சுமுகமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே நல்லது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் நம்முடைய தமிழகத்திற்கு ஏற்றாற்போல, 142 அடி உயரத்திற்குத் தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டும் என்கிற தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அந்தத் தீர்ப்பை மதிக்காமல், இன்று கேரள அரசு அதற்கு மாற்றாக, சொல்லப்போனால், நிலநடுக்கம் காரணமாக, அந்த அணையே இன்று வலுவிழந்துவிட்டது என்று சொல்லி, புதிய அணையைக் கட்டுவதற்கும் அவர்கள் திட்டமிட்டிருப்பதாகச் சில செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதையே அவர்கள் பாரதப் பிரதமரிடம் எடுத்துச் சொல்லி, புதிய அணையைக் கட்டுவதற்கான முயற்சியை அவர்கள் எடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, தமிழகத்தினுடைய உரிமையை விட்டுக்கொடுக்காதவகையில், உச்ச நீதிமன்றத்தினுடையத் தீர்ப்பை, இன்று அவமதித்துக் கொண்டிருக்கிற கேரள அரசினுடைய நடவடிக்கை குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமரிடம் எடுத்துப் பேசியாவது அல்லது உச்ச நீதிமன்றத்தை மீண்டும் நாம் நாடியாவது, நம்முடைய உரிமையை நிலைநாட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சாமி, முல்லைப் பெரியாறு பற்றியா? Right, ஒரு நிமிடம்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முல்லைப் பெரியாறு பிரச்சினை என்பது, எங்களுடைய தென் மாவட்டங்களில் உள்ள 5 மாவட்டத்திற்கும் உயிர் ஜீவநாடியாக இருக்கின்ற பிரச்சினை. கடந்த 5 ஆண்டுகளாக, நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதுகூட, இந்த அவையிலே முதலமைச்சர் அம்மா அவர்களிடம், "இதை நீங்கள் உச்ச நீதிமன்றம் சென்றாவது, 152 அடியாக உயர்த்தித் தரவேண்டும்" என்று கேட்டு, நாங்கள் எல்லாம் கோரிக்கை வைத்ததை ஏ[illegible]

227437 சென்னை-600 008

முதலமைச்சர் அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றம் சென்று, இப்போது உச்ச நீதிமன்றம் 142 அடியாக உயர்த்துவதற்கு உத்தரவிட்டது. அங்கேயிருக்கின்ற கேரள அரசு, உச்ச நீதிமன்றத்தை மதிக்காமல் அதைப் புறக்கணித்து, அணையின் நீர்மட்டத்தை உயர்த்த முடியாது என்று சொல்லி, பிடிவாதமாக இருந்து கொண்டிருக்கின்றது. 5 மாவட்ட மக்களுடைய விவசாயம், குடிதண்ணீர்ப் பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கின்ற முல்லைப் பெரியாறு பிரச்சினையில், உச்ச நீதிமன்றம் கொடுத்திருக்கின்ற உத்தரவை, 142 அடியாக உயர்த்துவதற்குக் கேரள அரசு மறுத்து வருவதை, நம்முடைய சட்டமன்றத்திலே ஒரு கண்டனத் தீர்மானமாகப் போட்டு, உடனடியாக உச்ச நீதிமன்ற உத்தரவை அமல்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல், தமிழகத்திலே 5 மாவட்டங்களை உள்ளடக்கியிருக்கிற பாசன, குடி தண்ணீர்ப் பிரச்சினையை மையமாகக் கொண்டிருக்கிறது, முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை. அதிலே உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்குப் பின்னால், கேரள அரசு அந்தச் சட்டமன்றத்திலே போட்டிருக்கிற தீர்மானமும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இந்த அவையில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை யாராவது எழுப்புவார்களேயானால், ஒரு கட்சித் தலைவர் எழுப்பிவிட்டால், மறுபடியும் அதே கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்கு நேரம் தருவதற்குப் போதுமான நேரம் இல்லை. ஆகவே, தயவுசெய்து உறுப்பினர் பேசுவதை நிறுத்திவிட்டு, அமைச்சர் பதில் சொல்ல அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்... (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், சீக்கிரமாகச் சொல்லலாம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணை என்பது, தென் மாவட்டங்களாக இருக்கிற 5 மாவட்டங்களிலே வாழ்கிற மக்களுக்குரிய





குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஓர் ஆதாரமாகவும், தேனி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே விவசாயத்திற்கு நல்ல ஒரு சூழலை ஏற்படுத்துகிற ஓர் அணையாகவும் இருந்துகொண்டிருக்கிறது. அந்த அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும் என்பது நம்முடைய நீண்டநாள் கோரிக்கையாக இருந்தாலும்கூட, இப்பொழுது அதை 142 அடியாக உயர்த்துவதற்கான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் கொடுத்திருந்தாலும்கூட, அங்கு இருக்கிற கேரள அரசாங்கம், அணையை உயர்த்தக் கூடாது என்று அடாவடித்தனமாக இருந்து கொண்டிருக்கிறது. இது குறித்து எப்படியாவது நாம் அதற்கான ஒரு கண்டனத் தீர்மானத்தினை இங்கே நிறைவேற்றி, நம்முடைய கண்டனத்தை மத்திய அரசுக்குத் தெரிவிக்கிற அளவிலே அமையவேண்டும்; நம்முடைய குடிநீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டு விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பல்வேறு கட்சித் தலைவர்கள், முல்லைப் பெரியாறு அணையைக் குறித்து, ஒரு பிரச்சினையை இங்கே கிளப்பி இருக்கிறார்கள். குறிப்பாக, சிறப்பாக, உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, அவர்கள் இரு மாநிலங்களும் பேசி, உறவாடி பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுதான் சாலச் சிறந்தது என்று சொல்லி இருக்கிறார். அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து அல்ல. தலைவர் கலைஞர் அவர்கள், ஆரம்பத்தில் இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். சுதந்திர தினத்தன்று கொடி ஏற்றுகிறபொழுதுகூட, அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவைத்தான் இந்த அரசு மேற்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்கள். முல்லைப் பெரியாறு அணையைக் குறித்து, பரபரப்பான செய்திகள் பத்திரிகையிலே வந்தன. கேரளத்திலே பரபரப்பான அரசியல் நடத்த வேண்டும் என்று நினைக்கிற கட்சிகள், பத்திரிகைகள், முன்னாள் அமைச்சர்கள், இன்னாள் சில அமைச்சர்கள் ஆளுக்கு ஒரு statement விடுகிறார்கள். ஒரு நாள், முல்லைப் பெரியாறு அணையிலிருந்து ஒரு கால்வாய் இடுக்கிக்குப் போகும் என்று ஒருவர்; ஒரு நாள், கசிவு பார்க்க வேண்டும் என்று ஒருவர்; ஒரு நாள், protection எங்களுக்கு வேண்டும் என்று ஒருவர்; ஒரு நாள், புது அணை கட்டவேண்டும் என்று இவ்வளவு செய்திகள் வந்தபொழுதும்கூட, எங்களைப்

[திரு. துரைமுருகன்] [2006 செப்டம்பர் 2

பத்திரிகைக்காரர்கள் அணுகியபொழுதும்கூட, நாங்கள் அதற்குப் பதிலளிக்கவில்லை. காரணம், பரபரப்புக்கு ஒரு பரபரப்பு பரிகாரம் ஆகாது. இதிலே நாம்—நியாயம் நம்முடைய பக்கம் இருக்கிறது என்பதால்—அமைதி காத்தோம். ஆனால், இன்றைக்கு நிலைமை, அந்த மாநிலத்தினுடைய முதல்வர் மாண்புமிகு அச்சுதானந்தன் அவர்களும், அந்த மாநிலத்திலே, எதிர்க்கட்சித் தலைவர் உம்மன்சாண்டி அவர்களும், இருவரும் சேர்ந்தே போய், பிரதமரைப் பார்த்து, முல்லைப் பெரியாறு அணை குறித்து, ஒரு மனு கொடுத்து, சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் செய்திகள் உண்மைக்கு மாறானவை. அதை நான் திருப்பிச் சொல்ல முடியும். ஆனால், சிவபுண்ணியம் சொன்னார், அந்த நிலை நமக்கு வராதா என்று; வராது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து போனார்கள் என்று சொன்னார்கள். நமக்கு இங்கே சாபக்கேடு. (மேசையைத் தட்டும் ஒலி) அது வராது. இங்கே திருப்பி நீயா, நானா என்று பேசிக் கொண்டிருப்போம். அதை விடுங்கள். ஆனால், போனவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? முல்லைப் பெரியாறு அணையை அவர்களுக்குத் தந்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே 'மத்திய நீர்வள ஆணையத்தைச் சேர்ந்த அதிகாரிகள், முல்லைப் பெரியாறு அணை அபாயத்தில் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்; எனவே, அணையின் பாதுகாப்பு அம்சங்களை எங்களுக்குத் தர வேண்டும்' என்று கேட்டிருக்கிறார்கள். இதிலே கிஞ்சித்தும் உண்மை கிடையாது.

*முற்பகல் 11–45*

ஆரம்பத்திலிருந்தே, இந்த முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை, பத்திரிகைகளால் உருவாக்கப்பட்ட ஒன்று. அணை பலமா என்பதை, இப்போது புதிதாக வந்துள்ள உறுப்பினர்களுக்குச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். ஆரம்பத்திலிருந்தே பலமாகத்தான் அணை இருந்தது. திடீரென்று 1979-இல் ஒருசில பத்திரிகைகள், 'முல்லைப் பெரியாறு அணை உடையப் போகிறது; இடுக்கி மாவட்டம் அழியப்போகிறது' என்று சொல்லின. Central Water Commission என்று ஒன்று உண்டு. பத்திரிகைகளிலே வந்தாலும், அதற்குத் தெரியும். அப்போது நடந்ததை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். Central Water Commission-னுடைய Chairman, K.C. தாமஸ், கேரள மாநிலத்துக்காரர், அப்போது அங்கு இருந்தார். அப்போது, இங்கே முதலமைச்சர் எம்.ஜி.ஆர். இருந்தார். அப்போது P.W.D. Secretary, விஜயராகவன், பாலக்காட்டுக்காரர்; அவரும் இருந்தார். அப்போது K.C. தாமஸ் நேராக



2006 செப்டம்பர் 2] [திரு. துரைமுருகன்]

வந்தார். "அட! Dam weak-ஆ?" அப்படியென்று சொல்லி, ஏறி நின்று, அவரே *23-11-1979* அன்று ஏறி நின்று பார்த்துச் சொன்னார். "It is very strong; who wrote such a nonsense? No, No, No, I won't accept this." அப்படியென்று சொல்லிவிட்டு, "Anyhow, I am going to Trivandrum" என்று சொன்னார். உடனே தமிழ்நாட்டு அதிகாரிகளை அங்கே வரச் சொல்லிவிட்டார். தமிழ்நாட்டு அதிகாரிகள் மட்டுந்தான் போனார்கள்.

கேரளத்திலே, திருவனந்தபுரத்திலே பேச்சுவார்த்தை. *23* ஆம் தேதி பார்த்தார்; *23-11-1979* அன்று. *25* ஆம் தேதி திருவனந்தபுரத்தில் meeting. அப்போதுதான் சொன்னார்கள், என்ன செய்ய வேண்டுமென்று. அதற்குள்ளே என்ன நடந்ததோ? "இல்லை, இல்லை, ரொம்ப weak; 152 அடி தண்ணீரை நிறுத்தக் கூடாது; *136* அடிதான் நிறுத்த வேண்டும்; நிறுத்துகிறபோது, மறுபடியும் நீங்கள் நிறுத்த வேண்டுமென்றால், நாங்கள் போடுகிற condition-களை—சில condition-கள் போடுவோம்; Emergency measures, Medium measures and Long term measures என்று—இதிலே Emergency and Medium measure-களை நீங்கள் fulfil பண்ணிவிட்டால், *136* அடியிலிருந்து *145* அடிக்குப் போகலாம். Long term measures-களை நீங்கள் fulfill பண்ணிவிட்டால், *152* அடி நிறுத்தலாம்" என்று Central Water Commission சொன்னவுடனே, நம்முடைய தமிழ்நாட்டினுடைய சர்க்காரிலே என்ன சொல்லியிருக்க வேண்டும்? "இது பெரிய பிரச்சினை; எங்கள் மந்திரியிடம் போய்ச் சொல்ல வேண்டும்; முதலமைச்சர் கூப்பிட வேண்டும்; அங்கிருந்துதான் நாங்கள் வர வேண்டும்" என்று சொல்லாமல், கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டார்கள். கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிட்டார்கள், சரி என்று சொல்லிவிட்டு. உடனே அவர்கள் என்ன சொன்னார்கள்?

Condition No. 1, R.C.C. capping—உறுப்பினர்களுக்குத் தெரியாது; route போட வேண்டும்—அதாவது anchor, அந்த bed மேலே R.C.C. capping போட வேண்டும். அடுத்து, additional vent; இப்போது இருக்கிற அந்தக் கலங்கல் வெளியே போகிறபோது, அவை போதாது; *13* கட்ட வேண்டும்; 24 hours-ம் அவை திறந்தே இருக்க வேண்டும். சொன்னார்கள்; அதையும் செய்தோம்; இதையும் செய்தோம். Cable anchoring என்று சொன்னார்கள். *152* அடியிலிருந்து drill போட்டு இறக்குவார்கள் உள்ளே. நான், அப்போது அந்த வேலையைச் செய்தபோது, அங்கே போய் பக்கத்திலேயிருந்து பார்த்தவன். குடை பிடித்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டு அந்த வேலை செய்ததைப் பார்த்தவன், கலைஞர் அவர்கள் அனுப்பி, drill, *152* அடி கீழே பாறைக்குப் போய், அதிலே கம்பியும், சிமெண்ட்டும் விட்டு strong பண்ண வேண்டும். அதைச் செய்ய சொன்னார்கள்:

அதையும் செய்தோம். R.C.C. capping; Dam இப்படி நேராக இருந்தால். இது ஒருகால் உடைந்துவிடும். இதற்கு இப்படியே கட்டி, back -லே சிறிய dam கட்டி அதையும் ஒட்ட வேண்டும் என்றார்கள். அதையும் செய்தோம். அந்தத் தண்ணீர் குதித்தது என்றால், பள்ளம் வரும்; அப்போது உடைந்துபோய்விடும்—apron என்று பெயர்—அதற்கு சிமெண்ட் தளம் போடு என்றார்கள்; அதையும் போட்டோம். ஜல்லிக்கு உடைக்கிறோம் என்றோம். இங்கு வெடிக்கக்கூடாது; ஏனென்றால், மிருகங்கள் ஓடிவிடும் என்றார்கள். லாரியிலே கொண்டு வருகிறோம் என்றோம்; sound வரும் என்றனர். 250 கழுதைகளை ஏற்பாடு பண்ணி, ஜல்லியைக் கொண்டுபோய். அந்த apron-ஐப் போட்டோம். அதையும் செய்தோம். இவ்வளவும் செய்து முடித்ததற்குப் பிறகும், இப்போதாவது நாங்கள் 136 அடியிலிருந்து 146 அடிக்கு உயர்த்தலாமா என்றோம். Baby Dam என்ற ஒன்று இருக்கிறது, இது 40 அடி Dam. அந்த Baby Dam-ஐக் கட்டுகிறோம் என்றோம். அதைக் கட்டப்போனோம். அதையும் முடியாது என்று சொல்லிவிட்டார்கள்; கட்டக்கூடாது என்று சொன்னார்கள். இவ்வளவும் செய்ததற்குப் பிறகும், இதற்கிடையிலே அந்த Dam நம்முடைய கையிலே இருந்தது. அப்போது எங்கள் ஆட்சியில்லை, அதுவும் போய்விட்டது. நம்முடைய police-ஐ அங்கே நிற்க வைத்திருந்தோம். அந்த police-ஐயும் withdraw பண்ணிக்கொண்டோம். "போங்கள்" என்று சொன்னோம்; வந்துவிட்டார்கள். அவர்களே எடுத்துக்கொண்டார்கள். இன்றைக்கு current cut; current கிடையாது. Current-ஐ விட்டுக் கொடுத்துவிட்டார்கள். Protection—பாதுகாப்பையும்—விட்டுக் கொடுத்துவிட்டார்கள், Current விட்டுக் கொடுத்துவிட்டார்கள். போலீசையும் விட்டுக் கொடுத்துவிட்டார்கள்; எல்லாம் விட்டுக் கொடுத்துவிட்டார்கள். இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 11–50*

அதற்குப் பிறகு என்ன நிலைமையென்றால், இவ்வளவு செய்த பிறகும்கூட, dam, weak-ஆக இருக்கிறது என்றார்கள். பேச்சுவார்த்தை நடத்தினோம். கலைஞர் அவர்கள் சொன்னார்; "அவர்களுடைய engineer-களை விட்டு, அவர்கள் பார்வையிட்டு, என்ன தவறு என்று சொல்லட்டும்; நம்முடைய engineer-களை விட்டு இவர்களும் பார்க்கட்டும்; இரண்டு பேரும் report கொடுக்கட்டும். அவர்களுடைய report-ஐ இவர்களிடம் கொடுத்து, இந்தாருங்கள், நீங்கள் பாருங்கள்; தமிழ்நாடு engineer-கள் கொடுக்கும் report-ஐ அவர்கள் வைத்துக்கொள்ளட்டும்; இரண்டு பேரும் படியுங்கள்; படித்து



இரண்டு பேரும் check-up பண்ணுங்கள்" என்று சொன்னார்கள். அதையும் செய்தோம். இங்கே அதற்கு முடியவில்லை என்று சொன்னதற்குப் பிறகு, அதை முடித்துவிட்ட பிறகு, அதை முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்போது தமிழ்நாட்டிலே case போட்டார்கள். கேரளாவிலே சில பேர் 136 அடிக்கு மேலே நிறுத்தக்கூடாது என்று அவர்கள் case போட்டார்கள். 152 அடி நிறுத்துவோம் என்று நாமும் case போட்டோம். இப்போது அங்கு ஒரு நண்பர் ஒருவர் சொன்னார். மன்னிக்கவும், பெயர் தெரியவில்லை. அவர் சொன்னார்: Case போட்டவுடனே, "எங்களுடைய அம்மாதான் திருப்பி அங்கே போட்டார்கள்" என்றார்.

நான் இதிலே கொஞ்சம் சொல்கிறேன். அப்போது case போட்டவுடனே, கலைஞர் அவர்கள், இதிலே இரண்டு case-கள் இருப்பதனாலே, ஒரே subject பற்றி கேரளா High Court -லும் இங்கும் இருப்பதனாலே, 14–12–1998 அன்று கலைஞர், Supreme Court–லே, ஒரு petition போட்டார்கள். Same subject Kerala High Court -லே இருக்கிறது; இங்கேயும் இருக்கிறது என்று Transfer Application போட்டார். உடனே subject, transfer ஆகிப்போனது. போனவுடன் Supreme Court எடுத்துக்கொண்டது. Supreme Court எடுத்துக்கொண்டு என்ன சொன்னார்கள் என்றால், 15–5–2000–இலே, "எதற்கு இவ்வளவு தகராறு? Inter-State பிரச்சினையாக இருப்பதால், இரண்டு C.M.-களும் கூடிப் பேசுங்கள்" என்றபோது, கலைஞர் அவர்களோடு நாங்களெல்லாம் டெல்லிக்குப் போனோம். அங்கே, Irrigation Minister-வுடன் பேசினோம். அங்கே ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், Central Water Commission என்ற அந்த Water Commission–லே சொன்னார்கள்; ஒரு நிபுணர் Committee-ஐப் போடுகிறோம்; உங்கள் ஆட்கள் எல்லாம் வேண்டாம்; நாங்கள் போடுகிறோம் என்றார்கள். டாக்டர் மிட்டல் என்ற பெரிய ஆள், மகாராஷ்டிரா C.M., எல்லோரையும் போட்டு, ஒரு ஐந்து பேரைப் போட்டு, பரமேஸ்வர நாயர், கேரளா முதலமைச்சர், நம்முடைய மோகன கிருஷ்ணன் என்பவரையெல்லாம் போட்டு அவர்கள் வந்து உட்கார்ந்தார்கள். எல்லாரும் வெளி மாநிலத்திலேயிருந்து. அவர்கள் எல்லாம் வந்து ஐந்து நாட்கள் உட்கார்ந்தார்கள். Dam • காரையை உடைத்து, உடைத்து எடுத்தார்கள். அதை Central Government கட்டுமானத்தில், MMR என்ற ஒன்று இருக்கிறது; அதை வைத்து test பண்ணினார்கள். It is very strong என்றார்கள். இன்னொன்று, Dynamic test. Dynamic இந்தப் பக்கம் வைத்துவிட்டால் Dam அந்தப் பக்கம் போகும். Current pass ஆகும். அதிலே விட்டுப் பார்த்தார்கள். அதிலேயும் Dam correct-ஆக இருக்கிறதென்று சொன்னார்கள்.

அதையெல்லாம் செய்து, dam is very safe என்று நிபுணர்கள் குழு report கொடுத்தார்கள். அந்த report–ஐ வைத்துதான் நம்முடைய Suprem Court–லே, Judgement கொடுத்தார்கள். அது என்னவென்றால், "Under the aforesaid circumstances, we permit the State of Tamil Nadu to carry out further strengthening measures as suggested by the Central Water Commission and hope that the State of Kerala would cooperate in the matter. The State of Kerala and its officers are restrained from causing any obstruction. After the strengthening work is completed to the satisfaction of the Central Water Commission. independent experts would examine the safety angle before water level is permitted to be raised to 152 feet. The Writ Petition and connected matters are disposed off by permitting the water level of Mullai-Periyar Dam being raised to 142 feet and by permitting the further strengthening of the dam aforesaid."

முற்பகல் *11–55*

ஆக, Supreme Court சொன்னது, *142* அடி தண்ணீர் நிறுத்திக்கொள்ளலாம்; Baby Dam–ஐப் பண்ணுவார்கள்; நீங்கள் obstruction பண்ணாதே என்றார்கள். அந்த நேரத்திலேதான் கேரள சர்க்காரிலே அவர்கள் இதன்கூடவே மறுபடியும் Reveiw Petition போட்டார்கள், Supreme Court-லே, அவர்கள் கொடுத்த judgement-ஐக் கொஞ்சம் review பண்ண வேண்டுமென்று. Supreme Court அதை dismiss பண்ணிவிட்டது. Dismiss பண்ணியவுடனே, Kerala Irrigation Water Resource Conservation Act, 2003 என்ற ஒன்று இருக்கிறது. கேரளா பாசனம் மற்றும் நீர்வளப் பாதுகாப்புச் சட்டம்; அதிலே ஒரு amendment கொண்டுவந்து என்ன செய்தார்கள் என்றால், கேரள அணைகளைப் பாதுகாத்தல் என்பதன்கீழ், எவ்வளவு தண்ணீர் இருக்க வேண்டும் என்று ஒரு அட்டவணை வைத்தார்கள். என்னவென்றால், அதிலே பெரியாறு dam-ஐச் சேர்த்துவிட்டார்கள். அவர்களுடைய அட்டவணையில் சேர்த்தவுடனேதான், அப்போது A.I.A.D.M.K. ஆட்சி; அதைத்தான் நீங்கள் சொன்னீர்கள், "அம்மா வழக்குப் போட்டார்கள்" என்றும், "கேரளாவை நீங்கள் சேர்க்கக் கூடாது" என்றும், Supreme Court–லே அப்படி ஒரு original petition போட்டார்கள். அவர்கூட இன்றைக்குச் சொன்னார் "நாங்கள் போட்டோம்" என்று. (குறுக்கீடு) சொல்கிறேன், Mr. பன்னீர்செல்வம்; நான் அப்போது P.W.D. Minister. Supreme Court–லே, "எங்கள் custody-யில் இருக்கிற பெரியாறு அணையை, கேரளாவினுடைய custody–யிலே இருக்கிறதாக ஒரு amendment போட்டிருக்கிறார்களே? It is wrong" என்று Original petition





போட்டார்கள்; பாருங்கள். Petition போட்டார்களே தவிர, அது பன்னீர்செல்வத்திற்குத் தெரியுமோ, தெரியாதோ, number-கூட வாங்கவில்லை; petition போட்டுவிட்டார்கள். அவர்கள் என்ன பண்ணுவார்கள்? சில பேர், சில நேரங்களில் Supreme Court–லே card போட்டால்கூட எடுத்துக்கொள்கிறார்களே, அப்படி ஒருகால் வருமோ என்று போட்டுவிட்டார்கள். எங்கள் அம்மா போட்டதாகச் சொன்னார்களே; இல்லை. வக்கீலும் வைக்கவில்லை நீங்கள். இப்போது கலைஞர் வந்துதான், அந்த original petition–க்கு Supreme Court–லே number வாங்கி, இப்போது பராசுரன் அவர்களை நியமித்து, இப்போதுதான் அவர் பண்ணியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எந்தவகையிலே பார்த்தாலும், Central Water Commission சொன்னதை நாம் நிறைவேற்றுவதிலேயும், Mittal Committee-யின்படி பல மாநில Chief Engineer–கள் கொடுத்த அறிக்கைகளைப் பார்த்தாலும், Supreme Court–இனுடைய நீதிபதிகளின் தீர்ப்பைப் பார்த்தாலும், எந்தவகையிலும் நம்முடைய பக்கம் நியாயம் இருக்கிறது. பெரியாறு அணையிலே தண்ணீரை நிறுத்திவைக்கிற ஆதாரம் இருக்கிறது என்பதை நிரூபிக்கக்கூடிய அளவுக்கு நமக்கு வாதம் இருக்கிறது. எனவேதான், நாம் பரபரப்புக் காட்டவில்லை. ஆனால், பிரதமரிடத்திலே ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சரே போய்ச் சொல்லியிருக்கிறபோது, நாமும் அத்தகைய நிலையை எடுக்கலாமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, பிறகு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். பரபரப்புக் காட்டுவதால் அல்லது சண்டைக்கு, மல்லுக்கு நிற்பதால் ஆவது ஒன்றுமல்ல; காரியம் பெரியதா, வீரியம் பெரியதா என்றால் காரியம் சாதிப்பதுதான் பெரிது. அந்தக் காரியத்தை கலைஞர் அரசு நிச்சயம் நிறைவேற்றும்; ஒரு inch அளவையும் முல்லைப் பெரியாறில், திராவிட முன்னேற்றக் கழக அரசு விட்டுக் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதைப் பற்றி? (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கருத்து முரண்பாடாகச் சொல்லிவிடாதீர்கள்.

நண்பகல் *12–00*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தனக்கே உரிய பாணியில், உண்மையை மறைத்து இங்கே ஒரு

விளக்கத்தைத் தந்தார்கள். 2003–ல் கேரள அரசு, திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, அணையினுடைய நீர்மட்ட உயரத்தை 132 அடிக்கு மேல் உயர்த்தக் கூடாது என்று அந்தத் திருத்தச் சட்டத்தில் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து, Supreme Court-ல்—உச்ச நீதிமன்றத்தில்—ஏதோ ஒரு petition மட்டும் போட்டார்கள்; அதற்கு வழக்கறிஞர்கூட வைக்கப்படவில்லை என்ற கருத்தை இங்கே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள். Supreme Court—உச்ச நீதிமன்றம்—ஒன்றும் post box அல்ல, யார் வேண்டுமானாலும் அதிலே petition–ஐக் கொண்டுபோய்ப் போட்டுவிட்டுப் போவதற்கு. அங்கே உச்ச நீதிமன்றத்தை அணுகவேண்டுமென்றால், முறைப்படியாக, வழக்கறிஞரை வைத்துத்தான், அங்கே நாம் என்ன கோரிக்கையை வலியுறுத்துகின்றோமோ, அதை அங்கே தாக்கல் செய்ய முடியும்.

அந்தவகையில்தான், மாண்புமிகு அம்மா அவர்களால், முல்லைப் பெரியாறு அணை, தொழில்நுட்ப வல்லுநர் குழு சொன்ன பரிந்துரைகளுக்கேற்ப, பல்வேறு காலக்கட்டங்களில் பலப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டது திருப்திகரமாக இருக்கின்றது, அணைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை, 132 அடியிலிருந்து, 142 அடியாக தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம் என்ற அந்த வல்லுநர் குழுவின் பரிந்துரையை அமல்படுத்த வேண்டும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தை நாடினார்கள். உச்ச நீதிமன்றமும் அந்தக் case–ஐ—வழக்கை— பட்டியலிடுவதற்கு உத்தரவு வழங்கினார்கள். அந்த நிலையில்தான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது என்பதனை நான் இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். நடவடிக்கை எடுக்காததுபோல, ஏதோ போகிறபோக்கில், "அந்த petition–ஐப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்; வழக்கறிஞரைக்கூட நியமிக்கவில்லை" என்று சொன்ன அந்தக் கருத்தை நான் மறுப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். நீங்கள் ஒரு Original petition போட்டீர்கள். என்னைவிட வக்கீல், திரு. ஞானசேகரனே இருக்கிறார்; கேளுங்கள். Supreme Court–லேபோய், High Court–லேபோய், ஒரு petition போட்டால், petition-ஐப் போட்டுவிட்டு வந்தால் மட்டும் போதாது; Number வாங்க வேண்டும். Number வாங்கவில்லையென்றால், case–ஐ எடுக்க மாட்டார்கள். "இல்லை Sir, இப்பொழுதுதான் வாங்கினேன் Sir", என்றால்—





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Number ஆகவில்லை யென்றால், வழக்கே கிடையாது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. அவருக்கு தெரியாது. ஏனென்றால், அவர் election–இலே மறந்துபோ விட்டிருக்கிறார். ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை மட்டும் இவ்வாறு பண்ணாதீர்கள். நீங்கள் அதிலே செய்த தொண் ஒன்றுதான். நான் இன்னும் சொல்கிறேன்; என்ன தெரியுமா? இந் முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில் சொல்கிறேன் 5, 2001 முதல் 5, 2006 வரையில் பெரியாறு அணை சம்பந்தமா உங்களுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், கேரள முதலமைச்சருக் எழுதியது, 27–12–2002 அன்று ஒரேயொரு கடிதம். ஒரு கடிதம்தான் கேரள முதலமைச்சருக்கு, she wrote a letter regarding the Periyar Dam ஆனால், எங்களுடைய கலைஞர், கேரள முதல்வருக்கு 30–10–199 7–3–1997, 23–8–1997, 24–2–1998, 14–9–1999, 21–1–2000, 27–4–2000, ஆ நான்கும் மூன்றும், ஏழு கடிதங்கள், இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள் பேச்சுவார்த்தையிலே உங்கள் leader கலந்துகொண்டது, 6–12–200 இங்கே கேரள முதலமைச்சர் வந்தபொழுதுதான். ஆனால், எங்க தலைவர் இந்தப் பேச்சுவார்த்தையில், 28–11–1996, 5–4–2000, 13–8–199 19–5–1999, நான்குமுறை கலந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் P.W.D Minister–ஆக இருந்தபொழுது, சேரள Minister–க்கு இதுபற்றி எழுதி கடிதம், இரண்டு. ஒன்று, 2–11–2001, மற்றொன்று 8–5–2002. அடியே எழுதியது, 2–11–1996, 9–10–1999, 12–12–1996, 23, 1999, 18, 2000. இப்பொழுது முந்தாநாள் ஒன்று. ஆகையினாலே, கடிதங்கள் எழுதியதிலும் சரி பேச்சுவார்த்தை நடத்தியதிலும் சரி, நடவடிக்கை எடுத்ததிலும்சா எங்களோடு நீங்கள் போட்டிக்கு வரமுடியாது. இது வேறு பிரச்சினை (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பதில் சொல்லிவிடுகிறேன்; பின்ன நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஏதோ சொல்ல வருகிறார் திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மீண்டும் தங்களுடைய வாதத் திறமையை இங்கே காண்பித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதிலேயும்கூட, நானும் கேரள பொதுப் பணித் துறை அமைச்சரும் சந்தித்ததாக, ஒரு வார்த்தைகூட இதிலே சொல்லவில்லை. நானும், அவர்களும் மூன்று முறை சந்தித்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைப் பொறியாளர்கள் மட்டத்தில், இங்கிருக்கின்ற உயரதிகாரிகளும், அங்கிருக்கின்ற உயரதிகாரிகளும் ஆறு முறை சந்தித்திருக்கின்றார்கள். இதையெல்லாம் அவர், அப்படியே silent–ஆக விட்டுவிட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், அவருக்குத் தேவைப்படுகின்ற point–ஐ மட்டும் எடுத்துக் கூறுகின்றார்; மற்ற point–களைத் தவிர்க்கின்றார் என்பதை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நான் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டது பற்றியும், பேச்சுவார்த்தை நடத்தியது பற்றியும், letters ஆகியவற்றைப் பற்றியும்தான் சொன்னேனே தவிர, Minister–ஐப் பற்றி நான் சொல்லவில்லை. அதேமாதிரி என்னைப் பற்றியும் சொல்லவில்லை. ஏனென்றால், முதலமைச்சர் போனால், கூடவே போகப் போகிறோம். ஆகையினாலே, அதை எடுத்துக்கொள்ளவில்லை. ஆகையினாலே, அதை நான் பெரிதாகச் சொல்லவில்லை. நீங்களும், முதலமைச்சர் போனால், போகப்போகிறீர்கள். ஆக, உங்கள் முதலமைச்சர் ஒரு தடவை போனார்கள்; நீங்களும் ஒரு தடவை போனீர்கள். நானும் எங்கள் முதலமைச்சருடன் ஒரு தடவை போயிருக்கிறேன். (குறுக்கீடு)





## 3. தன்னிலை விளக்கம்

### முதலமைச்சர் அளித்த விருந்தில்–மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்துகொண்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த வேண்டும். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி.

*பிற்பகல் 12–05*

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், நமது உறுப்பினர்களுக்கு, ஒரு விருந்திற்காக அழைப்புக் கொடுத்தார்கள். இந்த அழைப்பை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொண்டது. அப்படி அழைப்பதும், ஏற்றுக்கொள்வதும் மரபு. மரபை மதிப்பதுதான் மரியாதை.

மேலும், தமிழகத்தினுடைய அரசாங்கம் ஏழைகளுக்கு இரண்டு ரூபாய்க்கு, ஒரு கிலோ அரிசி வழங்குவது, 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வது, பெண்களுக்கும், ஆண்களுக்கும், ஆண்தான் வாரிசு என்று காலங்காலமாக இருந்த ஒரு சட்டத்தை, விதியை உடைத்தெறிந்து, ஒரு நேர உணவுக்குக்கூட வழியில்லாத பெண்களுக்கு உதவித் தொகையைப் பெறுவதில், ஆண் வாரிசு இருந்தாலும் அவர்களுக்கும் தருவோம் என்று சொன்னது ஆகிய இந்த நல்ல திட்டங்களை ஏற்றுக்கொண்டு, நன்றி தெரிவிக்கக்கூடிய வகையிலேதான், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் எல்லோரும் அந்த விருந்திலே கலந்துகொண்டோம்.

ஏனோ தெரியவில்லை; மார்க்சிஸ்ட்களை மட்டும் பார்த்து, "இவ்வாறு விருந்திலே கலந்துகொண்டவர்கள், சந்தர்ப்பவாதிகள்" என்று சொன்ன விமர்சனத்திற்கு நாங்கள் உள்ளாகியிருக்கிறோம். இதிலே நடந்த உண்மை என்னவென்றால், கடந்த 2001–லே, கடந்த அ.தி.மு.க. அரசாங்கம் ஓர் அரசு விருந்து கொடுத்தது, Taj Hotel–லில். அப்பொழுது மறைந்த தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். எல்லோரும் கலந்துகொண்டோம்.

மீண்டும் 2003 ஆம் ஆண்டு கடுமையான வறட்சி நிலவிய நேரத்தில், அப்பொழுது ஓர் அரசு விருந்துக்கு ஏற்பாடு செய்தபொழுதுதான், எங்களுடைய அருமை தோழர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள்,

[செல்வி கே. பாலபாரதி] [2006 செப்டம்பர் 2

"கடுமையான வறட்சி நிலவுகிறது; திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில், பட்டினிச் சாவு நிகழ்ந்துகொண்டிருக்கிறது; இந்த நேரத்திலே வேண்டாம்" என்று தமது கருத்தைச் சொன்னார்கள். அதை ஏற்று, அப்பொழுது அ.தி.மு.க. அரசாங்கம் அந்த விருந்தை இரத்து செய்துவிட்டது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லி முடிக்கட்டும்.

**செல்வி கே. பாலபாரதி:** ஆகவே, அரசே அன்று இரத்து செய்த விருந்தில், கம்யூனிஸ்ட்கள் கலந்துகொள்ளவில்லை, அது சந்தர்ப்பவாதம் என்று சொல்வது, எந்தவகையிலே பொருத்தமாக இருக்கும் என்பதனையும்

*"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண*
*நன்னயஞ் செய்து விடல்"*

என்று ஒரு குறள் சொல்வார்கள்; அதனையும் இந்த நேரத்தில், இந்த மன்றத்திலே பதிவு செய்துகொள்கிறேன்.

அதுபோன்று, நமது முதலமைச்சர் வீட்டுப் பெண்களை, அரசியலுக்குச் சம்பந்தமில்லாதவர்களை இழிவுபடுத்தியிருந்தாலும், நீங்கள், இரண்டு ஏக்கர் தரிசு நிலம் இப்பொழுது கொடுக்க இருக்கிறீர்கள். அந்தத் தரிசு நிலங்கள் ஆண்களுக்கு மட்டும்தான் கிடைக்குமா என்று பெண்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், நாங்கள் செல்லக்கூடிய இடத்திலே. ஆகவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அந்தப் பட்டாவை, தரிசு நிலத்திற்குரிய உரிமையை, கணவர், மனைவி இருவருடைய பெயரிலே கூட்டுப் பட்டாவாக வழங்கினால், அது பெண்களுக்கும் சென்று சேரும். தமிழகப் பெண்கள் நிச்சயமாக வாழ்த்துவார்கள் என்றவகையிலே, அந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இந்த நேரத்திலே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, இதை முடித்துவிடுகிறேன். அதாவது, திரு. செங்கோட்டையன், நீங்கள் கொறடா என்கிறவகையில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை எழுந்திருக்கலாம். இதே வேலையாகப் போனால், அவையை நடத்த முடியாது.



2006 செப்டம்பர் 2]

## 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2006 செப்டம்பர் 2

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

பிற்பகல் 12-10

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்திருக்கின்ற 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்டமுன்வடிவைக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன்.

@ 17-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2006 செப்டம்பர் 2] [திரு. சி. ஞானசேகரன்]

ஒரு சட்டமன்ற உறுப்பினர் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற காலத்தில் அவர் இறந்துவிட்டால், அவருடைய துணைவியாருக்கு முதலில் 2,500 ரூபாய் pension கொடுக்கக்கூடிய ஒன்றை, இப்போது 3,000 ரூபாய் என்று அரசு உயர்த்தியிருப்பதற்காக, நான் அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேநேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளத்தை, 16 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 20 ஆயிரம் ரூபாயாக நேற்று உயர்த்தித் தந்திருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இப்போது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்கும் ஓய்வூதியம் கொஞ்சம் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே, நான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தாங்கள் அதைக் கொஞ்சம் உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்கும் ஒரு திருப்தி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பா.ம.க. சார்பிலே யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வரவேற்கிறேன்.

இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பு, நல்ல ஓர் அறிவிப்பாகும், சட்டமன்ற உறுப்பினர்கள் பதவிக் காலத்திலே இறந்துவிட்டால், அவர்களுடைய துணைவியாருக்கு வழங்கப்படுகிற ஓய்வூதியம், 2,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக வழங்கப்படுவதை, பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்பதோடு, நேற்றையதினம் நம்முடைய அரசாங்கம், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூடுதலாக பயணப் படி, தபால் செலவு போன்ற படிகளை உயர்த்தியதையும் பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது.

அதேபோன்று, ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கூடுதலாக ஓய்வூதியத்தை வழங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பரஞ்ஜோதி.

***திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவையில் உரையாற்றுவதற்குரிய வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். என்னை வெற்றிபெறச் செய்த ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் திருத்தச் சட்டத்தின்மீது என் கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

பிரிவு 12 (B)(1)–இல் 2–C–இல் சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர், தன் பதவிக் காலத்தில் இறந்துபோக நேரிட்டால், குடும்ப ஓய்வூதியம் மாதம் 2,500 என்பதை மாதம் 3,000 என்று உயர்த்துவதற்கு இந்த மசோதா வகை செய்கிறது.

இதற்குப் பதிலாக, உறுப்பினர் ஒருவர் உயிரோடு இருக்கும்போது பெறும் ஊதியத்தையே, அவர் இறந்துவிட்டாலும், எஞ்சிய பதவிக் காலத்திற்கு முழு ஊதியத்தையும், அதன்பிறகு வழக்கமான ஓய்வூதியத்தையும் அவரது குடும்பத்திற்குக் கொடுப்பது உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இந்த நேரத்தில், ஒன்றை நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆண்டிப்பட்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி கிருஷ்ணவேணி அம்மாள் அவர்கள், குடியிருப்பதற்குக்கூட வீடில்லாமல், கூலி வேலை செய்து பிழைத்து வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உடனடியாக அவருக்கு வீடும் உதவித் தொகையாக 5 இலட்சம் ரூபாயும் வழங்க ஏற்பாடு செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்ற நிலையில் இருக்கும் குடும்பத்தைச் சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, சட்டமன்ற உறுப்பினர்களை இழந்துவிட்ட குடும்பத்திற்கோ குறைந்தபட்ச தேவைகளையாவது நிறைவுசெய்கிறவகையில் உதவுவது சரியான நடவடிக்கையாக இருக்கும்.



2006 செப்டம்பர் 2] [திரு. மு. பரஞ்ஜோதி]

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம், பல சிறப்பான உரிமைகளையும் அதிகாரங்களையும், விதிவிலக்குகளையும் வழங்கியிருக்கிறது. இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், தங்கள் பதவிக் காலத்தில் இறக்க நேரிட்டால், சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பங்கள் நிர்கதியான நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என்பதற்காகத்தான் இந்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. எனவே, பதவிக் காலத்தில் இயற்கை எய்திவிட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் ஓய்வூதியத்தின் அளவைக் குறைத்து வழங்குவது மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட செயலாக இருக்கும்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Bill-லிலே சுருக்கமாகப் பேசவேண்டும் திரு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** இதோ முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Suggestion-தான் கொடுக்க வேண்டும்.

**திரு. மு. பரஞ்ஜோதி:** Conclusion–க்கு வருகிறேன். எனவே, முழுமையான ஓய்வூதியத்தை அந்தக் குடும்பங்கள் பெறுவதற்கு ஏற்றவகையில், உறுப்பினர் உயிரோடு இருக்கும்பொழுது பெறும் ஊதியத்தையே அவர் இறந்துவிட்டாலும், எஞ்சிய பதவிக் காலத்திற்கும் அவரது குடும்பத்திற்கு முழு ஊதியத்தையும், அதன் பிறகு வழக்கமான ஓய்வூதியத்தையும் வழங்கும்வகையில், சட்டத் திருத்தத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, மரணம் அடைந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணைவியாருக்கு வழங்கப்படுகிற pension உயர்த்தப்படும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக ஒரு சிறு திருத்தத்தை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் ஏற்கெனவே இயற்றப்படுவதற்கு முன்பாக, அதாவது மரணம் அடைந்துவிட்ட சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுடைய துணைவியாருக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்ற சட்டம்

[திரு. சி. கோவிந்தசாமி] [2006 செப்டம்பர் 2

இயற்றப்படுவதற்கு முன்பு, காலமாகிவிட்ட சில சட்டமன்ற உறுப்பினர்களின் துணைவியர்கள் இருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் மொத்தமாகக் கணக்கிட்டால், ஒரு குறைவான எண்ணிக்கையிலேதான் அப்படிப்பட்டவர்கள் இருப்பார்கள். ஆகவே, பல்வேறு உதவிகளை வழங்கிவருகிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கருணை உள்ளத்தோடு இந்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பே காலமாகிவிட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய துணைவியர் சிலபேர் வாழ வழியற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய துணைவியாருக்கும் இந்த உதவித் தொகை பொருந்துகிறவகையிலே, ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து, அவர்களையும் கருணை உள்ளத்தோடு பாதுகாக்க முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இதுபற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரஞ்ஜோதி அவர்கள் ஒரு கருத்து சொல்லும்போது, இறந்துவிட்ட சட்டமன்ற உறுப்பினருடைய குடும்பத்திற்கு 3 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக, அவர் உயிரோடு இருந்தால் எவ்வளவு கொடுக்கவேண்டுமோ, அவ்வளவு கொடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார். ஆனால், 1996 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் நாள் அன்றோ, அல்லது அதன் பின்னரோ, 10 வருடங்களாக இந்தச் சட்டத்தில் எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை. 10 வருடங்களாக அந்தக் குடும்பம் 2,500/– ரூபாய்தான் பெற்று வருகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான், 10 வருடங்களுக்குள்ளே யார் இறந்திருந்தாலும், எந்தச் சட்டமன்ற உறுப்பினர் இறந்திருந்தாலும், கட்சிக்கு அப்பாற்பட்டு, அவருடைய குடும்பத்திற்கு 3 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது அனைவருக்கும் பொருந்தக்கூடியது என்பதனாலே இதை; ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், இதுகுறித்து ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, சம்பளத் திருத்தச் சட்டத்தின் இந்தச் சட்டமுன்வடி குறித்து, பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்க அதிலே குறிப்பாக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடை வாரிசுதாரர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்குகின்ற அந் நிலையை ஏற்கெனவே அரசு கடைப்பிடித்து வருகின்ற சட்டத்தின்மூலமாக. அதாவது, பதவிக் காலம் முடிந்ததற்குப் பிறகு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெறும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்க அவர்கள் இறந்தவுடனே, அவருடைய வாரிசுதாரருக்கு 3 ஆயிரம் ரூபா என்று இருக்கின்றது.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் பதவியிலே இருக்கின்ற காலத்திலே இறந்துவிட்டால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு 2,500 ரூபாய் என்ற இரு வேறுபாடுகள் இருக்கின்றன. ஒரே ஓய்வூதியம் வழங்குவதிலே இரு வேறுபாடுகள் இருக்கின்றன. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால் 3 ஆயிரம் ரூபாய், பதவியிலிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்தால் 2,500 ரூபாய் என்று இருக்கின்றது. இதை அறிந்துதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த வேறுபாடு களையப்பட வேண்டுமென்பதற்காக—1995 ஆம் ஆண்டிலே, நிறைவேற்றப்பட்ட சட்டப இது—10 ஆண்டுகளுக்குப் பின்னால், அதை ஆய்வு செய்து, இந்த வேறுபாடு களையப்பட வேண்டும்; முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் ஒன்றுதான், சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற காலத்திலே இறந்தாலும் ஒன்றுதான்; அவருடைய வாரிசுதாரருக்கு வழங்கப்படுகிற இந்த வேறுபாட்டைக் களைய வேண்டுமென்பதற்காகத்தான் 2,500 ரூபாய் என்பதை 3,000 ரூபாயாக மாற்றி, அந்த வேறுபாட்டை இந்தச் சட்டத் திருத்த முன்வடிவு மூலமாகக் களைந்திருக்கிறார்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், உறுப்பினராக இருக்கின்ற காலத்திலே இறந்துவிட்டால், எஞ்சிய பதவிக் காலங்களுக்கும் அவர்களுடைய வாரிசுகளுக்கு உதவியாக, அதே சம்பளத்தை வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நிச்சயமாக இயலாது. ஓர் அரசு ஊழியர் பணியிலே இருக்கின்ற காலத்திலே இறந்துவிட்டால், அவர்கள் ஓய்வுபெறுகிற காலம்வரை, அரசாங்கம் நிச்சயமாக அதே சம்பளத்தைச் செலுத்த இயலாது. அது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்ததுதான். அது நிச்சயம் இயலாது. இந்த வேறுபாட்டைச் சரிபார்த்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் இறந்துவிட்டவர்கள் ஆகியோருடைய நலன்

கருதித்தான், இந்த வேறுபாட்டைக் களைந்திருக்கின்றார்கள். எனவே, இந்தச் சட்டத் திருத்தமுன்வடிவை அனைவரும் நிறைவேற்றித் தர நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2006), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 1—9—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், ஏதாவது பேசுகிறீர்களா? யாரும் பேசவில்லையா? சரி. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,





"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)–தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்கல்வியிலே மாணவர்கள் சேர்க்கை, மாணவர் கட்டணம் தொடர்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவிலே சில கருத்துகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவிலே, Section 3; அதிலே மாணவர்கள் எப்படிச் சேர்க்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது: 'Admission to every Government seat shall be made by such authority as may be specified by the Government in this behalf, by centralised counselling based on merit, transparency and non-exploitative manner'. அதில் centralised Counselling என்று சொல்லப்பட்டிருக்கிறது, வரவேற்கத்தக்கது. ஆனால், அதில் ஒரு வார்த்தை விடுபட்டிருக்கிறது. இதில், ஏதோ நான் உங்களைக் குறை சொல்வதற்காகக் கருத்துகளைச் சொல்வதாக தயவுசெய்து எடுத்துக்கொள்ளாதீர்கள். ஒரு வார்த்தை Centralised Counselling through Single Window System என்று அதிலே போட்டிருக்க வேண்டும். ஏனென்றால், ஒரு வார்த்தை விடுபட்டுவிட்டால், இன்றைக்குத் தொழிற்கல்வி நிலையங்களை நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள், கோடிக்கணக்கான பணத்தை வைத்து நடத்திக்கொண்டிருக்கின்றவர்கள், அந்த வார்த்தையை வைத்து நீதிமன்றத்திற்குச் சென்று, இந்தச் சட்டத்தின் நோக்கத்தையே, அந்த அடிப்படை நோக்கத்தையே தடை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. Supreme Court அந்த இனாம்தார் வழக்கிலே கொடுத்திருக்கிறதே.–நீங்கள் சொல்லலாம், centralised counselling என்றாலே Single Window System என்று நீங்கள் சொல்லலாம். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், வழக்கறிஞர்களை வைத்து,

@ 31—8—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





இலட்சக்கணக்கான பணத்தைக் கொடுத்து நீதிமன்றத்திலே வாதாடுகின்றபோது, அதை வைத்து ஏதாவது ஓர் ஆணையைப் பெற்று, இந்தச் சட்டத்தையே தோற்கடிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதனால்தான் Supreme Court மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

இனாம்தார் வழக்கிலே, எப்படி மாணவர்களைச் சேர்க்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. 'It needs to be specifically stated that having regard to the larger interest and welfare of the students community to promote merit, achieve excellence and curb mal-practice, it would be permissible to regulate admission by providing centralised and single window system' என உச்ச நீதிமன்றம் தெளிவாகச் சொல்லியிருந்தது. ஆனால், அறிவார்ந்த நீதிபதிகளே, இந்த வழக்கறிஞர்கள் அந்த வார்த்தை வித்தைகளில் விளையாடுகின்றவர்கள் என்று தெரிந்துதான், Centralised and Single Window System என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் இப்போது கொண்டு வந்திருக்கிற இந்த Section 3, Section 4 என்று இருக்கிற இடங்களிலே 'Students may be admitted by Centralised Counselling through Single Window System' என்ற அந்த வார்த்தைகளைச் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனறால், கேரளாவிலே கொண்டு வரப்பட்டிருக்கிற அந்த Bill–ஐப் பார்த்து, அதனுடைய model–லே, என்னவெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அதிலிருந்தே எடுக்கப்பட்டிருக்கின்றன. கேரளாவிலே சொல்லப்பட்டிருக்கிற அந்த Bill–ஐக்கூட நீங்கள் பார்க்கலாம்.

'Common Entrance Test' என்ற தலைப்பில் 'Centralised Counselling for the purpose of merit based admission to professional colleges or institutions through Single Window procedure by the State Commissioner for Entrance Examination' என்று இருக்கிறது. ஆகவே, அந்த வார்த்தையை நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த வருடம் தொழிற்கல்வியில் மாணவர்கள் சேர்க்கையிலே, உச்ச நீதிமன்றத்திலே, மாநில அரசாங்கத்தின் தலைமை வழக்கறிஞர், ஒரு Affidavit-ஐத் தாக்கல் செய்திருந்தார். "அரசாங்கத்தில், Single Window System; அதை நாங்கள் வற்புறுத்தமாட்டோம்" என்று சொன்னார்கள். இதையே அவர்கள் முன்னோடியாக எடுத்துக்கொண்டு, "அடுத்த ஆண்டும் நாங்கள் Single Window System; அதை அமல்படுத்தமாட்டோம்" என்று அவர்கள் சொல்லிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். எனவே, நீங்கள் அந்த வார்த்தையை இந்தச் சட்டமுன்வடிவிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி.வி. சண்முகம்] [2006 செப்டம்பர் 2

அதேபோன்று இன்னொன்று. நீங்கள் மாணவர் சேர்க்கைக்கும், மாணவர் கட்டணத்திற்கும் ஒரு குழு நியமிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இப்போது தமிழகத்திலே கிட்டத்தட்ட 250 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றை ஒரே குழு, மாணவர்கள் சேர்ப்பதையும் அவர்கள்தான் பார்க்கவேண்டும்; 250 கல்லூரிகள் விதிக்கும் கட்டணத்தையும் அந்த ஒரு குழுவே அந்தப் பணியைச் செய்யவேண்டுமென்பது. மிகக் கடினமான பணி. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, கேரளாவிலே எப்படி இரண்டு குழுக்கள், மாணவர்கள் சேர்க்கைக்கு ஒரு குழு, மாணவர்கள் கட்டணம் நிர்ணயிப்பதிலே ஒரு குழு என்று இரண்டு குழுக்கள் போட்டிருக்கிறார்களோ, அதேபோன்று நம்முடைய மாநிலத்திலேயும் இரண்டு குழுக்களைப் போட்டு நீங்கள் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று அந்தக் குழுக்களில் இருக்கின்ற தலைவர் அன்றைக்கு ஒரு—

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரமாகச் சொல்லுங்கள் Sir.

**திரு. சி.வி. சண்முகம்:** Suggestion தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Suggestion தான். சீக்கிரமாகச் சொல்லச் சொல்கிறேன்.

**திரு. சி.வி. சண்முகம்:** இது முக்கியமானது. இந்தச் சட்டம் நிறைவேறிவிட்டால், பிறகு உங்களுக்குத் தெரியும். மருத்துவக் கல்லூரிகளையும், தொழில் கல்லூரிகளையும் சேர்ந்தவர்கள் எப்படி எல்லாம் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள் என்பதைக் கடந்த ஆண்டுகளிலேயிருந்து நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாம் என்னதான் சட்டம் கொண்டு வந்தாலும், என்னதான் செய்தாலும், எதையாவது ஒரு காரணத்தைச் சொல்லி சட்டத்திற்குத் தடையை வாங்கி விடுகிறார்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். சட்டம் நிறைவேறுவதற்கு முன்பாக நாங்கள் சொல்கின்றோம், இரண்டு குழுக்களைப் போடுங்கள் என்று.



2006 செப்டம்பர் 2] [திரு. சி.வி. சண்முகம்]

அதேபோல, அந்தக் குழுக்களுக்குத் தலைவர்களை retired Judges; அவர்களைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குழுக்களில் நீங்கள் உறுப்பினர்களைப் போட்டிருக்கிறீர்கள். உயர் கல்விச் செயலாளர், மருத்துவக் கல்லூரிச் செயலாளர்களை எல்லாம் போட்டிருக்கிறீர்கள். இதிலே பலமுறை அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். ஆகவே, சட்டத் துறையைச் சேர்ந்தவர்களுள் ஓர் உறுப்பினரை நீங்கள் அவசியம் போட வேண்டும். இன்னும் முக்கியமானது ஒன்று. அந்தக் கட்டணங்களை நிர்ணயிக்கின்ற குழுவிலே, கண்டிப்பாக தனியார் பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் யாரும் உறுப்பினராக அதில் இருக்கக் கூடாது. நீங்கள், இந்தச் சட்டமுன்வடிவிலே, தனியார் பொறியியல் கல்லூரியைச் சார்ந்த ஒருவரை நியமிப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். கண்டிப்பாக அவர்களை இந்தக் குழுவிலே நீங்கள் நியமிக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; தவறு செய்தவர்கள், இந்தச் சட்டத்தை, இதிலே உள்ள விதிமுறைகளை மீறுபவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் தண்டனை என்று இந்தச் சட்டத்திலே கொடுத்திருக்கிறீர்கள். இது போதாது. கேரளாவிலே கொண்டு வந்திருக்கிற சட்டத்தின் பிரகாரம், 10 இலட்சம ரூபாய் தண்டனை என்று கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இந்தச் சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், ஓராண்டிலிருந்து 3 ஆண்டுக் காலத்திற்கு அவர்களுக்குத் தண்டனை அளிக்கின்ற விதமாகவும், 50 இலட்சம் ரூபாய்க்கு மேலாக தண்டனைத் தொகையை விதிக்கின்ற வகையிலேயும் சட்டத் திருத்தம் அங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதே மாதிரி திருத்தத்தையும் இந்தச் சட்டத் திருத்தத்திலே கொண்டுவர வேண்டும். அதுமட்டுமல்ல; 250 colleges–க்கும் தனித் தனியாக ஒவ்வொரு தொழில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** Point of clarification.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதில் கூடவா பிரச்சினை?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகம், உங்களுக்கு finishing trouble. முடிக்க முடியவில்லை உங்களால். ஆமாம்; உங்களுக்கு முடிக்கத் தெரியவில்லை.

**திரு. சி.வி. சண்முகம்:** முடிக்கத் தெரியாமலோ, பேசத் தெரியாமலோ நாங்கள் ஒன்றும் இங்கே இல்லை. ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறீர்கள். சட்டத் திருத்தத்தை ஒவ்வொரு இடத்திலேயும் இடையிலே, எங்கே நாங்கள் கருத்துச் சொல்ல வேண்டுமோ அங்கே கருத்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏதோ பொத்தாம்பொதுவிலே சொல்லிவிட்டுப் போவதற்காக இல்லை. இது மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. தமிழகத்தினுடைய மாணவர்களுடைய பிரச்சினை. அந்த மாணவர்கள் பாதிக்கப்படுவதைப் பற்றிப் பேசக்கூடாதா? (குறுக்கீடு) நாளைக்கு பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக அந்தக் கருத்துகளை இங்கே சொல்லக்கூடாதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள், இந்தத் துறையிலே கல்வி அமைச்சராக பணியாற்றினார்கள். அவர் பணியாற்றுகிறபோது கேரளாவிலே இருந்த சட்டம், அப்போது இருந்தது. மற்ற மாநிலங்களிலேயும் இருந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் உங்களைப் பேச விடுகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்று சொல்வார்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகம், repeated-ஆகப் பேசக்கூடாது. அதுதான்.

**திரு. டி. சுதர்சனம்:** அதைப்போன்று, அவர் பதவிபோன பின்னாலே இப்போது அறிவுரைகள் வழங்கிக் கொண்டிருக்கிறார். அந்த அறிவுரைகள் தேவைதானா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சண்முகம், முடியுங்கள், சீக்கிரம் முடித்து விடுங்கள். இன்னும் நான்கைந்து Bill-கள் இருக்கின்றன.

**திரு. சி.வி. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சொத்தை நான் வாரிக்கொண்டு போவதற்காகச் சொல்லவில்லை. என்னுடைய கருத்தைச் சொல்கிறேன். ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் அரசாங்கத்தினுடைய முடிவு. நான் கருத்தைச் சொல்கிறேன். தெரிந்ததைச் சொல்கிறேன். நான் மெத்த படித்த மேதாவி என்று என்னைச் சொல்லிக்கொள்ளவில்லை. எனக்குத் தெரிந்ததை, மற்றவர்கள் சொன்னதை, பொதுமக்கள் சொன்னதை, பத்திரிகையாளர்கள் சொன்னதை நான் கேட்டதைச் சொல்கிறேன். அதற்கு ஏன் நீங்கள் இப்படிக் கட்டுப்படுத்துகிறீர்கள்?





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** நான் அரசின் கொள்கையைக் குறை சொல்லவில்லை. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 240 பொறியியல் கல்லூரிகளுக்குமேல் தமிழகத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு கல்லூரிக்கும் தனித் தனியாகக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வார்கள் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப்படிதான் போட்டிருக்கிறார்கள் என்று. நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன்; இல்லை என்று சொல்லவில்லை. இருந்தாலும், ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு கட்டணம் என்றால், 250 கல்லூரிக்கும் தனித் தனியாகக் கட்டண விகிதம் என்றால், ஏற்கெனவே மாணவர்கள் குழப்பத்தில் இருக்கிறார்கள். இனி, அடுத்து வருகின்ற மாணவர்கள், இந்தக் கல்லூரியிலே கட்டணம் 10 ஆயிரம் ரூபாய், அந்தக் கல்லூரியிலே 50 ஆயிரம் ரூபாய், இந்தக் கல்லூரியிலே 1 இலட்சம் ரூபாய் என்று 250 கல்லூரிகளுக்கும் தனித் தனியாகக் கட்டண விகிதம் என்றால், மாணவர்களிடையே மிகப் பெரிய...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதையே எத்தனை தடவை சொல்வீர்கள்? Mr. Shanmugam, you are grinding. அரைத்ததையே அரைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இது ஏற்கெனவே நீங்கள் சொல்லிவிட்டீர்கள். Then I will call another Gentleman. இல்லை. (குறுக்கீடு) நீங்கள் இருங்கள் Sir. கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் முடியுங்கள். சொன்னதையே repeated-ஆகச் சொல்லக் கூடாது. This is only a Bill.

**திரு. சி.வி. சண்முகம்:** ஆகவே, அனைத்துக் கல்லூரிகளும் ஒரே கட்டணமாக நிர்ணயிக்கின்றமாதிரி ஒரு வழிவகையைக் கண்டுபிடித்து, சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லி, இங்கே நான் சொல்லி இருக்கிற கருத்துகளில் மிக முக்கியமாக அந்த Single Window System அந்த வார்த்தையை இந்தச் சட்டத் திருத்தத்திலே கொண்டு வரவேண்டும் என்று சொல்லி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் சுதர்சனம்.

*பிற்பகல் 12–35*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் இருக்கின்றன. அரசு அங்கீகாரம் பெறாத தனியார் சுயநிதிக் கல்லூரிகளும் இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளிலே accreditation பெற்ற கல்லூரிகள் இருக்கின்றன; Accreditation இல்லாத கல்லூரிகளும் இருக்கின்றன; Accreditation பெற்ற கல்லூரிகள் ஒரு கட்டணத்தை நிர்ணயிக்கின்றார்கள். Accreditation பெற்ற கல்லூரிகள், அனைத்து வசதிகளும் பெற்ற கல்லூரிகள், இரண்டே வகைகள்தான் இருக்கின்றன. மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் அதை நன்றாக அறிவார்கள். ஆனால், எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் என்று சொல்வது, அது தவறான கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு கொண்டு வந்திருக்கிற, தொழிற் கல்லூரி நிறுவனங்களில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிக்கப்படுதல் ஆகியவற்றை ஒழுங்குப்படுத்துகிற இந்தச் சட்டமுன்வடிவை, காங்கிரஸ் கட்சி வரவேற்கிறது. ஏற்கெனவே, பொறியியல் கல்லூரிகள் 250–க்குமேல் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல, மருத்துவத் துறையிலே இப்போது ஒருசில மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டாலும், அவை Deemed University என்று ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, மாணவர்கள் சேர்க்கை, கட்டணத்தை நிர்ணயிப்பது எல்லாமே அவர்களே முழுமையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மூன்று கல்லூரிகள்தான், மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தளவிலே அரசு ஒதுக்கீடு பெறக்கூடிய நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால், 250 பொறியியல் கல்லூரிகள் என்று இருக்கிறபோது, எல்லாக் கல்லூரிகளுக்கும் ஒரு குழுவை நியமித்து ஒரே வகையான கட்டணத்தை நிர்ணயிப்போம் என்று இப்படியெல்லாம் தொடர்ந்து சொன்னால், நிச்சயமாக மாணவர்களுக்கு அது ஒரு பெரிய இடர்ப்பாட்டை ஏற்படுத்தும். ஆகவே, மாநகரப் பகுதியாக இருக்கிற சென்னையிலே உள்ள பொறியியல் கல்லூரிகளிலே எவை எவை தரமான கல்லூரிகள் என்று பார்த்து அந்தத் தரத்தினுடைய அடிப்படையிலே அவர்களுக்கு





ஒரு structure fees என்றும், அதற்கடுத்து ஒரு மூன்று வகைப்படுத்தி, அந்த மூன்று வகைகளை, சிறந்த கல்லூரிகள், அதற்கடுத்திருக்கிற நடுத்தரமான கல்லூரிகள், பிறகு சாதாரண கல்லூரிகள் என்று வகைப்படுத்தி அதற்கேற்றாற்போல ஒரு கட்டணத்தை நிர்ணயிக்கக்கூடிய அளவிலே, ஒரு தகுந்த ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, இப்போது ஒரு குழுவை அரசு நியமிக்க இருக்கிறது. அந்தக் குழுவிற்கு அந்தந்தத் துறையினுடைய செயலாளர்கள் போன்றவர்கள் எல்லாம், அதேபோல தனியார் கல்லூரி நடத்தக்கூடியவர்கள்கூட, அதிலே ஒருவர் பிரதிநிதியாக, அதிலே உறுப்பினராக இருப்பார் என்று இந்தச் சட்டத்திலே "H" என்கிற பிரிவின்கீழ் இணைத்திருக்கிறீர்கள். ஆனால், ஏற்கெனவே, இந்தக் கட்டணத்தை நிர்ணயிப்பதற்காக இராமன் Committee என்ற ஒன்றும், அதேபோல சுப்பிரமணியம் Committee என்ற ஒன்றும் என இரண்டு Committee-கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டம் இயற்றப்பெற்ற பிறகு, அந்த Committee-கள் தானாகக் கலைந்துவிட வேண்டும். அதற்கு அரசு என்ன செய்யப் போகிறது என்பதற்கான ஒரு விளக்கத்தை நான் அமைச்சரிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, இந்தக் கட்டணம் வசூலிக்கிறபோது, சில நேரங்களிலே நிறைய அதாவது அவர்கள் இஷ்டத்திற்கு வசூலிக்கிறார்கள். கட்டணத்தை அரசு ஒன்று நிர்ணயிக்கிறது. ஆனால், கல்லூரிகளிலே அவர்கள் அதையெல்லாம் பொருட்படுத்தாமல், அவர்கள் இஷ்டத்திற்குத் தனியாக ஒரு fees-ஐப் போட்டு, ஏதாவது ஒரு Trust வைத்திருப்பார்கள்; அதற்கு Charity Fees என்று வைக்கிறார்கள்; அல்லது ஏதாவது Library Fees என்று வைக்கிறார்கள்; இந்தமாதிரி ஏதாவது ஒன்றைச் சொல்லி, அப்படி அவர்கள் சில fees-களை வாங்கிவிடுகிறார்கள். ஆகவே, அதற்கும் சரியான ஒரு வழிமுறையை வகுத்து, இவ்வளவுதான், இதற்குமேல் வசூலிக்கக் கூடாது என்கிற ஒரு நிலையை அரசு உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தவறு செய்பவர்களை—Deemed University; இந்த Deemed University–யிலே நாம் ஒரு seat-கூட வாங்க முடிவதில்லை—இதுபோன்ற சட்டங்களின் பிடிக்குள் கொண்டுவந்து, Deemed University–யிலும் நாம் அரசு ஒதுக்கீட்டை ஏதாவது பெறவேண்டும். பொதுவாக, இப்போது இருக்கக்கூடிய பொறியியல் துறையில் நிறைய seat-கள் காலியாக இருக்கின்றன. அதைப்பற்றி இப்போது பிரச்சினையில்லை. ஆனால்,

மருத்துவத் துறையைப் பொறுத்தளவிலே, அதிலே ஏதாவது seat வாங்கினால்தான் நாம் மாணவர்களுடைய அந்தத் தேவையை, demand–க்கு ஏற்றாற்போல் சில seat-களை நாம் பெற முடியும். இல்லையென்று சொன்னால், சில தனியார் கல்லூரிகளை அனுமதித்தாவது நாம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும். இல்லையென்று சொன்னால், தமிழ்நாட்டு மாணவர்கள் இப்போது நிறைய பேர் கர்நாடகா அல்லது ஆந்திரா போன்ற பகுதிகளுக்கு எல்லாம் சென்று, அங்கே பணத்தைக் கொட்டிக் கொடுத்துப் படிக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டிலேயே மருத்துவம் படிக்கக்கூடியவர்கள், அந்த மருத்துவக் கல்லூரிகளிலே சேரக்கூடிய ஒரு வாய்ப்பினை அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் குழுவை நியமிக்கிறபோது, இதிலே சட்டமன்ற உறுப்பினர் ஒருவரையும் நியமித்தால், சட்டமன்ற உறுப்பினருடைய அந்த நிலைப்பாடு என்ன என்பதைப்பற்றிகூட அந்தக் குழுவிலே விவாதிப்பதற்கு ஒரு வழிவகை இருக்கும். ஆகவே, அவர்களையும் ஓர் உறுப்பினராக நீங்கள் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. கோ.க. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழிற் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துகிற சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதிலும் குறிப்பாக, கடந்த ஆண்டுகளில் மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படாத நிலை. கட்டணம், அவர்கள் விருப்பத்திற்கேற்ப தாறுமாறாக வசூலிக்கக்கூடிய நிலையெல்லாம் இருந்ததை உணர்ந்து நம்முடைய அரசு பொறுப்பேற்றவுடனே, ஏழை எளிய குழந்தைகள், உயர் கல்வி படிக்கவேண்டும்; கட்டணத்தைக் குறைக்க வேண்டும்; முறைப்படுத்த வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான், கல்வியிலே ஒரு மிகப் பெரிய சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக, அரசு இந்த நல்ல சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருப்பது என்பது, உள்ளபடியே தமிழ்நாட்டு மக்கள், ஏழை எளியவர்கள் எல்லோரும் வரவேற்கக்கூடியதாக, ஒரு நல்ல சட்டத் திருத்தமாக இங்கே அமைந்திருக்கிறது.





பிற்பகல் 12–40

அதிலும் குறிப்பாக, இந்தச் சட்டத் திருத்தம் குறித்து நான் சொல்லுகின்ற நேரத்தில், இதற்கு முன்பு இருந்த கட்டணத்தைத் திருத்தி நிர்ணயிப்பதற்கும், இடங்களைத் தேர்வு செய்வதற்கும், இராமன Committee, சுப்ரமணியம் Committee என்ற இரண்டு குழுக்களை, கடந்தகால அரசு நியமித்து இருந்தது. அந்தக் குழுவிலே இருந்தவர்கள் சமூக நீதியில், ஏழைகளின்பால் அக்கறை இல்லாத காரணத்தாலே, அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப, தனியார் கல்வி நிறுவனங்களின் விருப்பத்திற்கு ஏற்ப, கட்டணத்தையும், இடங்களையும் வழங்கிக்கொண்டு இருந்தார்கள். ஆகவே, நம்முடைய அரசு குழு அமைக்கின்ற நேரத்தில், சமூக நீதியில் அக்கறை உள்ளவர்களை—கட்டணம் குறைக்க வேண்டும்; ஏழைகளின்பால் அக்கறை உள்ளவர்களை—இந்தக் குழுவிலே இடம் பெறச் செய்ய வேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில், இப்போது நுழைவுத் தேர்வு கூடாது. இந்த உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கையில் தடையாக இருக்கிற, ஏழை எளியவர்கள் நுழையாமல் இருக்கிற, அந்த நுழையாத் தேர்வை, நுழையாதத் தேர்வாக இருக்கிற நுழைவுத் தேர்வை, இரத்து செய்ய வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள்; இங்கே தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், தமக்கு என ஒரு வரம்பை ஏற்படுத்திக்கொண்டு, அரசு இட ஒதுக்கீட்டிற்கு வாய்ப்பு அளிக்காமல், அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப கட்டணங்களை வைத்துக்கொள்வது, தேர்வு முறையை வைத்துக்கொள்வது, தேர்ச்சி விகிதத்தை அவர்களே அறிவித்துக்கொள்வது போன்ற பல்வேறு நிலைகளிலே தன்னிச்சையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். மின்சாரம், தண்ணீர் போன்ற பல்வேறு சலுகைகளையெல்லாம் அனுபவித்துக்கொண்டு அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப நடத்தக்கூடிய, அந்த தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய, ஒழுங்குபடுத்தக்கூடிய ஒரு சட்டத்தையும் இங்கே கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேவேளையில், இப்போது இட ஒதுக்கீட்டிற்கு மிகப் பெரிய சோதனை ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நேரம், தமிழ்நாட்டிலே, கல்வியிலே, வேலைவாய்ப்பிலே. இப்போது கல்வியைப் பற்றிப்

[திரு. ஜி. கே. மணி] [2006 செப்டம்பர் 2

பேசுகின்ற காரணத்தினால், 69 சதவிகித இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை வந்துவிடுமோ என்ற அச்சம்கூட நமக்கு ஏற்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18, பழங்குடியினருக்கு 1, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30 என்ற விழுக்காடுகள் இருக்கிற, இந்த இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை வரக்கூடிய ஒரு நேரம். காரணம், இப்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்கள், இந்த 69 விழுக்காட்டிற்கான இட ஒதுக்கீட்டை 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்கும்; அதனுடைய விசாரணை, வருகிற அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி தொடங்கும் என்று சொன்ன ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. ஆகவே, இந்த நேரத்திலே இட ஒதுக்கீட்டிற்குச் சோதனை வந்துவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த உயர் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்டவர்களும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் படிக்கக்கூடிய வாய்ப்பே இல்லாமல் போய்விடும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தினாலே, உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற அந்த வழக்கிற்கு, நம்முடைய அரசு, உயரிய சட்ட வல்லுநர்களைக் கொண்டு அந்தச் சட்டத்தை நாம் மீண்டும் உச்ச நீதிமன்றத்திலே நிறைவேற்றுவதற்கு முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். அதிலேகூட, நம்முடைய மக்களவைத் தலைவராக இருக்கிற மாண்புமிகு திரு. சோம்நாத் சாட்டர்ஜி ஒன்றைக் குறிப்பிட்டு இருக்கிறார். சமூக மேம்பாட்டிற்காகக் கொண்டு வரக்கூடிய, சட்டமன்றத்திலோ நாடாளுமன்றத்திலோ கொண்டு வரக்கூடிய சட்டங்களுக்கு, உச்ச நீதிமன்றமோ, உயர் நீதிமன்றமோ தடைவிதிக்கக் கூடாது, அதிலே தலையிடக் கூடாது என்ற ஓர் உயர்ந்த கருத்தைச் சொல்லி இருக்கிறார். அவர் அவ்வாறு சொல்லிவிட்டு, நம்முடைய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்ன ஒரு கருத்தையும் அங்கே குறிப்பிட்டு இருக்கிறார். நேருஜி அவர்கள் சொன்னது: "எந்த நீதிமன்றமும், நீதித் துறையும், நாடாளுமன்றத்தின் மூன்றாவது அவையாகச் செயல்பட்டு, தவறுகளைத் திருத்தும் அவையாக மாற முடியாது; வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் நீதித் துறை செயல்படவேண்டும்; சமூகச் சீர்திருத்தம் தொடர்பான விஷயங்களில் நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவையின் செயல்பாடுதான் இறுதியானது; இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது; ஒட்டுமொத்த சமுதாயத்தின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் இருப்பதற்கு, எந்த உச்ச நீதிமன்றமும், நீதித் துறையும் இருக்க முடியாது" என்ற மிக உயர்ந்த கருத்தை, டண்டித



2006 செப்டம்பர் 2] [திரு. ஜி. கே. மணி]

ஜவஹர்லால் நேரு அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் மனதிலே தாங்கி இந்த இட ஒதுக்கீட்டுக்குச் சோதனை வந்துவிடாமல்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் கவனத்திற்கு; இன்னும் 6 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ஜி.கே. மணி:** உயர் கல்வி நிலையங்களில் அனைத்துத் தரப்பு மக்களும் படிப்பதற்குக் கட்டணத்தைக் குறைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற அந்த வழக்கிலே நல்ல தீர்வினை ஏற்படுத்துவதற்கு நல்ல சட்ட வல்லுநர்களைக் கொண்டு, இந்தச் சட்டத்தை எதிர்கொள்வதற்கு, நல்ல தீர்ப்பினை நாம் பெறுவதற்கு, அரசு முன்வரவேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, இந்தச் சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன்.

*பிற்பகல் 12–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு ஓர் அறிக்கையை வாசிக்கின்றபொழுது, எங்கள் பக்கமிருந்து சில ஆட்சேபணைகள் இருந்தன. அந்த ஆட்சேபத்திற்குரிய வார்த்தையை நாங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னோம். நீக்குவதை மறுத்ததைக் கண்டித்து நாங்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கின்றோம். (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி. திரு. மகேந்திரன், Bill-இல் பேசுகிறீர்கள்; கொஞ்சம் குறைவாகப் பேசுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுதல் ஆகியவற்றை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய

சட்டமுன்வடிவில், ஏற்கெனவே உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, மாணவர்கள் சேர்க்கை என்று வரும்போது, இந்தச் சட்டத்தில் ஒற்றைச் சாளர முறை என்ற வாசகம் இடம்பெறுவதற்கும், அதேபோன்று, மாணவர்கள் சேர்க்கை மற்றும் கட்டணங்களை நிர்ணயிக்கப்படுதல் ஆகியவற்றிற்கு அமைக்கப்படக்கூடிய குழு என்பது, கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய தொழில் கல்வி நிறுவனங்களைவிட பல மடங்கு கூடுதலாக தொழிற் கல்வி நிறுவனங்கள் இருக்கக்கூடிய நம்முடைய மாநிலத்தில், ஒரு மாத காலத்திற்குள்ளாக admission என்பது நடைபெறக்கூடிய காரணத்தினால், இதை ஒழுங்குபடுத்துவதற்கு முறைப்படுத்துவதற்கு வரக்கூடிய விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்கு ஒரு குழு என்பது போதுமானதாக இருக்க முடியாது என்பதால் மாணவர்கள் சேர்க்கையைக் கண்காணிப்பதற்குத் தனியாகவும், அதைப்போன்று கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவதைக் கண்காணிப்பதற்குத் தனிக் குழுவும் என இரண்டு குழுக்கள் அமைப்பதற்குமான என்னுடைய வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

மேலும், அந்தக் குழுக்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர்களும், அதேபோன்று, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய மாணவர் அமைப்புகளது பிரதிநிதிகளையும் இணைக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். கட்டணங்கள் நிர்ணயம் என்று வரும்போது, பிரிவு 7, உட்பிரிவு 1-லே 6 விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொழில் கல்வி நிறுவனத்தின் இட அமைப்பு, தொழில் கல்வி நிறுவனத்தின் தன்மை, இருக்கக்கூடிய உள் கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் பேணி வருதல் அடிப்படையில் ஏற்படக்கூடிய செலவினம், நிறுவன வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காகத் தேவைப்படும் நியாயமான மிகை அளவு இவை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு, கட்டணங்களை நிர்ணயிக்கலாம் என்ற ஒரு வழி அதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, தமிழகத்தில் இராமன் Committee-யால் முன்மொழிந்திருக்கக்கூடிய கட்டணம் என்பது, கூடுதலாக இருக்கிறது என்ற கோரிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், தமிழகத்தில் இருக்கக்கூடிய ஒருசில கல்வி நிறுவனங்கள், தொழிற் கல்வி நிறுவனங்கள், இந்த உட்பிரிவுகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, கூடுதலான கட்டணங்களை, பல இலட்சக்கணக்கான ரூபாயை கட்டணங்களாக வசூலிப்பதற்கான வாய்ப்பு இருக்கக்கூடிய காரணத்தினால்,



கட்டணங்கள் முறையாக, ஓரே அளவுக்கு, தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதி மாணவர்களும் பயன்படுத்தக்கூடிய அளவிற்கான கூடுதல் கட்டணத்தை நம்முடைய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர். (குறுக்கீடு) அடுத்து ம.தி.மு.க. உறுப்பினர் திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் சபையிலிருந்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்த Bill-ஐப்பற்றிப் பேசவில்லையா?

**திரு. வீர. இளவரசன்:** வெளியேறுவதை ஆதரித்து, வெளிநடப்பை ஆதரித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் வெளிநடப்புச் செய்கிறது.

(ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. விடியல் எஸ். சேகர், நீங்கள் ஏதாவது காங்கேயத்தைப்பற்றிச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) Sir, ஒரு நிமிடம் Sir. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற் கல்வி நிறுவனங்கள் மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல் சட்டமுன்வடிவை, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் வரவேற்று, அதேநேரத்தில், அந்த உதவி பெறாத தொழில் கல்வி நிலையங்கள் மேற்கொள்கிற சேர்க்கையை மேற்பார்வை செய்கிற குழுவிலே, மாணவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிற திட்டம் ஏதாவது இருந்தால், அதைச் சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மாணவர் பிரதிநிதிகள் என்றால், அதிலே சம்பந்தப்பட்ட மாணவர்களோ, அவர்களது பெற்றோர்களோ கண்டிப்பாக அந்தக் குழுவிலே ஒருவராகச் சேர்க்கப்பட வேண்டும்.

*பிற்பகல் 12–50*

இரண்டாவது, இதுபோன்ற கல்லூரிகள், தமிழகம் முழுவதும் 400–க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட கல்லூரிகள்மீது வருகின்ற புகார்களை விசாரிப்பதற்கு மாவட்ட அளவில், கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டுமென்ற ஒரு ஷரத்தையும் இதிலே சேர்க்க வேண்டும். ஆங்காங்கு அந்தக் கல்லூரிகள் வசூலிக்கின்ற கட்டணங்கள்குறித்து வருகின்ற குறைபாடுகளை, புகார்களை விசாரிப்பதற்கு மாவட்ட அளவில் ஒரு கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டுகிறேன்.

எல்லாக் கல்லூரிகளிலும், "அரசு இவ்வளவு கட்டணம்தான் நிர்ணயித்திருக்கிறது; இந்தக் கட்டணத்தைத்தான் வசூலிக்க வேண்டும்; இதை மீறி வசூலித்தால், இந்தத் தொலைபேசியிலே, இந்த அதிகாரியிடத்திலே புகார் செய்யலாம்; முறையீடு செய்யலாம்" என்கின்ற அறிவிப்புப் பலகையைக் கட்டாயமாக மாட்ட வேண்டும் என்கின்ற ஷரத்தையும் இதிலே சேர்க்க வேண்டும். எல்லாக் கல்லூரிகளும், முறைக்கு மாறாக, அரசு நிர்ணயிக்கின்ற கட்டணத்திற்கு மேலாக, அதிகமான கட்டணங்களை வசூலிக்கின்றன. அதற்கான இரசீதுகளைக் கொடுப்பதில்லை. அரசு நிர்ணயிக்கின்ற கட்டணங்கள் குறித்து, அந்தக் கல்லூரியின் வாயிலிலே, கட்டாயமாக எல்லோருக்கும் தெரிகின்ற அளவிலே விளம்பரப் பலகை வைக்க வேண்டும். அப்படி அதன்மீது புகார்கள் வருகிறபோது, அந்தப் புகார்கள் குறித்து யாருக்குப் புகார் செய்யலாம்; அந்த அதிகாரிகளுடைய தொலைபேசி, அந்த அதிகாரிகளுடைய முகவரி, fax number போன்றவையும் அதில் இருந்தால், உடனடியாக இதுபோன்ற கல்விக் கொள்ளையர்களைத் தடுக்க முடியும். எனவே, அரசு இந்த 3 ஷரத்துக்களையும் இணைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான சட்டமுன்வடிவின்மீது பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள், இதிலே Single Window System என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்றுகூட குறிப்பிட்டார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டு, அதன்மீது



Court-க்குப் போ என்று சொல்லிவிட்டு, அதை நடைமுறைப்படுத்தாமல் நிறுத்திவைக்கிற அரசாக இருக்க விரும்பவில்லை. ஆகவேதான், இனாம்தார் Committee-யிலே சொல்லியிருப்பதைப்போல, ஒரு consensus—அனைவரோடும் பேசி, நடைமுறை ரீதியான ஒரு சட்டத்தை—உருவாக்க வேண்டுமே தவிர, நம்மிடம் பல்வேறு கொள்கைகள் இருக்கலாம்; எண்ணங்கள் இருக்கலாம்; நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணங்கள்கூட இருக்கலாம். ஆனால், சட்டத்தைப் போட்டுவிட்டு, அதை நடைமுறைப்படுத்தாமல் செல்வதிலே, எந்தப் பலனும் இல்லை என்பதை உணர்ந்திருப்பவர்தான் இன்றைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அதனால்தான் நாம் போடுகிற சட்டத்தை நிறைவேற்றுகிறபோது, நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறாமல் இருப்பதற்கான உரிய முறையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றவிருக்கிறோம்.

கேரளாவிலே உருவாக்கப்பட்ட சட்டத்தைப்பற்றிகூட அவர் சுட்டிக்காட்டினார். அங்கேகூட, அந்தக் கேரள சட்டம்கூட, உயர் நீதிமன்றத்திலே அதற்காக எதிர்ப்பு வழக்குத் தொடரப்பட்டு, அதையும் இப்போது நடைமுறையில் உருவாக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அனைத்துத் தரப்பினரையும் அழைத்துப் பேசி, ஓர் ஒட்டுமொத்த முடிவைக் கொண்டுவந்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். குறிப்பாக, Single Window System என்று அவர் சொல்கிறபோது, அதைச் சொல்லிச் சொல்லித்தான், 3 ஆண்டுகளாக, இந்த இனாம்தார் தீர்ப்பு மட்டுமல்ல; அதற்கு முன்பே வழங்கப்பட்ட இரண்டு தீர்ப்புகளிலுமே அது சொல்லப்பட்டிருந்தாலும்கூட, கடந்த 3 ஆண்டுகளாக அதை நிறைவேற்ற முடியாமல், வருடா வருடம், வருடா வருடம் என்று சொல்லி இவர்களே Committee-யிடம் சொல்லி, அதை நீட்டித்துக் கொண்டே சென்றுவிட்டார்கள். அதுபோன்ற சூழ்நிலைகளை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

இதிலே குறிப்பாக, 65 சதவிகிதம் அரசு ஒதுக்கீடு; சிறுபான்மை கல்லூரிகளுக்கு 50 சதவிகிதம் ஒதுக்கீடு; 50 சதவிகிதம் அரசுக்கும், 50 சதவிகிதம் தனியார் நிறுவனங்களுக்கும் என 65 சதவிகிதம் அரசுக்கும், 35 சதவிகிதம் தனியார் நிறுவனங்களுக்கும் என சிறுபான்மை அல்லாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 35 சதவிகிதத்திலேகூட, இனாம்தார் தீர்ப்பின்படி, 15 சதவிகிதம் N.R.I.-க்கு, மீதி இருக்கிற 20 சதவிகிதம்தான் தனியார் நிறுவனங்கள்

[டாக்டர் க. பொன்முடி] [2006 செப்டம்பர் 2

கொண்டுவர முடியும். அந்த 20 சதவிகிதத்திலேகூட, அரசு அறிவித்திருக்கிற இட ஒதுக்கீட்டையும் அவர்கள் நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவும் செய்திருக்கிறோம். நீங்கள் மறுபடியும்போய், இதிலே Single Window System என்ற வார்த்தையைப் போடுங்கள் என்றால்—3 வருடமாக நீங்கள் Single Window System என்று போட்டீர்களே எப்போதாவது, ஒரு வருடமாவது நிறைவேற்ற முடிந்ததா?—மறுபடியும் கோர்ட்டுக்குப் போவார்கள். அவரே அதை உணர்ந்திருக்கிறார். அவருடைய அனுபவத்திலிருந்துதான் நாங்கள் பாடம் கற்றுக்கொண்டு, கலைஞருடைய அரசு, அவற்றை எல்லாம் நீக்கி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. ஆக, நமக்கு இந்த இனாம்தார் Committee சொல்லியிருப்பதைப்போல—fair, transparent, non-exploitative, based on merit இந்த நான்கின் அடிப்படையிலேதான் ஒரு சட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று அது சொல்லியிருப்பதன் அடிப்படையிலேதான்—இந்தச் சட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு உருவாக்கியிருக்கிறோம்.

கடந்த காலங்களிலே நுழைவுத் தேர்வுக்குச் சட்டம் போடுவதைப்போல போட்டுவிட்டு, இரண்டு மூன்று ஆண்டுகளாக, அதன்மீது Court ஆணை பெற்று நடைமுறைப்படுத்தாமல் சென்றுவிட்டதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்றுதான், மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள், அதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்றார்கள். ஒரு குழுவையே நியமித்து வெகுவிரைவில் அதைக் கொண்டு வந்தால், அடுத்த ஆண்டு சேர்வதற்கு முன்பாக, இதிலே ஏதேனும் சட்டச் சிக்கல் வந்தாலும், அதனைத் தீர்த்துவிடலாம் என்ற எண்ணத்தோடுதான் கடைசியிலே கொண்டுவராமல், அடுத்த ஆண்டுக்கான admissions—அடுத்த ஆண்டுக்கான சேர்க்கை—அதற்கான சட்டத்தை இப்போதே கொண்டு வந்திருக்கிறோம்.

*பிற்பகல் 12–55*

அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் ஒரு வினாவை எழுப்பினார்கள். கடந்தகாலத்திலே நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்கள், அவை அவர்களுடைய ஆட்சியிலே நியமிககப்பட்டிருந்தாலும், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், அவை இயற்கையாகவே காலாவதியாகிவிடும். இந்தப் புதுக் குழு நாளையோ அல்லது நாளை மறுநாளோ நியமிக்கப்பட்டவுடன், அந்த இரண்டு குழுக்களும் தானாகவே கலைந்துவிடும். புதிய குழுக்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 செப்டம்பர் 2] [டாக்டர் க. பொன்முடி]

மற்றொன்று, முக்கியமாக இங்கே எழுப்பியது, ஒவ்வொரு கல்லூரிக்கும் தனியாகக் கட்டணம் நிர்ணயிக்கிறபொழுது, அதற்கான பல்வேறு பிரச்சினைகள் இருக்குமே என்றுகூட சொன்னார்கள். தனித் தனியாக அந்தக் கல்லூரிகள் என்று சொல்லியிருந்தாலும்கூட, அந்த groupings தானாகவே எல்லாக் கல்லூரிக்கும் வந்துவிடும். எல்லாம் தனித் தனியாக இருக்க முடியாது; ஒரேமாதிரி uniformity-ஆகவும் இருக்க முடியாது. ஏன் என்றால், சில கல்லூரிகள் சென்னையிலே இருக்கிற கல்லூரிகள், தரம் வாய்ந்த கல்லூரிகள், அதிக செலவு செய்திருககிற கல்லூரிகளும் இருக்கின்றன. கிராமப்புறத்திலே, அந்தக் கல்லூரி இருக்கிறபோது, அதற்குச் செலவும் குறைவாக ஆகிறது. அங்கே இருப்பவர்கள் குறைந்த கட்டணத்தைக்கூட பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இப்பொழுதேகூட, இந்தக் Committee நிர்ணயித்திருக்கிற தொகை, 40,000 ரூபாய் என்று Accredited Colleges-க்குக் கொடுத்திருக்கிறார்கள். அது இல்லாத கல்லூரிகளுக்கு 32,000 ரூபாய் என்று கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் கேட்டால், சில கல்லூரிகள் mofussil-லே இருக்கிற கல்லூரிகள், கிராமப் பகுதிகளிலே இருக்கிற கல்லூரிகளுக்கு 20,000 ரூபாய் கட்டினால்கூடப் போதும் என்று admission கொடுப்பதற்கான கல்லூரிகளும் இருக்கின்றன. ஆகவே, அவர்களையும்போய், "நீங்கள் 32,000 ரூபாய் வாங்குங்கள்" என்றும் நாம் நிர்ணயிக்க முடியாது. We are fixing the maximum limit. உயர்ந்த அளவுக்கு நீங்கள் இவ்வளவு வாங்கலாம் என்று சொல்கிறோம். அதைச் சொல்லும்போதுகூட, அந்தக் கல்வி நிலையத்தினுடைய தரத்திற்கு ஏற்ப, மூன்றோ, நான்கோ, அதனடிப்படையிலேகூட, அவர்களைப் பிரித்து வைத்து, அதற்கான விதிமுறைகள் எல்லாம் இதனைத் தொடர்ந்து அறிவிக்கப்படுகிற அரசாணையிலே குறிப்பிடப்படும். அந்த அடிப்படையிலே, மாநிலத்திலேயுள்ள இந்தக் கல்லூரிகளிலே கட்டணம் வசூலிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படும். இது ஒரு mandatory; இதிலே சொல்லப்பட்டிருக்கிற விதி மீறுபவர்களுக்கு நம்மிடம் இருக்கிற limited powers; இன்று எந்தச் சட்டத்தின்மீதும், கல்வித் துறையைப் பொறுத்தவரையிலே Court-க்குப் போனோம் என்று சொன்னால், மாநில அரசாங்கங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள்.

இப்போதுகூட ஒரு குழு நியமித்து, அதற்காக விசாரணை செய்கிறபோது, அதற்கு அதிகாரமே இல்லை என்று சொல்கிற நிலைமை இன்று நீதிமன்றங்களிலே இருந்துகொண்டிருக்கிறது. அதற்காகத்தான், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தக் கல்வியை, முன்பே

[டாக்டர் க. பொன்முடி] [2006 செப்டம்பர் 2

இருந்ததைப்போல, மாநிலப் பட்டியலிலே கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசிற்கு வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, நமக்கிருக்கிற இந்தக் குறைந்தபட்ச அதிகாரத்தைக் கொண்டு, இன்று தமிழகத்திலே இருக்கிற சுய நிதிக் கல்லூரிகளிலே பிரச்சினைகள் வராமல், அதேநேரத்திலே, தேர்வு செய்கிறபோது மாணவர்களும், மாணவர்களைப் பெற்றுவிட்ட பெற்றோர்களும் தவிக்காமல் உடனடியாக அவர்களைச் சேர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். கடந்தகாலங்களில், எந்த அளவு நீதிமன்றங்களுக்கு அலைந்தார்கள் என்பதெல்லாம் முன்னாள் கல்வி அமைச்சர் உணர்ந்து வைத்திருப்பார். அவருடைய அனுபவம் இந்த அரசிற்கு ஏற்படக்கூடாது என்கிற எண்ணத்தோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இதை அனைவரும் வரவேற்று, ஒருமுகமாக நிறைவேற்றித் தருமாறு கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



)06 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

ாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *28 / 2006*) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—
தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15, 2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. வை. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழக பெரும்பான்மை விவசாய மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவில் பேசுவதற்காக அனுமதித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் திரு. கோலப்பன் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று, தமிழகத்திலே வாழுகின்ற இலட்சோப இலட்சம் விவசாய மக்களைக் காக்கின்ற வகையில்

@ 27—7—2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழி வெளியிடப்பெற்றுள்ளது.



தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி, அந்தத் திட்டத்தின்மூலமாக, தமிழகத்தில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகளுக்கான உதவியைத் தருவதற்கான உன்னதமான திட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், அன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரைத் தாங்கி, அவருடைய புகைப்படத்தோடு அந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு அற்புதமான திட்டம் நடைமுறையில் இருந்தபோது, அடுத்து ஆட்சிக்கு வந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியினர், தலைவர் கலைஞருடைய அந்தப் படம் அதிலே அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காகவே, அந்தத் திட்டத்தை மாற்றி, அந்தத் திட்டத்திற்கு வேறு ஒரு புதிய அர்த்தமாக, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று கலைஞர் அவர்கள் கொண்டுவந்த அதே திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். அதிலேகூட, கடந்த 2001 ஆம் ஆண்டில், அந்தச் சட்டத் திருத்தத்தில், 1 ஏக்கர் நன்செய், 2.5 ஏக்கர் புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என்ற பொருள்வரையறையில் இருந்தது. அதை மாற்றி, இன்றைய இந்தச் சட்டமுன்வடிவு என்பது, 2.5 ஏக்கர் நன்செய் நிலம் மற்றும் 5 ஏக்கர் புன்செய் நிலம் என்றவகையில் உயர்த்தித் தந்த இந்த உன்னதமான சட்டமுன்வடிவை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

*பிற்பகல் 1–00*

அதேநேரத்தில், இந்த விவசாயத் தொழிலைச் சார்ந்திருக்கின்ற பெரம்பலூர், கடலூர், விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில், முந்திரி, வாழை போன்றவை பெரிதும் பயிரிடப்படுகின்றன. இயற்கைச் சீற்றங்களுக்கு ஆளாகி, புயல் அடித்தாலோ, காற்றடித்தாலோ விவசாயி உற்பத்தி செய்கின்ற வாழை மரங்கள் எல்லாம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி அடியோடு மடிந்து, இலட்சக்கணக்கான ரூபாய் நட்டம் ஏற்பட்டு, அந்த விவசாயி மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகிறான். அதேபோல், ஒரு மூட்டை முந்திரிக் கொட்டை பொறுக்க வேண்டும் என்று சொன்னால், மூன்று முறை மருந்தடிக்க வேண்டும்; நிலம் கொத்த வேண்டும்; ஏர் ஓட்ட வேண்டும்; உரம் வைக்க வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டும் அந்த முந்திரித் தொழிலாளி அதனை உற்பத்தி செய்கின்றபோது, அதற்கான விலை, ஒரு மூட்டைக்கு 2,000/– ரூபாய் அல்லது 2,500/– ரூபாய் என்றுதான் இப்போது பல்வேறு தனியார்கள் எல்லாம் கொள்முதல்

செய்கின்றார்கள். ஆக, இந்த உன்னதமான திட்டத்தை, நம்முடைய முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்கள், விவசாயிகளுடைய நாடியைப் பார்த்து, விவசாய மக்களுடைய உணர்வுகளை அறிந்து, விவசாய மக்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்கின்றவகையில், கோலப்பன் என்கின்ற ஒரு I.A.S. அதிகாரியை நியமனம் செய்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின்படி கொண்டுவந்திருக்கிறார்கள். இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு அடைகின்ற அந்த ஏழை விவசாய மக்களுடைய வாழ்க்கையையும் கருத்தில்கொண்டு, முந்திரி விவசாயிகளுடைய வாழ்க்கையையும் கருத்தில்கொண்டு, வாழை விவசாயிகளுடைய வாழ்க்கையையும் கருத்தில்கொண்டு, அவ்வாறு விவசாயம் செய்கின்ற மக்களுக்கும் ஏதாவது ஒரு பாதுகாப்புத் திட்டத்தில், அவர்கள் பங்களிப்புத் தருகின்ற கட்டணத்தைக் குறைத்து, கூடுதலான சலுகைகளை அந்த விவசாய மக்கள் பெறுகின்ற வகையிலும், எதிர்காலத்தில் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்தி, அற்புதமான இந்தத் திட்டத்தை தமிழக மக்களுக்கு வழங்கிய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து, வரவேற்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டத்தை வழங்குகிற முறையிலே கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற்று, முதலாவதாக நடைபெற்ற கூட்டத் தொடரில், ஆளுநர் அவர்கள் உரையின்மூலமாக, அமைப்புச் சாராத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கு நல வாரியங்கள் புனரமைக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்மூலமாக, விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தை அமைத்து, அதைச் செயல்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிற நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகளைக் கடந்த ஐந்தாண்டுக் காலத்திலே தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்திலே வலியுறுத்திப் பேசியவன். குறிப்பாக, அண்ணா





திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தின் கடைசி பகுதியிலே, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஆட்சியிலிருந்து இறங்குகிற பொழுதுதான், அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால், இங்கே பேசுகிறபொழுதும், குறிப்பிட்டுச் சொல்கிறபொழுதும், உழவர்களுக்குரிய பாதுகாப்புத் திட்டம், சிறப்புக்குரிய திட்டமாக அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். நான் அதைத்தான் நமது நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறபொழுது குறிப்பிட்டுச் சொன்னேன். ஐந்தாண்டுக் காலத்திலே, விவசாயத் தொழிலாளர்களுக்காக ஒரு திட்டத்தைக்கூட கொண்டுவராமல், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கான நல வாரியத்தையும் கலைத்துவிட்டு, அதற்குரிய முயற்சிகளை எடுக்காமல், அவர்கள்மூலமாகப் பெறப்பட்ட தொகை, கிட்டத்தட்ட 7 கோடி ரூபாய்க்கு மேலே அரசாங்கத்திற்கு இருப்பு இருக்கிறபொழுது, இப்படியொரு புதிய திட்டத்தைக் கொண்டுவந்து, அவசரக் கோலத்திலே, நான் நடைமுறைப்படுத்துவேன் என்று சொல்வது என்பது, அது தேர்தலுக்காக மட்டுமே இருக்கும் என்பதை நான் சென்றமுறை பேசியிருக்கிறேன்.

அப்படித்தான் அ.தி.மு.க.-வின் சார்பிலே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அதன்மூலமாக விவசாயத் தொழிலாளர்களுக்கான அந்தச் சலுகைகளைப் பெறுவதற்குரிய சட்ட ரீதியாக ஒரு உத்தரவாதம் இல்லாத நிலை என்பதுதான் நீடித்தது. இப்பொழுது அது வலியுறுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்மீது தெளிவான கருத்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, கலைக்கப்பட்ட அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் புனரமைக்கப்பட்டு, இப்பொழுது கொண்டு வரப்பட்டு, அது சட்டமாக்கப்படுகிறது. ஆகவே, சென்ற ஆட்சியிலே மறுக்கப்பட்ட அந்த நீதி என்பது இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

*பிற்பகல் 1-05*

இந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தின்மூலமாக விவசாயிகளுக்கு மிகப் பெரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டு முழுவதும் இவர்களுக்கு வேலை கிடைப்பது என்பது கிடையாது. இயற்கையைச் சார்ந்திருக்கிற தொழிலாக இருக்கிற காரணத்தினாலே,

மிகப் பெரிய பாதிப்புகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றம் ஏற்படவில்லை என்ற காரணத்தினாலே, இந்தத் திட்டமும், இந்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தின்மூலமாக பல்வேறு சலுகைகளை அவர்கள் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இதை வாயளவில்மட்டும், அல்லது இங்கே பேசுவதனால்மட்டும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்துவதாக ஆகாது என்ற காரணத்தினாலேதான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான விவசாயத் தொழிலாளர் சங்கமும், விவசாயிகள் சங்கமும் வருகிற 12 ஆம் தேதி அன்று, திருவாரூர் நகரத்தில் இலட்சோப இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளர்களைத் திரட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த விழாவிலே பங்கேற்றுக்கொள்கிற வகையிலே, விழாவையும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்த விழாவிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வருகிற 12 ஆம் தேதி பங்கேற்க இருக்கிறார்கள்.

இந்த விவசாயத் தொழிலாளர்கள் அனைவருமே ஒன்றுகூடி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்துவதும், பாராட்டுவதும் அந்த விழாவின் நோக்கமாக நிறைவேற்றப்படவிருக்கிறது. ஆகவே, விவசாயத் தொழிலாளர்கள் என்றென்றைக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதை, வருகிற 12 ஆம் தேதி நடைபெறுகிற விழாவின்மூலமாக, நிறைவேற்றிக் காட்டப்படவிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் சொல்லி, அதிலே மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பங்கேற்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைத்து, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் குறித்த சட்டமுன்வடிவின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்", "உழுவார் உலகத்தார்க்கு ஆணி", "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றெல்லாம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அய்யன் வள்ளுவன் அவர்கள், விவசாயத் தொழிலாளர்களைப்பற்றிச் சிறப்பாக எழுதியும்,





அவர்களுடைய வாழ்க்கையிலே வசந்தம் வீசவில்லை. ஆனால், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்த டாக்டர் கலைஞர் அவர்கள்மூலம், அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி வீசும் என்பதிலே எந்தச் சந்தேகமும் இல்லை.

குறிப்பாக, கடந்தகால ஆட்சியிலே வெறும் அறிவிப்பும், அதன்மூலம் உத்தரவு வழங்கியும் செயல்படுத்தினார்கள். ஆனால், இப்பொழுது அதைச் சட்டமாகவே கொண்டு வந்திருப்பது, விவசாயிகளுக்கு மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதம் என்பதனைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிக நிதி இந்தச் சட்டத் திருத்தத்தின்மூலம் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. உதாரணத்திற்கு, pension-ஐ 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக ஆக்கி இருக்கிறார்கள். பிரசவ காலத்திலே 4,000 ரூபாய் உதவித் தொகை வாங்கியிருந்தவர்கள், இப்பொழுது 6,000 ரூபாய் பெறுகின்றார்கள். அதேபோல், விபத்தில் மரணம் அடைந்தவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் அரசாங்கம் தந்திருக்கின்றது. அதை, தயவுசெய்து 2 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்று உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறப்பாக செயல்படுவதற்காகவே இந்த முறை தனி அலுவலகம், இந்த வாரியத்திற்கு இருக்கிறது என்பதை இங்கே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், வாரிய உறுப்பினர்களாக ஒரே கட்சியைச் சார்ந்தவர்களை மட்டும் இங்கே சேர்த்திருக்கிறார்கள் என்று கருதுகின்றேன். அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். வாரியத்தின் உறுப்பினராவதற்கு, வாரியத்தில் சேர்வதற்கு 18 முதல் 65 வயது வரை நீங்கள் நிர்ணயம் செய்திருக்கிறீர்கள். மாநில அரசாங்கத்திலே ஓய்வு பெறுகிறவர்களுடைய வயது வரம்பு 58 ஆக இருக்கின்றது. மத்திய அரசாங்கத்திலே 60-ஆக இருக்கின்றது. ஆனால், ஆண்டாண்டு காலமாக ஓடாய்க் கரைகின்ற அந்த உழவனுக்கு மட்டும் 65 வயது என்று வைத்திருக்கிறீர்கள். 65 வயது அடைந்த பிறகுதான், அவர்களுக்கு pension கிடைக்கும் என்ற ஒரு நிலை இருக்கின்றது. அதை தயவுசெய்து, நீங்கள் 65 வயது உச்ச வயது வரம்பை, 58 வயதாக ஆக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தின் தொடர் வண்டியிலே பயணம் செய்வதற்கான பயணக் கட்டணத்தை senior citizen-கள், அதாவது மூத்த குடிமகன்கள், concession rate-ல் பெறுகிறார்கள். அதுபோல, இந்த விவசாய வாரியத்திலே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும்கூட, மாநில அரசாங்கத்தில் பேருந்துகளிலே செல்லும்போது, பாதி கட்டணம்

வசூலிக்க வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

மேலும், உறுப்பினர்களைச் சேர்க்கிறோம் என்று சொல்லி, இடைத்தரகர்கள் 100 ரூபாய், 50 ரூபாய் பெறுகிறார்கள். ஆனால், உண்மையிலேயே இது இலவசமாகக் கிடைக்கின்றது. குண்டர் சட்டத்தினைப் பாயவைத்து, அந்த இடைத் தரகர்களை நிச்சயமாக நீங்கள் நீக்க வேண்டும்.

மேலும், கோவையிலே விவசாயக் கல்லூரி இருக்கின்றது. அந்த விவசாயக் கல்லூரியிலே விவசாயிகளின் குடும்பங்களுக்குச் சிறப்பு ஒதுக்கீடும், இட ஒதுக்கீடும் தந்து அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி விளக்கை ஏற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த subject, உடலுழைப்புத் தொழிலாளர்கள்; அதிலும் ஒன்றைச் சொல்லி விடுகிறேன். அந்த வாரியத்திலே, உறுப்பினர்கள், அதாவது Employee-Employer சார்பிலே இருக்கிறார்கள். ஏனென்றால் நான் திரும்ப interfere பண்ண வேண்டும். Employee-Employer—வேலை பெறுபவர், வேலை தருபவர்; இப்பொழுது வேலை பெறுபவர்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே அதிகம் பேர் இருக்கிறார்கள். எனவே, Employee-Employer relationship இப்போது குறைகிறது. அதனாலே வேலை பெறுபவர்களை அதிகப்படியாக நியமனம் செய்யவேண்டும். மேலும், நான்கு zones-ஆகப் பிரித்து, அதாவது—equal representation—சமமான, சார்பற்ற நிலையை ஏற்படுத்த, நீங்கள் அதன்படி உறுப்பினர்களை நியமனம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். உடலுழைப்புத் தொழிலாளர்களை நாம் சாலையோர வீதிகளிலேதான், குடிசைகளிலேதான் பார்க்கின்றோம். அவர்களுக்கும் குடியிருப்பு வசதி ஏற்படுத்தித் தந்து, 10 சதவிகித இட ஒதுக்கீடு அவர்களுக்கும் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சிறப்பான ஒரு சட்டத் திருத்தத்தைத் தந்திருக்கிறீர்கள்; உங்களைப் பாராட்டி, காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய வரவேற்பினைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு எண் 15/2006; இதில்



கொண்டு வந்திருக்கின்ற பல அம்சங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம். அதேநேரத்தில், அக்குழுவில் பயனாளிகளாக விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுடைய பிரதிநிதிகளைச் சேர்க்கும்படி பணிவோடு கோருகிறோம். மேலும், இச்சட்டத்தில் கீழ்க்காணும் திருத்தங்களையும் கொண்டுவர வலியுறுத்துகிறோம்:

பிரிவு 8 (1)-ல், மாவட்ட அளவிலான அல்லது கிராம அளவிலான குழுக்களை அமைக்கும்போது, பயனாளிகளாக விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுடைய பிரதிநிதிகளும் இடம் பெறவேண்டும்.

அதேபோல், பிரிவு 18 (b)-ல், வாரியம் கலைத்து கைக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து 6 மாத காலம் அளவிற்குள் வகுத்துரைக்கப்பட்ட முறையில் மாற்றியமைக்கலாம் எனத் திருத்தம் செய்திடவேண்டுகிறோம். அதனுடைய கால அளவு நீட்டிப்பதைக் கைவிட வேண்டுகிறோம்.

பிரிவு 2, (10)-ல் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் பட்டியலை ஊராட்சிமன்ற அலுவலகம் அல்லது கிராம நிர்வாக அலுவலகத்தின் தகவல் பலகையில் ஒட்ட வேண்டுகிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மார்ச் வரை விடுபட்ட உறுப்பினர்களைச் சேர்க்கவும் தவறாகச் சேர்த்தவர்களை நீக்கவும் வழிசெய்யும்வகையில் இச்சட்டம் அமையவேண்டும் என்று தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாகவும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும் இந்தத் திருத்தங்களை வலியுறுத்தி, இச்சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்–விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவை ஆதரித்து, பல்வேறு கருத்துகளை, இங்கே பல்வேறு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு என்ற நல வாரியத்தை—2000 ஆம் ஆண்டு, முதன்முதலாக விவசாயத் தொழிலாளர்களுக்கென்றே ஒரு வாரியத்தை—அமைத்து, அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றி வைத்தவர் நம் தலைவர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்காக, சிறு, குறு விவசாயிகளுக்காக

பல்வேறு சலுகைகளை அறிவித்து, அந்த அறிவிப்புகளெல்லாம் அடுத்துவந்த ஆட்சிக் காலத்தில், 4 ஆண்டுக் காலம் நடைமுறைப்படுத்தப்படாமல், அவை அனைத்தும் முடக்கி வைக்கப்பட்டதை இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அறிவார்கள். மீண்டும் இன்றைக்கு அதற்கு ஒரு சட்டவடிவம் கொடுக்க வேண்டும்; சட்டவடிவம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், இதில் பல்வேறு திருத்தங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

குறிப்பாக, குத்தகைதாரர்களும் இந்த வாரியத்திலே அங்கம் பெறலாம்; சிறு, குறு விவசாயிகள், குத்தகைக்கு நிலம் உழுவடை செய்கிறவர்களும் இந்தச் சலுகையை அனுபவிப்பதற்கு, அவர்களுக்கு உரிமை இருக்கின்றது என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே கல்வி, மருத்துவம், இன்னும் பிற சலுகைகளிலே, அனைத்துச் சலுகைகளிலுமே, சமுதாயக் கண்ணோட்டத்தோடு, பெண்களுக்கு எல்லா வகைகளிலும், மகப்பேறு மற்றும் எல்லா உதவித் திட்டங்களும், திருமண உதவித் திட்டத்திலேயிருந்து எல்லா உதவித் திட்டங்களும் மேற்கொள்ள, இன்றைக்கு நிதியொதுக்கீடு கூடுதலாகச் செய்து, இந்த விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்காக ஒரு நல்ல திட்டத்தை, தலைவர் கலைஞர் அவர்கள் சட்டவடிவமாக்கியிருக்கின்றார்கள்.

இதிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே பல்வேறு கருத்துகளை எடுத்துவைத்தார்கள். கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். கட்டணம் இல்லை. அதிலே குறிப்பாக, வாரிய உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், ஒரு கட்சியைச் சார்ந்தவர்களே இடம் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள்; அப்படியில்லை. 2000 ஆம் ஆண்டு வாரிய உறுப்பினர்களை நியமனம் செய்கின்றபோதே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவசாயிகள் சங்கங்களினுடைய பிரதிநிதிகளை எல்லாம், இந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திலே உறுப்பினர்களாக நியமித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், அனைத்துக் கட்சியைச் சார்ந்த, விவசாயத் தொழிலிலே, சங்கத்திலே ஈடுபட்டிருக்கின்ற தலைவர்களும், இதிலே இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. குறிப்பாக, அந்த வாரியத்திலே வேலை கொடுப்பவர், அதே சமயத்திலே வேலையிலே ஈடுபடுகின்றவர் என்ற நிலை இருக்கக்





கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலை இன்று மாற்றப்பட இருக்கின்றது. அப்படிப் பிரித்து, இவர்கள் பாதி உறுப்பினர்கள், அவர்கள் பாதி உறுப்பினர்கள் என்று போட வேண்டிய அவசியம் இல்லை. மொத்தமாகவே உறுப்பினர்களைப் போடலாம். வேலை தருபவர், வேலை பெறுபவர் என்ற பிரிவினை வேண்டியதில்லை. ஒரே குழுவாகவே அமைப்பதற்குத்தான் இந்த அரசு முடிவு செய்திருக்கின்றது.

அதிலே இடைத் தரகர்கள் நிச்சயமாக வருவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அறிவிப்பிலே நாம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம் இருக்கக்கூடிய எல்லா இடங்களிலுமே, முழுமையாக எல்லா இடங்களிலேயுமே, ஆங்காங்கே இருக்கக்கூடிய தாலுகா அலுவலகங்களின்மூலம் இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. இதிலே எந்தக் கட்டணமும் இல்லை. இடைத் தரகர் நிச்சயம் வரவே முடியாது.

அதுமட்டுமல்லாமல், இங்கே குறிப்பாக, நம்முடைய டில்லி பாபு அவர்கள் பேசுகின்றபோது, கால அவகாசத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அரசைப் பொறுத்தவரையில், அனைத்து விவசாயத் தொழிலாளர்களும் முழு அளவிலே, அதிலே இடம் பெற வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசினுடைய பிரதானமான குறிக்கோள்; முக்கியமான குறிக்கோள். அந்தவகையிலே, ஒரு கால அளவை நிர்ணயம் செய்து, அதிலே இடம்பெறச் செயவது என்பது, நிச்சயமாக அது சரியாக இருக்காது. நீட்டிக்கப்போவதில்லை. இதில் உடனே, நடவடிக்கை மேற்கொள்ள கால அளவை நிர்ணயம் செய்திருக்கிறார் முதல்வர். 2 மாத காலத்திற்குள்ளாக கணக்கெடுப்பு முடித்து, அது எவ்வளவு வந்தாலும், 65 இலட்சம் உறுப்பினர்கள் வந்தாலும், இரண்டு மாதத்திலே அந்த அட்டையை அடித்துக் கொடுக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அக்டோபர் மாதத்திற்குள்ளாக அந்தப் பணியை முடிக்க வேண்டுமென்று இரண்டு மாத கால அவகாசம்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆக, கால அவகாசம் நீங்கள் 6 மாதம்தான் கேட்கிறீர்கள். அது நிச்சயமாகத் தேவையில்லை.

உறுப்பினர் சேர்க்கையைப் பொறுத்த அளவில், ஒவ்வொரு இடத்திலேயும், சிறு, குறு விவசாயிகளைப் பட்டியலிடுகின்றபோது, அங்கிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களையும் உறுப்பினர்களாகச்

சேர்க்க வேண்டுமென்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். ஏற்கெனவே, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர், அங்கே இருக்கக்கூடிய கிராம நல அலுவலர், பிறகு V.A.O., தலைமை ஆசிரியர், எல்லோரையும் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே மிக விரிவாக, தெளிவாக இந்தச் சட்டமுன்வடிவை நம்முடைய அரசு அறிமுகம் செய்திருக்கின்றது. எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தர, நான் அன்போடு கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 8 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு 9**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், தம் திருத்தத்தை முன்மொழியலாம். உறுப்பினர் திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.





பிரிவு 9 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 10 முதல் 22 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 10 முதல் 22 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–20

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. இ. பெரியசாமி] [2006 செப்டம்பர் 2

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/ 2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2006). மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 21-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. தா.மோ. அன்பரசன்] [2006 செப்டம்பர் 2

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2006) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2006). மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கொண்டாடப்படும் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் தன் தேக்குமரத் தேகத்தை இந்தத் தேசத்திற்காகத் தியாகம் செய்த ஒப்பற்ற தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15 ஆம் தேதியை (மேசையைத் தட்டும் ஒலி) கல்வி வளர்ச்சி நாள் என விளம்புகைச் செய்வதெனவும், மற்றும் தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுவது எனவும், தமிழ்நாடு அரசால் கொள்கை முடிவு எடுக்கப்பட்டு, இன்று அது சட்டமுன்வடிவாக அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவரைப் பாடவந்த கவியரசு, அற்புதமான இரண்டு வரிகளைச் சொன்னார்:

"ஆண்டிக்குக்கூட ஒரு தோண்டி உண்டு,
அதுகூட உன் கையில் இல்லையே ஐயா"

என்று பெருந்தலைவருடைய தியாகத்தை நினைந்து, அவர் சொன்ன வார்த்தைகள் இன்னும் நூறு ஆண்டுகள், ஆயிரம் ஆண்டுகள் இந்த மண்ணில் ஒலிக்கவேண்டும் என்பதற்காக வகைசெய்து தந்திருக்கின்ற சட்டம்தான் இந்தச் சட்டம். ஒவ்வொரு சமூகமும், தான் நடந்துவந்த பாதையைத் திரும்பப் பார்க்கவேண்டும். இந்தச் சமூகத்தைத் தூக்கி நிறுத்திய மாபெரும் தலைவர்களை நன்றியோடு நினைவுகூர வேண்டும்.

@ 31-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

*பிற்பகல் 1–25*

விருதுபட்டி என்கிற ஒரு சிறிய கிராமத்தில் கருப்புக் கட்டியை எடைபோட்டு விற்ற ஒரு வியாபாரி, தன்னுடைய உழைப்பால், திறமையால், தியாகத்தால், நேர்மையால் இந்தியத் திருநாட்டின் பிரதமர்களை நிர்ணயிக்கக்கூடிய அளவிற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால், அறுபது ஆண்டுகளுக்கு முன்னால், தன்னை உயர்த்திக் கொண்டார் என்பது, ஒவ்வொரு தமிழனும் நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டிய வரலாறு. வேட்டி கட்டிய தமிழர்களுக்கு டெல்லியிலே மரியாதை வாங்கிக் கொடுத்த முதல் மாபெரும் தமிழர் என்கிற பெருமையினைப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், இந்த மண்ணுக்குப் பெற்றுத் தந்தார். *(மேசையைத் தட்டும் ஒலி)* பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இன்று நன்றியால் நெகிழ்ந்துபோய் இருக்கிறோம்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால், நூறு ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சமூகத்திற்கும் இந்த நாட்டினுடைய பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கும் தொண்டாற்றிய பல தலைவர்களை இந்தச் சமூகம் மறந்திருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினராக, அந்தமான் தீவிலே, இருக்கின்ற அந்த “Cellular Prison” என்கிற சிறைச்சாலையைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, அந்தச் சிறைச்சாலையினுடைய ஒவ்வொரு வாயிலிலும், ஒரு பலகை, கல் பலகை வைத்திருக்கிறார்கள். அந்தக் கல் பலகையிலே, அந்தச் சிறைச்சாலையில் இருந்தவரைப்பற்றிய குறிப்புகளை எழுதியிருந்தார்கள். அந்த மூன்று நான்கு சிறைகளிலே பார்க்கின்றபோதே, என் கண்கள் கண்ணீரால் நிறைந்துவிட்டன. முகமது ஹசன், வயது 33, மகாராஷ்டிர மாநிலம், ஒரு கிராமத்திலே, சர்பன்ஞ் கிராமத்தினுடைய Village Munsif–ஆக இருந்தவர்; அரசாங்கத்தை எதிர்த்ததால் இங்கே நாடு கடத்தப்பட்டார்; 33 ஆண்டுகள் சிறையில் இருந்தார்; பிறகு விடுவிக்கப்பட்டார்; மீண்டும் இங்கே வந்தார்; அவருடைய தூக்குத் தண்டனை இங்கே நிறைவேறியது. இப்படி, ஒவ்வொரு சிறைச்சாலையிலும் ஒவ்வொருவரைப்பற்றி எழுதி வைத்திருந்தார்கள். ஆனால், அந்தப் பெரும் தியாகத் தலைவர்களைப் பற்றியெல்லாம், இந்த நாடு மறந்துவிட்டது. அவர்கள் அநேகர்களுடைய முகவரிகள், அவர்கள் செய்த சாதனைகளை எல்லாம் இந்த நாட்டு மக்கள் மறந்துவிட்டார்கள். எனவே, இன்னும் நூறாண்டு கழித்து பெருந்தலைவர் காமராஜர் என்கிற ஒரு மாபெரும் மனிதர் இந்த மண்ணிலே இருந்தார்; இரத்தமும், சதையும், நரம்புமாக இந்த



மண்ணிலே வாழ்ந்தார்; வாழ்ந்து முடிந்த பிறகு, 9 முழக் கதர் வேட்டியும், கதர் சட்டையும் தவிர, எதுவும் இல்லாமல் கையை விரித்து மரித்துப போனார் என்ற ஒரு சரித்திரத்தை, இந்த நாட்டு மக்கள் நினைவுகூர வேண்டுமென்பதற்காக, நம்முடைய சமூகத்தில் அக்கறை உள்ள டாக்டர் கலைஞர் அவர்கள், சமூகத்தில் தியாக சீலர்களை மறந்துவிடக் கூடாது என்கிற அந்த மனப் பக்குவமுடைய டாக்டர் கலைஞர் அவர்கள், இன்று அதை ஒரு சட்டமாக்கித் தந்திருக்கிறார்கள் என்பது ஒரு மிகப் பெரிய விஷயம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதை நான் எதற்காக இங்கே நினைவுகூர்கிறேன் என்று சொன்னால், இந்த எண்ணம் அவர்கள் நெஞ்சில் எப்பொழுது கருக் கொண்டதோ, அதற்கு நானும், அண்ணன் சுதர்சனம் அவர்களும் சாட்சியாக இருந்தவர்கள். கடந்த ஜூலை மாதம் 15 ஆம் நாள், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பாக, பெருந்தலைவர் காமராஜர் விழா கொண்டாடப்படுகின்ற அன்று, மேடையிலே நாங்கள் அவரோடு அமர்ந்திருந்தோம். அங்கேயிருந்து, நேராக பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு குழந்தைகளுக்கு இரண்டு முட்டைகள் வழங்குகின்ற விழாவைத் துவக்கி வைப்பதற்காக, நம்முடைய மரியாதைக்குரிய பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களும், நம்முடைய அன்பிற்குரிய சகோதரி சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய கலைஞர் அவர்களை அழைத்திருந்தார்கள்; நானும் அண்ணன் சுதர்சனம் அவர்களும் அங்கே வந்தோம். மேடையிலே எங்களை உட்கார வைத்துக்கொண்டு சொன்னார்: “நான் காமராஜர் அரங்கத்திலிருந்து புறப்பட்டேன்; காரில் வரும்போது எனக்கு ஒரு சிந்தனை வந்தது; நாம் இதை ஏற்பாடு செய்கிறோம; ஒருவேளை நாளை ஆட்சிக்கு வருகின்றவர்கள் இந்தத் திட்டத்தை புறக்கணித்துவிட்டு மறந்துவிட்டால், இந்தத் திட்டம் அதோடு கைவிடப்பட்டுவிடும்; எனவே, இது என்றென்றும் இருக்க வேண்டுமென்று எண்ணினேன். இதையே ஒரு சட்டமாகக் கொண்டு வந்தால், நாளை சட்டசபையின் அனுமதியில்லாமல் யாரும் மாற்றிவிட முடியாது; அப்போது அங்கேயிருக்கின்ற சுதர்சனமும், பீட்டர் அல்போன்ஸும் அதை விடமாட்டார்கள்” என்று அந்த மேடையிலே பேசினார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்திய அரசியல் வரலாற்றில் இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது இதுதான் முதன்முறை என்று நான் எண்ணுகிறேன். ஒரு மாபெரும் தலைவனை இந்தச் சமூகம் நன்றியோடு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, அவர்கள் ஏற்பாடு

செய்த இந்தச் சட்டத்தை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். அதிலும் வெறுமென விழாக் கொண்டாட்டம் மட்டும் அல்ல; அந்த விழாக் கொண்டாட்டத்திலும்கூட ஒரு செய்தி சொல்லப்பட வேண்டுமென்பதற்காக, அதை 'மாணவர் கல்வி தினம்' என்று அறிவித்திருக்கிறார். ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலிருந்து, ஆரம்பப் பள்ளியிலிருந்து, தொடக்கப் பள்ளியிலிருந்து, அந்த ஜூலை மாதம் 15 ஆம் தேதி அங்கே வருகின்ற மாணவர்கள், மாணவிகள், பெருந்தலைவர் காமராஜருடைய படத்தை அலங்கரித்து அதற்கு மலர் அஞ்சலி செலுத்தி அவர் செய்த சேவைகளைப்பற்றி, கல்விக்கு அவர்கள் ஆற்றிய பணிகளைப்பற்றியெல்லாம் தங்களை மீண்டும் நினைவுகூர்ந்து கொள்ள வேண்டுமென்பதை ஒரு சட்டபூர்வமாகவே ஆக்கித் தந்திருக்கிறார்கள். என்னுடைய ஒரு சிறு வேண்டுகோள்; உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமல்ல; கல்லூரிகளைக்கூட நீங்கள் இதில் சேர்க்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் வைக்கிறேன். ஏனென்று சொன்னால், சில சமயத்திலே, உங்கள்மீது, நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் பார்த்தால், எனக்குக் கோபமாகக்கூட இருக்கிறது. சிலசமயம் பொறாமையாகக்கூட இருக்கிறது. அடுத்த தலைமுறைக்குச் செய்வதற்கென்று எதையுமே நீங்கள் விட்டுவைக்கப் போவதில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு, இந்தச் சமூகத்திற்கு என்னென்ன தேவையோ, அதையெல்லாம் நீங்களே செய்து முடித்துவிட்டு, அடுத்த தலைமுறைக்குச் செய்வதற்குப் பாக்கியில்லை என்கிற சரித்திரத்தை முழுக்க முழுக்கச் சொந்தமாக்கிக் கொள்ளப்போகிற உங்களைப் பார்த்து, நான் உண்மையிலேயே பொறாமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அதைத்தான் சொன்னேன்; "துணையைப் பிடிக்கும் கலைஞர்" என்று சொன்னார்கள். அதில் என்ன தவறு? துணைக்கு வருகிற எங்களை உங்களுக்குப் பிடிக்காதா? எப்பொழுது எந்தக் கூட்டத்திலே வந்தாலும், துணையைத்தானே தேடுகிறீர்கள்? சுதர்சனம் எங்கே இருக்கிறார், மணி எங்கே இருக்கிறார், நம்முடைய கோவிந்தசாமி எங்கே இருக்கிறார், சிவபுண்ணியம் எங்கே இருக்கிறார், இந்த பீட்டர் எங்கே இருக்கிறார் என்று. அறிவாலயத்திற்கு வந்தாலும், இலட்சக்கணக்கான இளைஞர்கள் வந்தாலும், உங்கள்





பக்கத்தில் துணையிருக்கிற பேராசிரியரை நீங்கள் தேடுவதில்லையா? உங்கள் பக்கத்திலேயிருக்கிற ஆற்காட்டாரைத் தேடுகிறீர்கள். இங்கே இருக்கிற பொன்முடியைத் தேடுகிறீர்கள். ஆகவே, இந்தத் துணைகளுக்கும் உங்களைப் பிடிக்கும். உங்களுக்கும் இந்தத் துணைகளைப் பிடிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, துணை என்கிற பார்வை, நாங்கள் பார்க்கிற பார்வைதான். (மேசையைத் தட்டும் ஒலி) அது, பார்வையிலே வந்த கோளாறு. ஆகவே, ஒரு நல்ல அற்புதமான சட்டத்தை நிறைவேற்றி, ஒரு மிகப் பெரிய முன்னுதாரணத்தைத் தந்திருக்கிறீர்கள். ஆகவே, ஆட்சி மாற்றங்கள் வந்தாலும்கூட, ஆட்கள்தான் மாறுவார்களேயொழிய, இந்தச் சட்டம் மாறாது. 1861 ஆம் ஆண்டு போட்ட காவல் துறை சட்டம்தான், இன்றும் வழி நடத்துகிறது. எனவே, 2080, 2090, 3000 என்று, நாமெல்லாம் மண்ணோடு மண்ணாக மடிந்து, சரித்திரமானால்கூட, நீங்கள் நிற்பீர்கள் Men may come; Men may go; But, you will stand forever. இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு, தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் குறித்த சட்டமுன்வடிவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற ஐயன் வள்ளுவனின் கூற்றை, எந்த அளவில் உணர்ந்தாரோ தெரியவில்லை, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், சாதாரண ஒரு கிராமத்திலே பிறந்து, படிக்காத ஒரு சாமானியனாக இருந்து, தன்னுடைய உழைப்பால், பொது நல வாழ்க்கையில் மக்களுக்குச் செயற்கரிய தொண்டாற்ற வேண்டும் என்ற அந்த உயர்ந்த எண்ணத்தால், மேலும் மேலும் உயர்ந்து, தமிழ்நாட்டின் காங்கிரஸ் கட்சித் தலைவராக, தமிழ்நாட்டின் முதலமைச்சராக, அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக உயர்ந்து, இன்று இந்திய நாடே பாராட்டக்கூடிய வகையில், மிகப் பெரிய தலைவராக பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் விளங்கிய நிலையில் மட்டுமல்ல; இன்று தமிழர்கள் மத்தியிலே நிலைத்து நிற்பதற்குக் காரணம், அவர் ஒரு பச்சைத் தமிழன் என்ற காரணத்தாலே. அதிலும் குறிப்பாக,

[திரு. ஜி.கே. மணி] [2006 செப்டம்பர் 2

அவர்கள் ஏழைகள்பால் அன்பு கொண்டவர்கள். ஏழைகளுக்குக் கல்வியைக் கொடுக்க வேண்டும் என்ற அந்த உயர்ந்த சிந்தனையின் அடிப்படையிலேதான், கல்வியைக் கொடுத்தார்.

அதிலும் குறிப்பாக, அவருடைய பணியைப்பற்றி நாம் பார்க்கின்ற நேரத்தில், அவர் முதலமைச்சராக இருந்த ஒரு நாள், தன்னுடைய வண்டியிலே அதிகாரிகளோடு சென்று கொண்டிருக்கிறார். சாலையிலே செல்கின்றபொழுது, சாலையோரம் ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தவுடனே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தன்னுடைய ஓட்டுநரை நிறுத்தச் சொல்லிவிட்டு, அந்த வண்டியைவிட்டு இறங்கி, அந்த இளைஞனைப் பார்க்கப் போகிறார். உடனே, மாடு மேய்க்கின்ற அந்த சிறுவனைப் பார்த்து, "தம்பி, நீ படிக்கப் போகவில்லையா? படிக்கிற வயதிலே மாடு மேய்க்கிறாயே?" என்று கேட்கிறார். உடனே அந்தப் பையன் சொன்னான், "நான் மாடு மேய்க்கவில்லையென்றால், சோற்றுக்கு வழி என்ன? பள்ளிக்கூடத்திற்குப் போனால், சோறு யார் போடுவார்கள்?" என்று கேட்கிறான் அந்தப் பையன். அதைப் பார்த்த உடனே, மீண்டும் வண்டியிலே வந்து அமர்ந்து, அதிகாரிகளை அழைத்துச் சொன்னார்: "இந்தச் சிறுவன் உணவிற்கு வழியில்லாமல் மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறான்; சாப்பாட்டிற்கே வழியில்லை; சாப்பாட்டிற்கு வழியிருந்தால், பள்ளிக்குச் செல்வான்; கல்வி பெறுவான்" என்று சொல்லி, அதன் காரணத்தினாலே, அதிகாரிகளை அழைத்து உத்தரவிடுகிறார். இனிப் பள்ளிக்கூடங்களிலே மதிய உணவு போடவேண்டும். அப்பொழுதுதான் வயிறாறச் சாப்பிட்டு, அந்த ஏழைக் குழந்தைகள் படிக்கமுடியும் என்று சொன்ன காரணத்தினாலேதான், இன்று சத்துணவுத் திட்டமாக உயர்ந்திருக்கிற இந்தத் திட்டத்திற்கு அடித்தளமிட்டவர், முழுமுதற் காரணமாக இருந்தவர், பெருந்தலைவர் காமராஜர்தான். அவர்தான் மதிய உணவுத் திட்டத்தைத் தமிழ்நாட்டிலே தொடங்கினார். அது இந்திய நாட்டின் திட்டமாக உயர்ந்தது. இன்று சத்துணவுத் திட்டமாக வளர்ந்திருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பகல் 1-35

இப்படி மதிய உணவை வழங்கியது மட்டுமல்ல; பட்டிதொட்டிகளிலெல்லாம் பாமர மக்கள் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற காரணத்தினாலே, கிராமங்கள்தோறும் பள்ளிகளை அமைத்தார். அவர் பள்ளிகளைத் தொடங்கிய காரணத்தினாலேதான்,



2006 செப்டம்பர் 2] [திரு. ஜி.கே. மணி]

இன்று நாமெல்லாம் இந்த அவையிலே ஓரளவிற்குப் பேசிக்கொண்டிருக்கிறோம். கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு, பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழாவைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். மிகப் பெரிய கண்காட்சி நடத்தினோம். அதிலே எங்களுடைய நிறுவனத் தலைவராக இருக்கிற சமூக நீதிக் காவலர், மருத்துவர் அய்யா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய பெருமைகளை, உயர்வுகளை எல்லாம் சொல்லிவிட்டு, அவர் சொன்னது: "காமராஜர் மட்டும் இல்லையென்று சொன்னால், நான் ஒரு மருத்துவராக வந்திருக்கமாட்டேன்; அரசியலுக்கு வந்திருக்கமாட்டேன்; இன்றும் மாடு மேய்த்துக் கொண்டிருப்பேன்" என்ற உயர்ந்த கருத்தை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இப்படி எல்லோரும் உயர்ந்த நிலைக்கு, அரசியலிலே, பொருளாதாரத்திலே உயர்ந்திருப்பதற்குக் காரணம், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்கிறோம்.

அதுமட்டுமல்ல; இந்தக் கல்வி வளர்ச்சி நாளை அரசு கொண்டாட வேண்டுமென்று, கடந்த பத்தாண்டுகளாக இந்த மன்றத்திலே நான் பேசிவந்தேன். காமராஜர் பிறந்த தினத்தை, கல்வி தினமாகக் கொண்டாட வேண்டுமென்று, சட்டமன்றத்திலே ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும் நான் பேசினேன். அதிலும் குறிப்பாக, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில், சட்டமன்றத்திலே பேசியது மட்டுமல்ல; கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். தனி நபர் தீர்மானம் கொடுத்தேன். எதைக் கொடுத்தாலும், அந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. முதலமைச்சரிடத்திலே பலமுறை நேரடியாகவும் சொன்னேன். ஏற்றுக்கொள்ளாத இந்தச் சூழ்நிலையில், இப்பொழுது எல்லோரையும் மதிக்கிற ஒரு தலைவர், அதிலும் குறிப்பாக, நான் எண்ணிப்பார்க்கிறேன்; இன்று காங்கிரஸ் பேரியக்கத்தோடு கூட்டணி இருக்கிறது. அதுமட்டுமல்ல; பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வாழ்ந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம், குறிப்பாக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தவர். அவரைப்பற்றியெல்லாம் உணர்ந்தவர், எதிர்க்கட்சியாக இருந்த ஒருவர். எதிர் அணியிலே இருந்து பாடுபட்டவர். அவருடைய அரசியல் வாழ்வுகளைப்பற்றியெல்லாம் அன்று குறையாகப் பேசியிருந்தாலும்கூட, அவரது உயர்ந்த பண்புகளை எண்ணிப்பார்த்துதான், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவரைக்கூட மதிக்கக்கூடிய, மாற்றாந்தாய் குழந்தைகளையும் மதிக்கக்கூடிய, ஓர் உயர்ந்த பண்புள்ள தலைவராக

இருககின்ற காரணத்தால், நாட்டிலே உயர்ந்தவர்களை, பெரியவர்களை, உயர்ந்த பண்புகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த இலட்சியம் கொண்ட தலைவராக கலைஞர் இருக்கின்ற காரணத்தினாலேதான், இன்று பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினத்தைக் கல்வி தினமாக அறிவித்திருக்கிறார். இன்றுமட்டுமல்ல; தேர்தல் அறிக்கையிலே சொன்னார். தேர்தல் அறிக்கையிலே சொன்னபிறகு, அதை நடைமுறைபடுத்துவதாக அறிவித்து, அதை ஒரு சட்டமாகக் கொண்டுவந்தால், நிலைத்து நிற்கும் என்ற காரணத்தினாலேதான் இன்று சட்டபூர்வமாக வடிவம் கொடுத்திருக்கிறார்.

எல்லோரையும் மதிக்கிற தலைவராக, உயர்ந்தவர்களைப் போற்றுகிற தலைவராக, பச்சைத் தமிழருக்குக் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாடுகிற தலைவராக மாறியிருக்கிற கலைஞர் அவர்களை, இந்த நேரத்திலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்; நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பள்ளிகளிலே கல்வி வளர்ச்சி நாளைக் கொண்டாடுகின்ற நேரத்தில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களை மாணவர்கள் எண்ணிப்பார்ப்பார்கள். கல்விக்காக வித்திட்ட பணியை எண்ணிப்பார்ப்பார்கள். அதுமட்டுமல்ல; கல்வி ஒரு மனிதனை எவ்வளவு உயரவைக்கும் என்ற சிந்தனையை மாணவர்கள் மத்தியிலே, அது மேலும் தூண்டச் செய்யும்; பெருக்கச் செய்யும் என்ற காரணத்தினாலேதான் பள்ளிகள் முதல் கல்லூரிகள்வரையிலே, அந்த விழாவை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும்; அதற்கு வழிவகுக்கக்கூடிய ஒரு நிலையையும், இந்தச் சட்டமுன்வடிவிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டு, இந்தக் கல்வி வளர்ச்சி நாளைச் சட்டமாக்கிய நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றியையும், பாராட்டுதலையும் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியாரைத் துணைக்கோடல்" என்கிற முறையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பெரியார்களின்மீது மரியாதை உண்டு என்கிறவகையில், பஞ்சாப் தலைவர் பகத்சிங், அமரர் ஜீவானந்தம்



போன்ற தலைவர்களின் வரிசைக்கு, அவர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்துவிட்டு, தமிழகத்தில் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், மரியாதை செய்கிற முறையில், அரசின் சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

பெருந்தலைவர் அவர்களுடைய பெயர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு வைக்கப்படுகிறபொழுது எழுந்த சர்ச்சையின்போது, காமராஜர் பெயர்தான் வைக்கப்பட வேண்டுமென்று குரல் கொடுத்து, அன்றைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் பாலசுப்பிரமணியம், சங்கரய்யா, வரதராஜன் போன்ற தலைவர்கள் குரல் கொடுத்தார்கள் என்பதையும் தெரிவித்து, அந்த அடிப்படையில், இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனப்பூர்வமாக வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 1-40

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் மிகச் சிறந்த கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களிடத்திலே மிக நெருக்கமாக நட்பு கொண்டிருந்த நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள், இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிந்து, இங்கே நிறைவேற்றச் செய்வதற்கான முயற்சி எடுத்திருக்கிறார்கள்.

பல காலங்களிலே அரசியல் மாறுபாடான கருத்துகள், காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இருந்தது உண்டு. அதிலே ஒன்றை நான் பதிவுசெய்ய விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அடிக்கடி கூட்டங்களிலே குறிப்பிடுவார்; திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று சொல்வார். ஆனால், இப்போது காங்கிரஸ் கட்சி நண்பர்கள், இந்தச்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 செப்டம்பர் 2

சட்டமுன்வடிவை இப்போது பாராட்டி, அதன் கருத்தை மிகச் சிறப்பாக வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். விமர்சனத்தை நேரடியாகவே சொல்கிற பழக்கம் உண்டு, காமராஜர் அவர்களுக்கு. ஆனால், இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றியிருப்பதன்மூலமாக, ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் அல்ல; இது ஒரு சிறந்த பட்டறையிலே வார்க்கப்பட்ட ஒரு கட்சி என்பதற்கான அடையாளமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எல்லாவற்றையும் தாண்டி, இந்தச் சட்டமுன்வடிவை முன்மொழிந்து, தமிழக மக்கள் அனைவராலும் வரவேற்கக்கூடியவகையிலே செய்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே, வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா? திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் நினைவைப் போற்றுகின்றவிதத்திலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை, விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே நாங்கள் மனதாரப் போற்றி வரவேற்கின்றோம். அத்துடன்கூடவே, கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நாளிலே, மாணவர்கள் மத்தியிலே பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி இவற்றை நடத்துவது மட்டுமல்லாமல், அன்றைய தினத்திலே, கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற யாரேனும் ஒருவரை மாநில அளவிலே தேர்ந்தெடுத்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெயராலே ஒரு விருது அளித்து கவுரவிக்க வேண்டுமென்றும், அத்தகைய ஒரு திருத்தத்தை இதிலே சேர்க்க வேண்டுமென்றும் கேட்டு அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு, அவருடைய புகழ் மகுடத்திலே, அமைக்கக்கூடிய வைரக் கல்லாக, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், எண்ணக் கருவிலே உருவாகியிருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவினுடைய அடிப்படையில், இங்கே மாண்புமிகு தோழமைக் கட்சிகளினுடைய தலைவர்கள்,



2006 செப்டம்பர் 2] [திரு. தங்கம் தென்னரசு]

அதைப்போல விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே பேசியிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கக்கூடிய அந்த உயர்ந்த கருத்துகளோடு, எங்கள் அனைவருடைய சார்பிலே, எங்கள் உணர்வினையும் நாங்கள் இணைத்து, நீங்கள் தெரிவித்திருக்கக்கூடிய அந்தக் கருத்துகள் அனைத்தையும் அரசு கவனத்திலே கொண்டிருக்கிறது என்பதைப் பதிவுசெய்து, அன்புகூர்ந்து இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2006), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 30-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2006 செப்டம்பர் 2

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1-45

## (ஏ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2006), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.



2006 செப்டம்பர் 2]

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 31-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130, மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2006) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—
தொடர்ச்சி

### (ஐ) இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்).சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2006), மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 2-9-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[2006 செப்டம்பர் 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடு)

## 8. உரிமை மீறல் பிரச்சினை

### அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்யும்போது, ஒரு தவறான கருத்தைப் பதிவு செய்துவிட்டு போய் இருக்கிறார்கள். பெண்களை இழிவுபடுத்தியதாக, இந்த அவையிலே பேசியதாக, வெளியிலே போய் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து தாங்கள் ஒரு தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படி யாரும் அவையில் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே பெண்களை இழிவுபடுத்தி யாருமே பேசவில்லை. பேசாத ஒரு சொல்லை, தவறான சொல்லை அவைக்கு வெளியேபோய் அவையிலே பேசியதாக சொன்னால், அது

அவையினுடைய மரபை மீறிய செயலாகும். அது உரிமை மீறிய செயல் என்று கருத்தில்கொண்டு, அவர்கள் அளித்த அந்தப் பேட்டியை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

*பிற்பகல் 1–50*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. பெண்களை இழிவுபடுத்திப் பேசிய வார்த்தைகள், குடும்பத்தை இழிவுபடுத்துகிற முறையில், எதிர்க்கட்சித் தலைவருடைய அறிக்கையிலேதான் அந்த வார்த்தைகள் இருந்தனவேதவிர, இந்த அவையில் யாரும் எந்தப் பெண்ணையும் இழிவுபடுத்திப் பேசவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அறிக்கையிலே இருந்து, அந்தக் கருத்தை இங்கே எடுத்துச் சொன்னதற்காகத்தான் அவ்வளவு இரகளை செய்துவிட்டு, அது வெளியிலே வருகிறதே, அது குற்றச்சாட்டுக்குள்ளாகிறதே என்று அவ்வளவு பிரச்சினையை எழுப்பினார்கள். வெளிநடப்புச் செய்து, பெண்களை இந்த அவையில் இழிவுபடுத்தியதாகப் பேசியது, தங்களுடைய தலைவி செய்த குற்றத்தை அடியோடு மறைப்பதற்காக ஒரு தவறான பிரச்சாரத்தை மக்களிடத்திலே செய்வதற்காகச் சொல்லப்பட்டது என்ற காரணத்தால், இந்த அவையின் உரிமைக் குழுவிற்கு இந்தக் கருத்தை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, நான் அதற்குக் கண்டனமும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 226–ன்கீழ் அவர்கள் அளித்த அந்தப் பேட்டியைப் பற்றி விசாரிப்பதற்காக உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இதை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கின்றீர்கள். ஆனால், இன்றைய மன்றத்திலே நடக்காத ஒன்றை நடந்ததாகச் சொல்லி, பல பொய்களைத் திரும்பத் திரும்பச் சொல்கின்ற காரணத்தால், அது உண்மையாகிவிடும் என்ற காரணத்தினால், இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதோடு மட்டுமல்லாமல், அப்படிப்பட்ட நடக்காத செயலைச் சொன்ன உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கிறேன்.



## 9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள்

**திரு. டி. சுதர்சனம்:** நீங்கள் இந்த ஆட்சிப் பொறுப்பேற்று, சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கவர்னர் உரையைச் சிறப்பாக நடத்தியிருக்கின்றீர்கள். இந்தச் சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தியிருக்கின்றீர்கள். நாளை காலை, காமன்வெல்த் சபாநாயகர்கள் மாநாட்டிலே கலந்துகொள்வதற்காக வெளிநாடுகளுக்கு நீங்கள் சுற்றுப்பயணம் செய்ய இருக்கின்றீர்கள். அவ்வாறு சுற்றுப்பயணம் செய்கின்றபோது, நைஜீரியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு நீங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறீர்கள். உங்களுடைய சுற்றுப்பயணம் சிறப்பாக அமைய வேண்டுமென்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வெளிநாட்டிலே வாழ்கின்ற தமிழர்களை நீங்கள் சந்திப்பீர்கள். பல்லாண்டுகள் அரசியலிலே உள்ளவர்கள் மற்றும் அரசுத் தலைவர்களை நீங்கள் சந்திப்பீர்கள். அவர்களிடம் எல்லாம் தமிழகத்தின் சார்பாக நல்வாழ்த்துகளை நீங்கள் பெற வேண்டும்; உங்களுடைய பயணம் வெற்றிகரமாக அமைந்து, தமிழுக்கும், தமிழ்நாட்டிலே இருக்கும் அத்தனை தலைவர்களுக்கும், தமிழினத் தலைவர் நம்முடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர், தமிழகத்திலே, நெருஞ்சிப் பூக்கள் நிறைந்திருக்கும் இந்த அரசியல் உலகில், குறிஞ்சிப் பூவாக உள்ள கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் புகழ் சேர்த்து, பெருமை பெற்று வரவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டி அமர்கிறேன்.

## 8. உரிமை மீறல் பிரச்சினை—*தொடர்ச்சி*

### அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். வெளிநடப்புக்குண்டான காரணமே இல்லை. நீண்டநேரம்

[திரு. ஜி.கே. மணி] [2006 செப்டம்பர் 2

அமர்ந்திருந்தார்கள். கடுமையான விவாதம் நடந்தது. விவாதத்திற்குப் பிறகு அவர்கள் வெளிநடப்புச் செய்யவில்லை, இங்கே அமர்ந்துகொண்டு சகஜ நிலையிலே இருந்தார்கள். திடீரென்று எங்கிருந்தோ தொலைபேசி அழைப்பு வந்தது. செய்தி வந்தது, அந்தச் செய்தியைக் கேட்டபிறகு, அதிர்ந்துபோய், ஆடிப்போய், அதிர்ச்சியுற்று வெளிநடப்புச் செய்து, அவர்கள் தலைமையில் இருந்துவந்த உத்தரவுக்கேற்ப பத்திரிகையிலே பேட்டி அளித்திருக்கிறார்கள். எப்படிப் பேட்டி அளித்தாலும்கூட, ஒரு அரசியல் கட்சி நடத்தக்கூடியவர்கள், அதிலும் மரபுமிக்க இந்தச் சட்டமன்றத்தில், பெண்களை அவமானப்படுத்தியதாக அல்லது கொச்சைப்படுத்திப் பேசியதாக இல்லாத ஒன்றைச் செய்தியாகச் சொன்னதாக வந்திருக்கிறது. இது முழுக்க முழுக்க வதந்தி. பெண்களைப் பற்றி இழிவான செயல், இழிவான வார்த்தை வந்திருக்குமென்று சொன்னால், அ.தி.மு.க. சார்பிலே பெண் உறுப்பினர்கள் அமர்ந்திருந்தார்கள்; அவர்கள் அப்போதே கேள்வி எழுப்பியிருப்பார்கள். அதற்கான கண்டனத்தை, ஆட்சேபணையைத் தெரிவித்திருப்பார்கள். அப்படி எதுவுமே நடக்கவில்லை. ஆகவே, பெண்களைப்பற்றி இழிவுபடுத்தியதாக இன்று சொல்லப்பட்டது, கடந்தகால வரலாறு, இதற்கு முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது. எதையும், எந்த நேரத்திலும், எப்படியும் பேசக்கூடியவர்கள் இப்போது அதைச் செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நாம் சொல்லியாக வேண்டும். ஆகவே மக்கள் மத்தியிலே அனுதாபத்தைத் தேடுவதற்கு இந்தச் சூழ்ச்சியிலே, இந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வன்மையாகக் கண்டிக்கிறேன்.

*பிற்பகல் 1–55*

## 9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள்—*தொடர்ச்சி*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நாளை வெளிநாடு செல்லவிருக்கிறீர்கள். காமன்வெல்த் மாநாட்டிலே நீங்கள் பங்கேற்க இருக்கிறீர்கள். பல்வேறு நாடுகளுக்குச் செல்லவிருக்கிறீர்கள். உங்களுடைய பயணம் சிறக்கவும், நம்முடைய தமிழ்நாட்டின் பெருமை, தமிழ்நாடு சட்டமன்றத்தின் பெருமை உயர, நீங்கள் பணியாற்ற, அந்த மாநாட்டிற்குச் சென்றுவர எங்களுடைய வாழ்த்துகளை, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)



2006 செப்டம்பர் 2]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நமது சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கியதற்கு ஏற்ப, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு, வெளிநாட்டுப் பயணம் இனிதாக அமையவேண்டுமென்று வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. உரிமை மீறல் பிரச்சினை—*தொடர்ச்சி*

### அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து—*தொடர்ச்சி*

**திரு. வை. சிவபுண்ணியம்:** இங்கே குறிப்பிட்டுச் சொன்ன ஒரு செய்தி. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள், அவையிலே முறைகேடாக நடந்துகொண்டவர்கள் அவர்கள். தவறான செய்திகளைப் பதிவு செய்தவர்களும் அவர்கள்தான். தவறான கருத்தை வெளியிலே அறிக்கையாகப் பதிவு செய்தவர், அவர்களுடைய தலைவர். ஆகவே, அதற்குரிய விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். இருந்தாலும், அவர்கள் இந்த அவையிலே அமர்ந்திருந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, எங்கிருந்தோ வந்த உத்தரவுக்காக அவர்கள் மீண்டும் வெளிநடப்புச் செய்து, வெளியிலே போய் ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார்கள். ஒன்றை நான் பதியவைக்க விரும்புகிறேன். பெண்களை இழிவாகப் பேசியதாக ஒரு செய்தியை, அங்கே பேட்டியளித்தார்கள் என்று சொல்லி, அதை இங்கே நீங்கள் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். இந்த மாதிரியான செய்திகள் சொல்வது என்பது, உண்மையிலேயே இந்தச் சபையினுடைய மரபுக்கு அழகானதா? குறிப்பாக, இந்தச் சபையினுடைய பாரம்பரியம், வரலாறு, சிறப்புகளுக்கெல்லாம் களங்கத்தை ஏற்படுத்துவதைப் போல இப்படிப்பட்ட செய்திகள் சொல்வது, பெண்களை இழிவுபடுத்தியதாக ஒரு தவறான செய்தியைப் பத்திரிகைகளுக்குச் சொல்வது என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாக நான் கருதுகிறேன். ஆகவே, அதை வன்மையாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கண்டிக்கிறேன். அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

## 9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய வெற்றிகரமான வெளிநாட்டுப் பயணத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 8. உரிமை மீறல் பிரச்சினை—*தொடர்ச்சி*

### அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ·இ·அ·தி·மு·க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து—*தொடர்ச்சி*

**செல்வி கே. பாலபாரதி:** *இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இந்தச் சபையிலே பெண்களை இழிவுபடுத்துவதாகக் கூறி, வெளியிலே பத்திரிகைகளுக்கும், media-க்களுக்கும் பேட்டி கொடுப்பது என்பது, இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயல். தமிழக மக்களுக்கு எது நடக்கிறதோ, அதனுடைய உண்மையைச் சொல்ல வேண்டுமே தவிர, அதையெல்லாம் மறைத்துவிட்டு, உண்மைக்கு மாறாகச் சொல்லிக் கொண்டிருப்பது என்பது, அரசியலில் அ.தி.மு.க. நடத்திக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கேவலமான, அவலமான நடவடிக்கை என்று நான் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் குறிப்பாக, தொடர்ந்து பெண்களை இழிவுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று, பெண்களைப்பற்றியே தொடர்ந்து சொல்லிக்கொண்டிருப்பது என்பது, இன்றைக்கு மிகவும் வருத்தத்திற்கும், வேதனைக்கும் உரியதாக இருக்கின்றது. இங்கே பெண்ணுரிமைக் காவலர்களாக, தமிழகத்தினுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசும், இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய அனைத்து எதிர்க்கட்சியினுடைய தலைவர்களும், மற்ற உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும், பார்வையாளர்களும் அமர்ந்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய குடும்பத்துப் பெண்களை, அரசியலுக்கு 'அப்பாற்பட்டு இருக்கக்கூடியவர்களை இழுத்து, அவர்கள்தான் அநாகரிகமான*





*அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்களே தவிர, இந்த அவையிலே எந்தவொரு உறுப்பினரும், எந்தவொரு பெண்ணையும் இழிவுபடுத்தவில்லை என்பதுதான் இங்கே நடந்துகொண்டிருக்கக்கூடிய உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அ.தி.மு.க. தரப்பிலிருந்து, பெண் தலைமை தாங்கக்கூடிய அந்த அரசியல் இயக்கத்தில், பெண்களை இழிவுபடுத்துவதாகக் கூறிக் கூறி, அரசியலை நடத்துவது கண்டனத்திற்குரியது. இத்தகைய போக்கை அவர்கள் கைவிடவேண்டும். அ.தி.மு.க உறுப்பினர்கள் இந்த உண்மையை உணர வேண்டும். அவர்களெல்லாம் Bills Section-லேதான் அமர்ந்து சகஜமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், அவர்களுக்கு மேலிடத்திலிருந்து வரக்கூடிய அரச கட்டளையை ஏற்றோ, என்னவோ, அவ்வப்போது வெளியே சென்று, பெண்களை இழிவுபடுத்துவதாகவே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய போக்கு நல்லதல்ல. தமிழக மக்களுடைய பிரச்சினையைச் சொல்ல, அவர்களுக்கு உரிமை இருக்கிறது. வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சபை நல்ல ஜனநாயகமிக்க சபையாக நடந்து முடிந்திருக்கிறது. எங்களைப் போன்றவர்களுக்கு நல்ல ஓர் அரசியல் பயிற்சியும், சட்டமன்றத்தினுடைய நல்ல ஜனநாயகத்திற்குரிய பயிற்சியும் இந்தக் கூட்டத்தொடரிலே கிடைத்திருக்கிறது என்பதையே எங்களுக்கு மிகப் பெரிய வெற்றியாக நாங்கள் பார்க்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, நமது சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி.*

*பிற்பகல் 2–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.*

**திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடக்காத ஒன்றை நடந்ததாக வெளியிலே பத்திரிகைகளிலே இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்கள் குறை கூறியிருக்கின்றார்கள். பேட்டி கொடுத்திருக்கின்றார்கள். கண்ணாடி மாளிகையிலே இருந்து கொண்டு கல் எறியக் கூடாது. திரும்பி அந்தக் கல் கண்ணாடி மாளிகைக்கு உள்ளே வந்தால், அந்தக் கண்ணாடி மாளிகை சுக்குநூறாக உடைத்தெறியப்படும் என்பது நாடறிந்த உண்மை. ஒரு பொறுப்பிலே இருக்கின்றவர்கள், பதில் சொல்கின்றபோதோ, அறிக்கை விடுகின்றபோதோ அவர்களுடைய தரத்தையும் குறைத்துக்கொள்ளாமல்,*

ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கின்றவர்களுடைய தரத்தையும் குறைக்காமல், இந்த அறிக்கையும், விவாதமும் ஆரோக்கியமாக இருந்திருக்குமேயானால் நிச்சயமாக அந்தப் பதில் வந்திருக்க முடியாது. அந்த பதிலிலேகூட என்ன சொன்னார்? 'துணை' என்று சொன்னாலே உடனே எல்லோரும் எழுந்து நிற்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், பேரவைத் தலைவர் அவர்கள் எழுந்து நின்றாலே சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார வேண்டும் என்பது விதி. ஆனால், அந்த விதி இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சியாலே காப்பாற்றப்படுகின்றதா என்றால் இல்லை. அதேபோல, ஏதேனும் ஒரு பிரச்சினை என்று சொன்னால், முன்னாலே இருக்கின்ற முன்னாள் அமைச்சர்களாக இருந்தவர்கள் அத்தனை பேரும் புறப்பட்டு நேராக இங்கே ஓடி வருகின்றார்கள். எல்லோரும் ஒட்டுமொத்தமாக கும்பலாகச் சேர்ந்துகொண்டு, சபாநாயகருக்குப் பக்கத்திலே வந்து நிற்பது என்பது, ஒரு நல்ல மரபை எடுத்துக்காட்டுகின்ற நிகழ்ச்சியாக இருக்க முடியாது. ஆகவேதான், இன்றைக்கு நடக்காத ஒன்றை, எந்தப் பெண்ணையும் யாரும் இங்கே கேவலப்படுத்திப் பேசவில்லை; அப்படிப் பேசியதாகக் கூறி இருப்பதை, நான் மிக மிக வருத்தத்தோடு கண்டித்து, இந்த அவையிலே நடக்காததை, நீங்கள் திருப்பித் திருப்பிச் சொல்வதன் காரணமாக, இந்தச் சபையினுடைய மாண்பும் குறையாது; அதேநேரத்திலே பொய் உண்மையாகவும் ஆகிவிடாது என்பதை நான் கூறி, இதுபோன்ற நடக்காத தவறான கருத்துகளை நீங்கள் வெளியிலே சொல்வதை, பெண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த மாமன்றத்தைக் களங்கப்படுத்துகின்ற முயற்சியிலே ஈடுபடுவதை, நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது வெளிநாட்டுப் பயணம் சிறப்புற எங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். சற்றுமுன் அவையில் நடைபெற்ற இந்தச் சம்பவங்களில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், குறிப்பாகப் பெண்களையே மையப்படுத்தி பிரச்சினையை உருவாக்குவோம் என்ற அந்த நிலையிலே இறங்கி இருக்கின்றார்கள். முன்பு ஒருமுறை, இதே அவையிலே மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத் அவர்களைக் காவலர்கள் வெளியில் அகற்றுகின்றபோது, காலை மிதித்து விட்டார்கள்;



கையை உடைத்து விட்டார்கள் என்ற ஒரு பொய்யைச் சொல்லி, சிறுபான்மைப் பெண்ணுக்கு இங்கே பாதுகாப்பு இல்லை என்பதாக அறிவித்தார்கள். அதுபோன்று பலவேறு சம்பவங்களை நாம் பார்த்திருக்கின்றோம். இன்றையதினம் இங்கே பெண்களை இழிவுப்படுத்திப் பேசினார்கள் என்ற ஒரு பொய்யான தகவலை, இந்த அவையை விட்டு வெளியில் சென்று அறிவித்திருக்கின்றார்கள். அது உண்மை என்றால், இந்த அவையிலே அவர்கள் அறிவித்திருக்கலாம். அதற்கான திராணி அவர்களுக்குக் கிடையாது. பொய்யான சம்பவத்தை வெளியில் சென்று அறிவித்திருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல், இந்த 100 நாட்களிலே இந்த அரசு மக்களுக்குத் தேவையான, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நல்ல பல சலுகைகளை, திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாத, ஒப்புக்கொள்ள முடியாத, ஜீரணிக்க முடியாத முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இப்படிப்பட்ட இந்தப் பிரச்சினைகளை, பெண் என்ற முறையிலே அவர்களை மையப்படுத்தி, அதை வைத்துப் பிரச்சினை செய்ய வேண்டும் என்ற அந்தத் தூண்டுதலின்பேரில், இப்படிப்பட்ட நிலையை இன்றைக்கு உருவாக்கி இருக்கின்றார்கள். இந்த நிலை என்பது சரியான நிலை இல்லை. அவர்கள் இதுமாதிரியான பிரச்சினைகளை உருவாக்குவார்கள் என்று சொன்னால், அவர்களே அவர்களை அழித்துக்கொள்வதற்கான நிலை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவை சிறப்பாகவும், கண்ணியமாகவும் நடைபெறுவதற்குரிய வகையில், இங்கே இருக்கின்ற ஆளுங்கட்சியைச் சார்ந்த நம்முடைய தலைவர்களும், அதேபோன்று எதிரணியில் இருக்கின்ற தோழமைக் கட்சியைச் சார்ந்த தலைவர்களும், உறுப்பினர்கள் அத்தனை பேரும், இதைச் சிறப்பாகக் கொண்டுசெல்ல வழி நடத்தக்கூடிய இந்த நேரத்தில், இப்படிப்பட்ட சம்பவங்களை நாம் எல்லோரும் சேர்ந்து தவிர்ப்போம் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன். (குறுக்கீடு)

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. ரவிக்குமார், கடைசியாகச் சொல்லலாம், உட்காருங்கள். திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய வெளிநாட்டுப் பயணம் நன்றாக வெற்றிபெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

இந்தச் சபையில் காலத்தால் அழியாத கர்ம வீரர் காமராஜர் அமர்ந்த இடத்தில் நாங்களும் அமர்ந்திருக்கிறோம் என்பதை மிகப் பெரிய பெருமையாகக் கருதிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அறிக்கையை அம்மையார் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள். இங்கு தனிமையில் வந்து அவர்களுக்கு எந்தவித ஒரு களங்கமும் இல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியில் சென்றிருக்கிறார்கள் என்றால், இந்தப் பெருமை நம்முடைய முதலமைச்சர் அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நல்ல காரியங்களுக்குச் சென்றாலும், "ஐயா! ஆல்போல் தழைத்து அரசுபோல் வாழ வேண்டும்" என்றுதான் வாழ்த்துவோம். அதற்கு மாறாக, இவர்கள் குடும்பத்தையே காலி செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதையே, இவர்கள் சிறுதாவூர் பங்களாவிலிருந்து போக வேண்டுமென்று யாரைச் சொல்ல முடியும்? அதற்கு ஆண்டவன் ஒரு வழியும் கொடுக்கவில்லை. ஒரு பெண்ணையே ஒரு பெண் குற்றஞ்சாட்டிப் பேசியிருப்பதை, பெண்கள் சமுதாயமாகிய நாங்கள் கண்டிக்கிறோம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒன்றும் புதியது கிடையாது. சென்ற ஆட்சியிலே, அந்த அம்மா புடவையை அவிழ்த்துவிட்டு, என்னை அவிழ்த்துவிட்டார்கள், புடவையை அவிழ்த்துவிட்டார்கள் என்று சொல்லி, தலையை விரித்துக்கொண்டு போய் அங்கே எல்லாம் நாடகமாடியது ஒன்றும் புதியதல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, அவர்கள் வழியாகவந்த அந்தப் பெண்களும் சொல்வதிலே ஆச்சரியமேயில்லை. இதையும் சொல்வார்கள்; இதற்கு மேலும் சொல்வார்கள். அதனால், துணை இல்லாத எவரும் துணிந்து செயல்பட முடியாது. துணைவி





என்ற வார்த்தையையே துணிந்து எடுத்துக்கொள்வோம் என்று இந்த அவையிலே கூறிக்கொண்டு, நீங்கள் வெளிநாடு நல்லபடியாகச் சென்று வரும்படி வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமன்வெல்த் நாடுகளுடைய பேரவைத் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் பயணம் வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் அமைய, விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அங்கே செல்லும்போது உலகமெங்கும் பரவிக் கிடக்கின்ற தமிழர்கள் உங்களைச் சந்திப்பார்கள். அவர்களைப் பார்க்கின்ற நேரத்திலே, இந்த மாமன்றத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஈழத் தமிழர்கள் பிரச்சினை குறித்து உணர்ச்சியோடும், உறுதியோடும் ஆற்றிய உரைகளை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல், கட்சிகள் வேறுபாடின்றி இங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் நீங்கள் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வினை நாம் காண்போம் என்கிற உறுதியையும் வழங்க வேண்டுமென்று கேட்டு, அன்போடு வாழ்த்துகிறேன். வணக்கம்.

## 8. உரிமை மீறல் பிரச்சினை—தொடர்ச்சி

### அவையில் பெண்களை இழிவுபடுத்திப் பேசியதாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேட்டி அளித்திருப்பது குறித்து—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி காயத்ரிதேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரிதேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் உங்களுக்கு "bon voyage" என்று சொல்லிக்கொள்கிறேன்.

சற்றுமுன் இங்கு இவர்கள் பேட்டி அளித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் முழுக்க முழுக்க என்ன காரணம் என்று சொல்ல வேண்டும். வெளியிலே இறங்குவதற்கு எங்களுக்கு இப்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் படைத்த சாதனைகளையெல்லாம் ஏதோ நாங்கள் செய்துவிட்ட மாதிரி, எங்கள் தொகுதிக்குள் போகும் சமயத்தில் எங்களுக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் ஐயா அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மக்கள் எல்லோரும் இதை எதிர்பார்க்கவே இல்லை. யாருமே எதிர்பார்க்கவில்லை. இந்த 100 நாட்களுக்குள் இப்படியொரு சாதனையா என்று எல்லா quarters-ஓம் இருந்து, அங்கே நான் யாரைப் பார்த்தாலும் எல்லோருமே மனமாரப் பாராட்டுகிறார்கள். நேற்று வெளியில்போன சமயத்தில்கூட, மக்கள் எல்லாம், "அங்கன்வாடி workers-ஐக்கூட நீங்கள் விட்டுவைக்கவில்லை; நாங்கள் ஒருவர்தான் ஒன்றும் கிடைக்காமல் போய்விடுவோமோ என்று நினைத்தோம், ஆனால் எங்களையும் நீங்கள் விட்டுவைக்கவில்லை" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் பார்த்துப் பார்த்து, நம்முடைய எதிர்க்கட்சியினர் என்ன பேசுவது, என்ன செய்வது என்று புரியாமல் heartburns என்று சொல்வார்களே, ஒரு பொறாமை, ஒரு வயிற்றெரிச்சலில், என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் அவர்கள் try செய்து, கடைசியில் ஒன்றுமே செய்ய முடியாத நிலையில், இன்று கடைசி தினமாக நாம் அவையை முடிக்கும் சமயத்தில்கூட, இங்கு இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் வெளியேறி, அங்கும் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு நம்மைப் பற்றி ஏதாவது சொல்லவேண்டும் என்று நினைத்து சொல்லி இருக்கிறார்களே தவிர, எல்லோரும், எல்லா உறுப்பினர்களும் இங்கே பேசியமாதிரி, இது ஒன்றும் முதன்முறை அல்ல.

முன்பே அவர்கள், minority women என்றார்கள். ஏனெனில், அவர்களுக்குத் தெரியும். மிக sensitive issues-ஆக, minority-ஐப்பற்றிப் பேசினால், வெளியிலே இருப்பவர்கள் கொதித்து எழுந்து விடுவார்கள்; அதேபோல், women என்று சொன்னால், மக்கள் வெளியிலே கொதித்து எழுந்து விடுவார்கள் என்றெல்லாம் நினைத்துச் சொல்கிறார்கள். ஆனால், இங்கே, நாங்கள் எல்லாம் என்ன கண்ணை மூடித் தூங்கிக்கொண்டா இருக்கிறோம்? காதை அடைத்துக்கொண்டா இருக்கிறோம்?. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றுமே நடக்காமல் இப்படி அவதூறாக இந்த மாபெரும் அவையைப்பற்றித் தவறாகக் கூறுவதை தமிழக மகளிர்





காங்கிரஸ் கட்சி சார்பாக மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, இப்படியெல்லாம் இவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள்; இதற்கெல்லாம் தக்க பாடத்தை, வரும் உள்ளாட்சித் தேர்தலில் மக்கள் கண்டிப்பாகப் புகட்டுவார்கள் என்றும் சொல்லிக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 2-10*

## 9. காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்கேற்க நைஜீரியா செல்லும் பேரவைத் தலைவருக்கு வாழ்த்துரைகள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிழ்ச்சியோடு வெளிநாடுகளுக்குச் சென்று வாருங்கள் என்ற வாழ்த்தினை, நம்முடைய தோழமைக் கட்சியினுடைய தலைவர்களோடு இணைந்து, தோழமைக் கட்சிகளின் மாண்புமிகு உறுப்பினர்களோடு இணைந்து, நானும் உங்களுக்கு வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று, நீங்கள் மேற்கொள்கின்ற இந்த வெளிநாட்டுப் பயணம், என்றைக்கும் நினைவிலே நிற்கக்கூடிய நாளாகவும் அமைந்து இருக்கின்றது. ஒன்று, ஏறத்தாழ இந்த அவையை, இயன்றவரையில் அமைதியாக நடத்தி, ஒவ்வொரு நாளும் இனிதே நிறைவேற்றி, அந்த மகிழ்ச்சியை முழுமையாக இன்றைக்குச் கொண்டாட முடியாவிட்டாலும், அதற்கு இடையிலே சில நிகழ்வுகள் நடந்துவிட்டாலும், அதை ஒரு நினைவுச் சுமையாக நெஞ்சிலே நீங்கள் தூக்கிக்கொண்டுதான் இன்றைக்கு வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்கின்றீர்கள்.

காலையிலே, நான், நம்முடைய அம்மையார் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவராக இருக்கின்ற ஜெயந்தி நடராஜனுடைய இல்லத்திற்கு, ஒரு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டுத்தான் அவைக்கு வந்தேன். அங்கே பல பிரமுகர்களைச் சந்தித்தபோது, அவர்கள் என்னுடைய கையைக் குலுக்கிச் சொன்னார்கள்: "பரவாயில்லை! இவ்வளவு நாட்கள் அமைதியாக சட்டமன்றத்தை நடத்திக் காட்டிவிட்டீர்களே, உங்களுக்கு என்னுடைய பாராட்டு!" என்று, மிக முக்கியமானவர்கள் உயிருக்கு உயிரான நண்பர்கள் எல்லாம் வாழ்த்துக் கூறினார்கள். எனக்கு இந்தக் கண்படுவது, திருஷ்டி, இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. ஆனால், இன்றைக்கு எனக்கு

நம்பிக்கை வந்துவிட்டது! (சிரிப்பு) அந்த அளவிற்கு காலையிலே, அவர்கள் என்னைப் பாராட்டினார்கள். அதற்கு மாறாக அவை நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிட்டன; பரவாயில்லை. என்ன வேடிக்கை என்றால், இந்த அவையில், அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய, அல்லது பேசிய பேச்சுக்களை, எழுதிய எழுத்துக்களை படித்துக் காட்டுவது நமக்குப் பெருமை. அதை அவையிலே உள்ளவர்கள் இரசித்து மகிழ்வதைக் காண்பது, இன்னும் பெருமை. "நம்முடைய தலைவருடைய அறிக்கையைப் படித்தோம்; எல்லோரும் மகிழ்கிறார்கள்; ரசிக்கிறார்கள்; எப்படிப்பட்டவரைத் தலைவராகப் பெற்று இருக்கிறோம்" என்று ஒரு பெருமிதம். பெருந்தலைவர் காமராஜருடைய பேச்சுக்கள், புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. 'சமுதாய ஒப்பந்தம்' என்றும், வேறு பல தலைப்புகளிலும் கிராமிய மக்களைப் பற்றி, ஏழையெளிய மக்களைப் பற்றி, மாணவர்களைப் பற்றி, கல்வியைப் பற்றியெல்லாம் புத்தகங்கள் வந்து இருக்கின்றன. அதைப் படித்துக் காட்டினால், அவர்பால் அன்பு கொண்டவர்களுக்கு, அவருடைய தொண்டர்களுக்கு, அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களுக்கு, எத்தகைய கர்ம வீரரை, எத்தகைய தியாகியை நாம் தலைவராகப் பெற்றிருக்கிறோம் என்று அந்த எழுத்துக்களைக் கேட்டுக் கேட்டு, படிக்க கேட்டுக் கேட்டு பரவசம் அடைவார்கள். அதேபோல், நம்முடைய மறைந்த அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்களுடைய எழுத்துக்களை, அவருடைய பழைய பாடல்களை,

"காலுக்குச் செருப்புமில்லை,
கால் வயிற்றுக் கூழுமில்லை,
வீணுக்கு உழைத்தோமடா தோழா"

என்ற அந்தப் பாடல்களைப் பாடிக் காட்டினால், கம்யூனிஸ்டு கட்சியினுடைய நண்பர்கள், எத்தகைய தலைவன் நம்மிடையே இருந்தான் என்று எண்ணிப் பூரிப்படைவார்கள்.

*பிற்பகல் 2–15*

அதைப்போல, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, பின்தங்கிய சமுதாயத்திற்காகப் பாடுபட்ட நம்முடைய பட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர்கள், தொண்டர்களைப்பற்றி, அவர்களுடைய எழுத்துக்கள், அவர்கள் ஆற்றிய செயல்கள் இவற்றைப்பற்றி எடுத்துச்சொல்லும்போது, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருமை அடைவார்கள். ஐயா டாக்டர் இராமதாஸ் அவர்கள், டெல்லியிலே



சென்று, அங்கு பேசிய பேச்சைப் படித்துக் காட்டினால், இங்கேயிருக்கிற கோ.க.மணி அவர்களுக்கு மகிழ்ச்சி; பக்கத்தில் இருக்கிற வேல்முருகனுக்கு மகிழ்ச்சி; எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனால், அ.தி.மு.க.–விலே மாத்திரம்தான், நான் எப்போதும் அ.தி.மு.க. என்றுதான் சொல்லுவேன். நீங்களெல்லாம்கூட, பட்டவர்த்தனமாக, 'அண்ணா தி.மு.க., அண்ணா தி.மு.க.' என்று சொல்லும்பொழுது, நான் அண்ணாவுக்காகப் பரிதாபப்படுவேன். உயர்ந்த பெயர்; சிறந்த பெயர்; சிலாக்கியமான பெயர்; எங்களையெல்லாம் கவர்ந்த பெயர். அந்தப் பெயரை, ஒரு கட்சிக்கு வைத்துக்கொண்டு, அதை நீங்கள் எல்லாம் சொல்லவேண்டும் என்கின்ற கடமை உணர்ச்சியோடு சொல்லும்போது, எனக்கு வருத்தமாகக்கூட இருக்கும். சில நேரங்களில் கோபமாகக்கூட இருக்கும். ஏனென்றால், அண்ணாவை, இப்படி எல்லாம் சிதைக்கக் கூடாது என்பதிலேதான்.

அத்தகைய நண்பர்கள், அவருடைய பெயரால் கட்சி வைத்துக் கொண்டிருப்பவர்கள், இன்றைக்கு அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கட்சித் தலைவருடைய அறிக்கையைப் படிக்கும்பொழுது, 'படிக்காதே, படிக்காதே' என்று சொல்கிறார்கள் என்றால், உலகத்திலேயே தங்களுடைய தலைவருடைய அறிக்கையைப் படிக்கும்பொழுது (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் இவ்வளவு பெரிய மாமன்றத்திலே படிக்கும்பொழுது, 6 கோடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற ஒரு மாமன்றத்தில் அவர்களுடைய தலைவருடைய அறிக்கையைப் படிக்கும்பொழுது, அதுவும் யார்? தமிழகத்தினுடைய முதலமைச்சரே படிக்கும்பொழுது, 'படிக்காதே, படிக்காதே' என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) இதைவிட தங்களுடைய தலைவரை வேறு யாராவது இழிவுபடுத்த முடியாது. நானா இழிவுபடுத்தினேன்? இழிவுபடுத்தியதே அவர்கள்தான். 'படிக்காதே படிக்காதே' என்று சொல்லி, எனக்கு பயமாகக்கூட இருந்தது; எங்கே கிட்டே வந்து கிழித்து எறிந்து விடுவார்களோ என்று பயம் இருந்தது. அந்த அளவுக்குத் தங்களுடைய தலைவர் அறிக்கையைப் படிக்கக்கூடாது என்று தடை போடுகின்ற ஒரு நிகழ்ச்சி, உலக சரித்திரத்திலேயே முதன்முதலாக தமிழகத்தில் நம்முடைய சட்டப் பேரவையில்தான் இன்றைக்கு நடைபெற்றிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி).

தலைவர் அவர்களே, நீங்கள் வெளிநாடு செல்லும்போது விசாரித்துப் பாருங்கள். அங்கேயெல்லாம் இதுபோன்ற நிகழ்ச்சிகளுக்குச் சிறப்பிடம் தந்து வெளியிடுகிறார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோமா? இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது தமிழகத்தில். இதற்கு ஏதாவது சிறப்பிடம் தரப்படுமா? 'எனறு அங்கே விசாரித்துப் பார்த்து, அப்படி இருந்தால் செய்தியைச் சொல்லுங்கள்.

ஆனால், நண்பர்கள் எல்லாம் இங்கே சொன்னார்கள். நம்முடைய விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக பேசியவர்களும் சரி, மற்ற கட்சிகளின் சார்பாகப் பேசிய அத்தனை தலைவர்களும் சரி, சொன்னார்கள், யாரும் கொஞ்சம்கூட தயக்கம் இல்லாமல், "தமிழகத்தினுடைய புகழை நிலைநாட்டிவிட்டு வாருங்கள்" என்று சொன்னார்கள். அவற்றைக்கூட நீங்கள் அங்கே மறைத்துவிட்டு, நடந்தவற்றை எல்லாம்கூட மறைத்துவிட்டு, நாம் சில உணர்வுகளில் நம்முடைய தமிழர்களை, எங்கிருந்தாலும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வில், இந்திய நாட்டினுடைய ஒற்றுமையை எந்தச் சூழ்நிலையிலும் காப்பாற்ற வேண்டும் என்கின்ற அந்த உணர்வில், நாம் மொழியால் தமிழன், நாட்டால் இந்தியன் என்ற அந்த உணர்வுகளில், அந்த உணர்வோடுதான் இந்த மன்றம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற அந்த நிலையை எடுத்துக்கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) பாரதி பாடினான்:

'ஆயிரம் உண்டிங்கு ஜாதி—எனில்
அந்நியர் வந்து புகலென்ன நீதி?'

என்றானே, அந்த உணர்வோடு ஆயிரம் இங்கு இருந்தாலும், இந்த மாமன்றத்திலே நாம் வார்த்தைகளால் தாக்கிக் கொண்டாலும், மோதிக் கொண்டாலும், ஒருவரை ஒருவர் பிடித்து இழுத்தாலும், அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், நாம் ஒன்றாக இருப்போம், தமிழகத்தைக் காக்க; தமிழகத்தினுடைய வளத்தைப் பெருக்க. காலையிலே பேசப்பட்டதே முல்லை பெரியாறு, அதுபோன்ற பிரச்சினைகளில், பொதுப் பிரச்சினைகளில் ஒன்றாக இருப்போம்; மொழி காப்பதில், நாடு காப்பதில், நம்முடைய மக்களைக் காப்பதில், அவர்களுக்காகப் பாடுபடுவதில், பணியாற்றுவதில் ஒன்றாக இருப்போம், அப்படித்தான் இருக்கிறோம்.

*பிற்பகல் 2–20*

இங்கே நடந்தது ஒரு நாள் சச்சரவு; கேட்டால்கூட வெளிநாட்டில் அப்படித்தான் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். அத்தகைய பெருந்தன்மை உங்களுக்கு உண்டு என்பது எனக்குப் புரியும். அண்ணாவின் தம்பிமார்களுக்கு அந்த நாகரிகம் நிச்சயமாகத் தெரியும்; அந்தப் பண்பாடு நிச்சயமாகத் தெரியும். அந்தப் பண்பாட்டோடுதான், நாம் பல கருத்துகளைக் கொண்ட தோழமைக் கட்சிகள் இங்கே இருந்தாலும்கூட, நாம் அவற்றை எல்லாம் மறந்துவிட்டு, ஒரே



கருத்தோடு பொதுப் பிரச்சினையிலே இன்றைக்கு நாம் குழுமியிருக்கின்றோம். காலையிலே நான் இங்கே படித்த அறிக்கையானாலும், யாரோ வெளியிட்ட அறிக்கையானாலும், அது யாரையோ புண்படுத்தியிருந்தாலும், அதைத் திருப்பிச் சொன்னதை அவர்களால் தாங்க முடியாவிட்டாலும்கூட, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றைக்கு நம்முடைய மணி அவர்கள், மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொன்னார். இன்றைக்கும் நிருபர்கள் கூட்டத்திலே நம்முடைய டாக்டர் ராமதாஸ் அய்யா அவர்கள், மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். நான், 'நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது?' என்கின்ற அகம்பாவம் பிடித்தவன் அல்லன் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். நாடு நன்றாக இருக்க, நம்முடைய மக்கள் எல்லாம் மகிழ்ச்சியாக இருக்க, நமக்குள்ளே வருகின்ற சின்ன சின்ன சச்சரவுகள் எதிரிகளுக்கு இடம் கொடுக்கக்கூடியதாக ஆகிவிடக்கூடாது என்கின்ற உள்ளம் வாய்ந்தவன் நான் என்பதாலும், இதே உணர்வு நம்முடைய தோழமைக் கட்சிகளில் உள்ள எல்லாத் தலைவர்களுக்கும் உண்டு என்பதை உணர்ந்தவன் என்பதாலும், யாருடைய உள்ளத்திலும் சிறு கீறல் ஏற்படவும் நான் இடம் தர மாட்டேன். அப்படியே கீறல் ஏற்பட்டாலும்கூட, அந்தக் கீறல் தங்கத் தாம்பாளத்திலே ஏற்பட்ட கீறல்தான்; அதை உருக்கி ஒன்றாக்கிக்கொள்ள முடியும்; மண்பாண்டத்தில் ஏற்படுகின்ற கீறல் அல்ல; அது உடைந்தால் உடைந்ததுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்த உணர்வோடு, நாம் நம்முடைய நாட்டைக் காப்போம், மொழியைக் காப்போம், இனத்தைக் காப்போம், மரபைக் காப்போம், ஜனநாயகத்தைக் காப்போம், அந்த உணர்வை உள்ளத்திலே ஏந்தி, வெளிநாடு செல்லுகின்ற தாங்கள் வெற்றியோடு திரும்பி வாருங்கள் என்று வாழ்த்தி வழியனுப்புகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 2–25*

## 10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களே, அவை முன்னவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களே, எல்லோருக்கும் வணக்கம்.

"According to Parliamentary convention, the Speaker does not speak." But, this is the only occasion when the Speaker can speak. இதுவரையில் நீங்கள் பேசினீர்கள். நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இன்று நான் பேசுவதை நீங்கள் எல்லோரும் கேட்க வேண்டும்.

தமிழக வரலாற்றிலேயே 11 முறை சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஐந்தாவது முறையாக முதலமைச்சராக அரியாசனத்தில் வீற்றிருக்கும் பெருமைக்குரிய சாதனையைப் புரிந்த, முத்தமிழ் அறிஞர், தமிழகத்தைத் தலைநிமிரச் செய்து கொண்டிருக்கும் வித்தகர், ஜனநாயகக் காவலர், டாக்டர் கலைஞர் அவர்களோடு இணைந்து பணியாற்றக்கூடிய பெரும் வாய்ப்பை உறுப்பினர்களாகிய நாம் எல்லோரும் பெற்றிருக்கிறோம் என்ற பெருமிதத்துடனும், நன்றியுணர்ச்சியுடனும், உங்களுடன் சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு விவசாயக் குடும்பத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, வழக்கறிஞராகப் பணியைத் தொடங்கிய எனக்கு, முகவரி கொடுத்து, மாவட்டச் செயலாளராக பணியாற்றும் வாய்ப்பினைக் கொடுத்து, பின்னர் என்னை இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி, சிறப்புக்கும் பெருமைக்கும் உரிய அறிஞர் பெருமக்கள் எல்லாம் அமர்ந்து சிறப்பாகப் பணியாற்றிய இந்த மகத்துவம் மிக்க பேரவைத் தலைவர் பதவியை எனக்கு அளித்து, தற்போது நைஜீரிய நாட்டில் நடைபெறவுள்ள காமன்வெல்த் பாராளுமன்ற சங்க மாநாட்டில் பங்குபெறும் ஒரு அரிய வாய்ப்பினையும் எனக்குக் கொடுத்து, என்னை இந்தப் பெருமைமிக்க நாற்காலியில் அமர்த்தி, அழகு பார்க்கும், நான் என்றென்றும் வணங்கும் தலைவர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களுக்கு, நானும் என் குடும்பத்தாரும், என்னுடைய வாரிசுகளும், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழ்நாள் முழுக்க நன்றியோடு எண்ணிப் பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர், 17-05-2006 அன்று தொடங்கி 31-05-2006 வரை 9 நாட்களும், இரண்டாவது கூட்டத் தொடர் 22-07-2006 அன்று தொடங்கி, இன்று (02-09-2006) வரை 31 நாட்களும் ஆக மொத்தம் 40 நாட்கள் நடைபெற்றுள்ளது. அவை நடைபெற்ற மொத்த நேரம் – 164 மணி 34 நிமிடம் (இன்று பிற்பகல் 1-30 மணி முடிய).





2001-ல் பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவை, இரண்டு கூட்டத் தொடர்களாகக் கூடி 32 நாட்கள் நடைபெற்றுள்ளது. மொத்தம் கூடிய நேரம் 153 மணி 15 நிமிடம்.

மேதகு ஆளுநர், 24-05-2006 அன்று ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 4 நாட்கள், 11 மணி 56 நிமிடம் விவாதம் நடைபெற்றது. பேசியவர்கள் 26 பேர். இதில் ஆளுங்கட்சியினர் 5 பேர், பேசிய நேரம் 2 மணி 10 நிமிடம். இதர கட்சியினர் 21 பேர், பேசிய நேரம் 9 மணி 46 நிமிடம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை 1 மணி 4 நிமிடம்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்கிய முதல் நாளன்று பிரதான எதிர்க்கட்சியினரது நடவடிக்கைகள் காரணமாக, அவைக் கூட்டத் தொடர் முழுவதும் அனைவரும் நீக்கி வைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சி உறுப்பினர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27-05-2006 அன்று விவாதத்தில் கலந்துகொண்டு, 9 நிமிடம் குறுக்கீடுகள் தவிர்த்து, 33 நிமிடம் உரையாற்றினார்.

## நிதி அலுவல்கள் :

மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள், 22-07-2006 அன்று தாக்கல் செய்த 2006-2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் 6 நாட்கள், 53 பேர், 22 மணி, 23 நிமிடம் உரையாற்றினார்கள். இதில் ஆளுங்கட்சியினர் 11 பேர், பேசிய நேரம் 3 மணி 28 நிமிடம். இதர கட்சியினர் 42 பேர், பேசிய நேரம் 18 மணி, 55 நிமிடம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை, 1 மணி 5 நிமிடம்.

பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க.வினர் 26-07-2006 அன்று 'நேரமில்லா நேரத்தின்போது' ஒரு பிரச்சினையை எழுப்பி, அதனையொட்டி வெளிநடப்புச் செய்துவிட்டு, பின்னர் பொது விவாதம் தொடங்கும்போது வந்து கலந்துகொண்டு, அக்கட்சி உறுப்பினர் ஒருவர், குறுக்கீடு தவிர்த்து 14 நிமிடம் பேசியுள்ளார். அன்றே அக்கட்சியின் இன்னோர் உறுப்பினர் குறுக்கீடு தவிர்த்து, 15 நிமிடங்கள் பேசிவிட்டு, தொடர்ந்து பேச வாய்ப்புத் தரவில்லையென்று கூறி, அக்கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்தில் 31-07-2006 அன்று கலந்துகொண்டு, 2 மணி நேரம் 7 நிமிடம் உரையாற்றியுள்ளார். இதில் குறுக்கீடுகள் 33 நிமிடம். இதுவரை இல்லாத அளவுக்கு மிகவும் அதிகமான நேரம் பேச அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

ஒவ்வொரு நாளும் விவாதத்தின்போது, மற்ற கட்சி உறுப்பினர்கள் உரைகளிலும், அமைச்சர்களின் உரைகளிலும் அவ்வப்போது விளக்கம கேட்டுப் பெறுவதற்கு, அ.இ.அ.தி.மு.க.-வின் சட்டமன்றத் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம், கொறடா திரு. கே.ஏ. செங்கோட்டையன் ஆகியோருக்கு, அவர்கள் கேட்கும்போதெல்லாம் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளன என்பதை அவர்களே மறுக்க முடியாது.

**மானியக் கோரிக்கைகள் :**

1-8-2006 முதல் மொத்தமுள்ள 51 மானியக் கோரிக்கைகளும், ஒன்றுகூட 'கில்லட்டின்' என்றழைக்கப்படும் விவாத வெட்டு செய்யப்படாமல், பேரவையில் விவாதித்து நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதில் மொத்தம் 23 நாட்கள், 180 பேர், விவாதத்தில் பங்கேற்றுள்ளனர். பேசிய நேரம் 49 மணி 10 நிமிடம். இதில் ஆளுங்கட்சியினர் 33 பேர், பேசிய நேரம் 8 மணி 29 நிமிடம். இதர கட்சியினர் 147 பேர் பேசிய நேரம் 40 மணி 41 நிமிடம். மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் 19 மணி 42 நிமிடம்.

பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க.-விலிருந்து 32 பேர் உரையாற்றியுள்ளனர். மொத்த நேரம் 12 மணி 16 நிமிடங்கள். ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் பேசிய நேரம் 8 மணி 29 நிமிடங்கள்.

பிற்பகல் 2-30

ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்டம் ஆகிய பொது விவாதங்களின்மீதும், மானியக் கோரிக்கைகள் விவாதங்களின்மீதும் பங்கேற்றோரின் விவரம்; தி.மு.க. சார்பாக, 49 பேர் பேசியிருக்கிறார்கள். மொத்த நேரம் 14 மணி 7 நிமிடம். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் 43 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 19 மணி 29 நிமிடம். இந்திய தேசிய காங்கிரஸ் 50 உறுப்பினர்கள்





பேசியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 17 மணி 12 நிமிடம். பா.ம.க.-வில் பேசிய உறுப்பினர்கள் 32 பேர் எடுத்துக்கொண்ட நேரம் 11 மணி 29 நிமிடம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 27 பேர் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 6 மணி 32 நிமிடம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, 26 உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 6 மணி 59 நிமிடம். ம.தி.மு.க. சார்பில் பேசியவர்கள் 14 பேர். எடுத்துக்கொண்ட நேரம், 3 மணி 23 நிமிடம். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாகப் பேசியது 9 தடவை. அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 2 மணி 33 நிமிடம். தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர் 6 தடவை பேசியிருக்கிறார். அவர் எடுத்துக்கொண்ட நேரம் 1 மணி 13 நிமிடம். சுயேட்சை உறுப்பினர் இரண்டு தடவை பேசியிருக்கிறார். அவர் எடுத்துக்கொண்ட நேரம் 21 நிமிடம். நியமனம், ஓர் உறுப்பினர். பேசியிருப்பது 11 நிமிடம். மொத்தம் 259 தடவை உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம் 83 மணி 29 நிமிடம்.

ஒரே உறுப்பினர் மூன்று விவாதங்களில் பல மானியக் கோரிக்கைகளில் உரையாற்றியிருக்கலாம். ஆகவே, ஒருவாது பெயரே பலமுறை சேர்க்கப்பட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. அனைத்துக் கட்சிகளுக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி, சமமாக வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்பது மேற்குறிப்பிட்ட விவரங்களிலிருந்து தெளிவாக விளங்கும்.

பொதுவாக, இரு உறுப்பினர்களுக்கு, பிரதான எதிர்க்கட்சியிலிருந்து அன்றாடம் உரையாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களே வெளிநடப்புச் செய்துவிட்டு, மீண்டும் அவைக்கு வராமல் போன நாட்களில்தான் அவர்கள் உரையாற்றவில்லை. அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்ததையொட்டி, அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்ட அன்றுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் திரும்ப அழைக்கப்பட்டு இருந்ததையும் நீங்கள் அனைவரும் நேரில் பார்த்தீர்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகளுக்கு எந்த அளவிற்கு மதிப்பு அளிக்கிறார் என்பதை, நாள்தோறும் விவாதத்தில் கலந்துகொண்டு உடனுக்குடன் பதிலளித்து, அவர்களது முக்கியமான கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருப்பதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொள்ள முடியும்.

[பேரவைத் தலைவர்] [2006 செப்டம்பர் 2

தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்குப் பதிலளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சியினர் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களில் உள்ள கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அறிவிப்புச் செய்ததை அனைவரும் அறிவோம். பிரதான எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள், திரு. டி. ஜெயக்குமார், திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. சி. சண்முகவேலு, திருமதி செல்வி இராமஜெயம், திருமதி மு. சந்திரா ஆகியோர் அளித்த வெட்டுத் தீர்மானங்களிலுள்ள கோரிக்கைகளை ஏற்று அவர் அறிவித்த அறிவிப்புகள், அவர் எந்தவித பாரபட்சமுமின்றி, அனைத்துக் கட்சியினரையும் சமமாக மதித்துச் செயல்படுகிறார் என்பதை நிரூபித்துக்கொண்டு இருக்கின்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்றுவரை 104 முறை, 6 மணி 15 நிமிடம் உரையாற்றியுள்ளார்.

**வெட்டுத் தீர்மானங்கள்:**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | 9,458 |
| அனுமதிக்கப்பெற்றவை | 8,949 |
| அவையில் முன் மொழியப்பெற்றவை | 2,241 |

**வினாக்கள்-விடைகள்:**

17-5-2006-ல் இப்பேரவைக் கூட்டத் தொடர் தொடங்கியது முதல் 30-8-2006 வரை உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்று ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் 14,005. அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 144. அனுமதிக்கப்பெற்றவை 10,984. உடுக்குறியிட்டவை 3,206. உடுக்குறியிடாதவை 3,405. குறுகிய கால வினா 18. உடுக்குறியிட்ட வினாக்கள், அவையில் விடையளிக்கப்பட்டவை 146. மொத்த துணை வினாக்கள் 546. வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற நாட்கள் 18. வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் 5. நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் 34 நிமிடம்.

பிற்பகல் 2-35

**உடுக்குறியிடாத வினாக்கள்:**

அவைமுன் வைக்கப்பெற்றவை – 200



2006 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

**கவன ஈர்ப்புகள்:**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | – | 658 |
| கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை | – | 219 |
| வினாவாக மாற்றி அனுமதிக்கப்பெற்றவை | – | 200 |
| அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை | – | 15 |

**ஒத்திவைப்புத் தீர்மானம்:**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | – | 203 |
| கவன ஈர்ப்பாக மாற்றி அனுமதிக்கப்பெற்றவை | – | 29 |
| வினாக்களாக மாற்றி அனுமதிக்கப்பெற்றவை | – | 9 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்:**

| | | |
|---|---|---|
| எழுப்பப்பெற்றவை | – | 12 |
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை | – | 6 |
| அனுமதி மறுக்கப்பெற்றவை | – | 6 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள்:**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | – | 23 |
| நிறைவேற்றப்பெற்றவை | – | 23 |

**விதி 110-ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்:**

| | | |
|---|---|---|
| மொத்தம் அளிக்கப்பெற்றவை | – | 14 |
| மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை | – | 6 |

**அரசினர் தனித் தீர்மானம்:**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | – | 1 |
| நிறைவேற்றப்பெற்றவை | – | 1 |

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:**

| | | |
|---|---|---|
| (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும் | – | 56 |
| (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | – | 118 |

[பேரவைத் தலைவர்] [2006 செப்டம்பர் 2

**உறுப்பினர்கள் வருகை:**

உறுப்பினர்கள் அவைக்கு வந்து, வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பமிட்டதன் அடிப்படையில், பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இடாத உறுப்பினர்களின் பெயர்கள் இதில் இடம்பெறாது. 19-5-2006 அன்றுமுதல், இன்றுவரை அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகைபுரிந்த உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:

1. செல்வி ஆ. அங்கையற்கண்ணி
2. திரு. மு. அப்பாவு
3. திரு. அருள் அன்பரசு
4. திரு. எம். அன்பழகன்
5. திரு. கி. ஆறுமுகம்
6. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
7. திரு. ஆ. இராஜேந்திரன்
8. திரு. இரா. இராஜேந்திரன்
9. திரு. சபா. இராஜேந்திரன்
10. திரு. தா. உதயசூரியன்
11. திரு. கே. உலகநாதன்
12. திரு. கோ. எதிரொலி மணியன்
13. திரு. கோ. ஐயப்பன்
14. திரு. வே. கண்ணன்
15. திருமதி பெ. கமலாம்பாள்
16. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
17. திரு. ஆர். காந்தி
18. திரு. பெ. காமராஜ்



2006 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

19. திரு. வை. காவேரி
20. திரு. சி. கோவிந்தசாமி
21. திரு. அர சக்கரபாணி
22. திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்
23. திரு. வை. சிவபுண்ணியம்
24. திரு. ஆர். சிவானந்தம்
25. டாக்டர் இ.ஏ.பி. சிவாஜி
26. திரு. கு. சின்னதுரை
27. திரு. க. சுந்தர்
28. திரு. என்.கே.ஆர். சூரியகுமார்
29. திரு. டி. செங்குட்டுவன்
30. திரு. அ. சௌந்தரபாண்டியன் (லால்குடி)
31. திரு. சி. ஞானசேகரன்
32. திரு. மா. தண்டபாணி
33. திரு. அ. தமிழரசு
34. திரு. சி. தமிழ்செல்வன்
35. திரு. கே. திருநாவுக்கரசு
36. திரு. துரை சந்திரசேகரன்
37. டாக்டர் க. நெடுஞ்செழியன்
38. திரு. எம். பன்னீர்செல்வம்
39. திரு. வி.எஸ். பாபு
40. திரு. கு. பிச்சாண்டி
41. திருமதி பெ. பிரபாவதி

42. திரு. செ. புஷ்பராஜ்

43. திரு. மு.க. பெரியசாமி

44. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி

45. திரு. எஸ். மணி

46. திரு. ஜி.கே. மணி

47. திரு. வே. மாரிமுத்து

48. திரு. வ. முல்லைவேந்தன்

49. திரு. டி. மூர்த்தி

50. திரு. பி. மூர்த்தி

51. திரு. ப. ரங்கநாதன்

52. திரு. அ. ராஜன்

53. திரு. எஸ்.ஆர். இராஜா

54. திருமதி ஜி. லதா

55. திரு. விடியல் எஸ். சேகர்

56. திரு. எஸ்.கே. வேதரத்தினம்

57. திரு. இல. வேலுசாமி

58. திரு. தி. வேல்முருகன்

59. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

60. திரு. மு. ஜெகன்மூர்த்தி

61. திரு. எஸ்.பி. ஜெயராமன்

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், அன்றாடம் பேரவைக்கு வருகை புரிந்திருந்தாலும், அவர்கள் வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இடும் வழக்கம் இல்லை. எனவே, அவர்கள் பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.



**குழுக்கள்**

சட்டமன்றப் பேரவைக் குழுக்கள் 07-08-2006 அன்று அமைக்கப்பெற்று, அக்குழுக்கள் தங்களது பணிகளை ஆற்றத் தொடங்கிவிட்டன.

**பார்வையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பார்வையாளர்கள் மாடத்தில் (பேரவைத் தலைவர் மாடம் உட்பட) அனுமதிக்கப்பட்டவர்கள் | – | 27,969 பேர் |

**நூலகம்**

| | | |
|---|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | – | 383 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | – | 889 |

**நடவடிக்கைக் குறிப்புகள் (1-9-2006 வரை)**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர) | – | 716 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்த பக்கங்கள் | – | 7112 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | – | 1586 |
| தலைமைச் செயலகத்தின் துறைகளுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | – | 294 |

வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடர் ஆரம்பித்த நாளிலிருந்து, ஒவ்வொரு மானியக் கோரிக்கையின் பதிலுரையின்போதும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒப்புதலோடு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் மிக முக்கியமான ஒன்று, வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்காக, 50 ஆயிரம் நபர்களுக்குமேல், புதிய நியமனங்கள் செய்யப்படும் என்பது இதுவரை யாரும் கேட்டிராத, சாதனை அறிவிப்பாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

[பேரவைத் தலைவர்] [2006 செப்டம்பர் 2

பிற்பகல் 2–40

1957 முதல் சுமார் 50 ஆண்டுக் காலம் சட்டமன்றத்தில் உறுப்பினராக, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக, எதிர்க்கட்சித் தலைவராக, மாண்புமிகு முதலமைச்சராக விளங்கி, சற்றும் தளராத, சாதுர்யமான பதில்களை உடனுக்குடன் அளித்து, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்தினரின் விடிவிளக்காக விளங்கி, அவ்வப்போது அளித்த ஆலோசனைகள், அறிவிப்புகளின்மூலம் தமிழகத்தைத் தலைநிமிர்ந்து நடக்கச்செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவருடன் 1957–லேயிருந்து, சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, பேரவை முன்னவராக, பழுத்த அனுபவம் பெற்று விளங்கும் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு, எப்படி நன்றி சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் அவ்வப்போது நல்ல பல ஆலோசனைகளை தெரிவித்துவரும், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் ஏனைய அமைச்சர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. கோவை தங்கம்:** அதிக வினாக்கள் கொடுத்தவர்கள் பட்டியல் நீங்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்குப் பெருந்துணையாக இருந்துவரும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாற்றுத் தலைவர்களுக்கும், அரசுத் தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை நிகழ்ச்சிகளை தினமும் ஒளி, ஒலிப்பதிவு செய்து ஒளி, ஒலிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல உதவிய அகில இந்திய வானொலி, இந்தியத் தொலைக்காட்சி, இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 செப்டம்பர் 2] [பேரவைத் தலைவர்]

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்றிட உதவி புரிந்த பேரவைச் செயலாளர் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைக்கு அன்றாடம் மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் வருகைதந்து, விவாதங்களில் பங்கேற்க வேண்டியது அவர்களது கடமை. எனினும், அமைச்சர்களோ, உறுப்பினர்களோ, வந்ததிலிருந்து இறுதிவரை பேரவையில் அமர்ந்திருப்பதில்லை. ஆனால், முன்னாள் மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்களின் துணைவியார் திருமதி மல்லிகா அவர்களின் தாயாரும், தற்போதைய மத்திய அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்களின் பாட்டியுமான திருமதி பானுமதி அம்மாள் நேற்று நள்ளிரவு இயற்கை எய்தி, இன்று பிற்பகல் அவர் உடல் நல்லடக்கம் செய்யப்படவுள்ள நிலையில்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது சட்டமன்றக் கடமைக்கு முதலிடம் அளித்து, இன்று காலை 9-00 மணிக்கு முன்னரே என்னுடைய அறைக்கு வந்து, பின் அவைக்கு வந்து, விளக்கம் எல்லாம் அளித்துள்ளார் என்பதிலிருந்து, அவர் சட்டமன்றத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை நாடறியும்.

சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களிலும் காலை சுமார் 9–00 மணிக்கே, பேரவைத் தலைவரின் அறைக்கு வந்து, கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எழுப்ப விரும்பும் அலுவல்களைப்பற்றி அவர்களுடன் விவாதித்து, தகுந்த ஆலோசனைகள் வழங்கி, அவைக்கு வந்து, அவை தொடங்கிய 9–30 மணியிலிருந்து, அவைக் கூட்டம் முடியும்வரை அவையில் இருந்து, தேவைப்படும்போதெல்லாம் தக்க விளக்கங்கள் அளித்து, அவையை மிகவும் சுமுகமாக நடத்திட, எதிர்க்கட்சியினரையும் அரவணைத்து, சில சமயங்களில் ஆளுங்கட்சியினருக்கே உரிய அறிவுரைகளை வழங்கி, ஒரு ஜனநாயகவாதியாக, ஒரு முன்மாதிரியாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் மூதறிஞர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Referring to democracy, Anna said,

"Democracy is not a mere form of Government alone - it is an invitation to a new life - an experiment in the art of sharing responsibilities and benefits - an attempt to generate and co-ordinate the inherent energy in each individual for the common task. Hence, we cannot afford to waste a single talent, impoverish a single man or woman or allow a single individual to be stunted in growth or held under tyranny. So..... annihilate the forces that attempt at aggrandizement and tyranny, fight against caste and hypocrisy and enthrone human dignity."

*பேரறிஞர் அண்ணா ஜனநாயகம் குறித்து விளக்கி உரைத்ததாவது:*

*"ஜனநாயகம் ஒரு ஆட்சியின் அமைப்புமுறை மட்டுமே அல்ல; புதிய வாழ்வுக்கு அது ஓர் அழைப்பு – கடமைப் பொறுப்புகளையும், அதன் பயன்களையும் பங்கிட்டுக்கொள்ளும் கலையில், நிகழும் ஆய்வு; ஒவ்வொரு மனிதனிடமும் பொதிந்துள்ள ஆற்றலை, பொது நலனை வளர்த்திடும் வகையில், வெளிப்படச் செய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் செய்யும் முயற்சி. எனவே, எந்தத் தனி மனிதனின் ஆற்றலும் வீணாகக் கழிய இடந்தரவியலாது; எந்த ஆணையும், பெண்ணையும் பயனற்றவர்களாக்கவோ, தனியொருவனின் வளர்ச்சியைத் தடை செய்யவோ, எவரும் கொடுமைக்கு ஆட்பட்டுக் கிடக்கவோ, இடங்கொடுக்க முடியாது. எனவே, .. தன்னல ஆதிக்கத்தையும், கொடுமை இழைக்கும் சக்திகளையும் அடியோடு ஒழிப்பதுடன், சாதி வேற்றுமையையும், பிறப்பு உயர்வு பேசும் பித்தலாட்டத்தையும், எதிர்த்துப் போராடுவதன்மூலம், மானிடத்தின் மாண்பு மேலோங்கச் செய்திடப் பாடுபடவேண்டும்".*

*அறிஞர் அண்ணாவின் இந்த வேண்டுகோளை உங்கள் முன்வைத்து, நம் பண்பாட்டுக்கு ஏற்ப, சாதியற்ற சமுதாயமும், மதவேறுபாடு கருதாத உடன்பிறப்பு உரிமையும் தழைக்கும்வகையில், ஜனநாயக நெறி நின்று, தொடர்ந்து பணியாற்ற உறுதிகொள்ள வேண்டிக் கேட்டுக்கொண்டு, என் உரையினை முடித்துக் கொள்கிறேன். எல்லோருக்கும் நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*பிற்பகல் 2–45*

*இறுதியாக, 17–5–2006 முதல் 30–8–2006 வரை, உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வினாக்கள் – முதல் நான்கு நிலையில் உள்ள உறுபபினர்களின் விவரம்:*



*உறுப்பினர் பெயர் – திரு. கோவை தங்கம் – 2,936, (மேசையைத் தட்டும் ஒலி) அனுமதிக்கப்பட்ட வினாக்கள் 2,936. திரு. கோவை தங்கம்தான் first. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு – 807, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பா.ம.க. – 768, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, பா.ம.க. – 761.*

## 7. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"பேரவை விதி 25(1)–ன்கீழ், பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது*

*பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2–47 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.*

# 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. திருவாளர்கள் கிரோரிமால் காசிராம் பருப்பு வகை விற்பனையாளர் பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனைமீது செலுத்தத்தக்க மேல்வரி, கூடுதல் மேல்வரியை வசூலித்திருக்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டு 1-4-1992 முதல் 24-12-1992 வரையிலான காலத்திற்கு பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனை செய்ததற்கு செலுத்தத்தக்க மேல்வரி, கூடுதல் மேல்வரியினைக் குறைத்தது குறித்து, 28-6-2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அரசாணை (2டி) எண் 73-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

49. (i) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக்கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் பொருட்களை தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளுக்குள் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்மீது தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல், அத்தகைய பொருட்கள்மீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையைக் குறைப்பது குறித்தும்; (ii) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக் கொண்டுவருவது குறித்து நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல், அத்தகைய பொருட்களைக் கொண்டு வந்ததுமீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையினைக் குறைப்பது குறித்தும்; (iii) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், பொருட்களைத் தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக்





கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல் அத்தகைய பொருட்கள்மீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையினைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு மாநிலத்திற்குள் அவர் தயாரித்த ஏதேனும் பொருட்களின் மாநிலங்களுக்கிடையேயான விற்பனை வரியில் தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட நுழைவு வரியை, தொகை ஏதும் திருப்பிக் கொடுக்காமல் குறைக்கப்படும் வரியின் அளவு, தயாரிக்கப்படும் அத்தகைய பொருட்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது செலுத்தத்தக்க வரியில் 50 சதவிகிதத்திற்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டும், தயாரிக்கப்படும் அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் குறைக்கப்படும் வரியின் அளவு, தொகை ஏதும் திருப்பிக் கொடுக்காமல் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியில் 100 சதவிகிதம் வரையில் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு வரிக் குறைப்பு செய்தது குறித்தும்; (v) மாநிலத்தில் கடைசி கொள்முதல் முனையில் ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டுள்ள பழைய கழிவுத் தாளின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது 22-7-2006 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் யாதொரு வணிகரும் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், வரி ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றும் 22-7-2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (சி.1) துறையின் அரசாணை (நிலை) எண் 74-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொருட்களை உள்ளூர்ப் பகுதிகளுக்குள் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

50. 1999 ஆம் ஆண்டு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத் திறன் தொழில், வணிகம், சிறப்பார்வத் தொழில் மற்றும் வேலை மீதான வரி வசூலித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 18-1-2006 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு,

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 199- ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

51. 1996 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்களின் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, 1–2–2006 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/199- 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

52. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

53. 2004–2005 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

54. 2004–2005 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)



55. 2004–2005 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

56. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள அரசு மானியம் பெறும் ஸ்ரீகிருஷ்ணா தொடக்கப் பள்ளியில் 16–7–2004 ஆம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்து காரணமாக உயிரிழப்பு ஏற்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. கே. சம்பத் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

227437
சென்னை-600 008